
www.tamilarangam.net

# சமர்

யூலை-செப் & ஒக்.-டிசம்பர் 1999



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

மிகவும் உற்சாகத்துடனும், அத்துடன் மிகவும் தாமதத்துடனும் உங்கள் கரங்களில் சக்தியை தருகின்றோம். ஏப்ரல்~யூன் இதழுக்கும் இந்த இதழுக்குமான இடைவெளியில் சக்தி பற்றியும், எமது முதலாவது வெளியீடான 'புது உலகம் எமை நோக்கி' பற்றியும் எல்லா மூலைகளிலும் பலராலும் பாராட்டப்பட்டும், பலமாக விமர்சிக்கப்பட்டும் இருப்பது எமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது. பல புதிய பெண் எழுத்தாளர்கள் தொடர்ச்சியான தமது பங்களிப்பை வழங்கவும், ஏனைய பெண்களிடம் சக்தியை அறிமுகம் செய்வதற்கும் முன்வந்துள்ளனர். இது உற்சாகம் தருகிறது.

தோழிகட்கு

நாம் பல தடவைகள் முன்வைத்த கருத்தை மீண்டும் ஒரு தடவை உரத்துக் கூறுகின்றோம். பெண்கள் ஆண்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அத்துடன் ஆண்களை எதிரியாகவும் மதிப்பிடவில்லை என்பதுடன், ஆண்களின் ஆக்கங்களைப் பிரசுரிக்கக் கூடாது என்ற வரட்டுப் பிடிவாதமும் எமக்கு இல்லை. பெண்களின் எழுத்துக்களுக்கு முதலிடம் கொடுக்கிறோம், கொடுக்கப்படும். அத்துடன் இந்த ஆணாதிக்க சமூகத்திற்கு எதிராகவும் ஆண்மேலாதிக்கக் கருத்துக்களுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டிய கட்டாய நிலையில் ~பெண்களாகிய நாம்~ உள்ளோம் என்பதை நாம் புரிந்து கொண்டால் சரி. ஆண்களின் ஆக்கங்களை பிரசுரிக்க கூடாது என்று பல பெண்களினதும், ஆண்களினதும் விமர்சனங்கள் எம்மை வந்தடைந்துள்ளன. நாம் மீண்டும் கூறவிரும்புவது நாம் ஆண்களுக்கு எதிரானவர்கள் அல்லர். சமூக முரண்பாடுகளுக்கும், பிரச்சனைகளுக்கும், ஆணாதிக்கப் போக்குகளுக்கும், தனி ஆண் நபருக்கு தண்டனை வழங்குவதன் மூலம் முரண்பாடுகளைத் தீர்க்க முடியும் என்ற கொள்கை மீது எமக்கு நம்பிக்கையில்லை.

எதிர்வினைகளை எழுதும் ஆக்கதாரரின் விமர்சனங்கள் தனிப்பட்ட தாக்குதல்களாக இருக்குமாயின் சக்தி அதை பிரசுரிக்க மாட்டாள். அத்துடன் விமர்சகர்கள் சக்தியின் நோக்கத்தையும், இடஒதுக்கீட்டையும் கருத்தில் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*தொடர்ச்சி பக்.75 இல்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சக்தி**
**யூலை–செப்.**
**ஒக்.–டிசம்பர்**
**1999**
**பக்கங்கள் 76**

**பெண்ணியமும் சூழலியமும்**
அரங்கமல்லிகா -தமிழ்நாடு -

Arms to Fight
Arms to Protect


**ருவாந்தி நெரஞ்சலா**  **உடன் உரையாடல்**
சந்திப்பு: உமா -ஜேர்மனி -

**புது உலகம் எமை நோக்கி**  **நூல் மதிப்பீடு**
லக்ஷ்மி -பிரான்ஸ் -

**எனக்குள் பெய்யும் மழை**  **நூல் அறிமுகம்**
ரஞ்சி -சுவிஸ்-

**சுரயஹறன கினிகனி**  **சினிமா மதிப்பீடு**
கங்கா ஜமுனா -இலங்கை-

**நல்லதோர் வீணை செய்து...**
**குறும்பட**  **விமர்சன எதிர்வினை**
ஏ.ஜி.யோகராஜா -சுவிஸ்-

**பதிலற்ற பத்து ஆண்டுகள்**  **நினைவு அஞ்சலி**
சயந்தா-நோர்வே-

**செய்திச் சிதறல்கள்**
ஜயந்திமாலா -சுவிஸ்-

**வாசகர்**  **களம்**

**கவிதைகள்**

| | |
|---|---|
| **இது நானாகி** | உமையாள் -நோர்வே |
| **தலைப்பற்ற கவிதை** | சுகன் -பிரான்ஸ்- |
| **நட்சத்திரங்கள்** | சந்திரா ரவீந்திரன் -லண்டன்- |
| **மௌனம்** | நிதி கோமேதகம் |
| **ஒரு காற்புள்ளி** | இளைய அப்துல்லா -லண்டன்- |
| **இரைமீட்பு** | பிரதீபா தில்லைநாதன் -கனடா- |

**சிலப்பதிகாரம்** **சிறுகதை** உமா -ஜேர்மனி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*பெண்ணியமும் சூழலியமும்*



பேராசிரியர் அரங்க மல்லிகா, ஒரு தலித் பெண்ணியப் போராளி, பெண்ணியம் பற்றிய ஆய்வில் டாக்டர் பட்டம் பெற்றவர். கிராமங்கள் தோறும் பெண்களை விழிப்புணர்வு ஊட்டும் பணியில் –எவ்வித விளம்பரமும் இன்றி– தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். தலித் ஒருங்கிணைப்பை இடையறாது வலியுறுத்தி வருகின்ற இவர் சக்திக்கு எழுதிய சிறு கட்டுரை இது.

இயற்கையும் பெண்ணும் ஒன்றாகிய கருத்தாக்கம், கலாச்சாரம், மொழி மற்றும் வரலாறு மூலமாக தொடர்ந்து இருந்து வருகின்றது. பெண்கள் ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட எழுப்பிய குரல்கள் பெண்ணிய இயக்கமாக மலர்ந்தது. இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய மனிதன் அதை காப்பதற்குப் பதிலாக அழித்து வருவதனால் இயற்கைப் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வை மையமாகக் கொண்டு சுற்றுப் புறச் சூழலியல் மிளிர்ந்து வருகின்றது. இதனால் பெண்ணும், இயற்கையும் பாதுகாக்கப்பட வேண்டிய வர்கள் என்ற சிந்தனை 'பெண்ணியமும் சூழலியமும்' என்ற கட்டுரைக்கு அடித்தளமாக அமைகின்றது.

உற்பத்தித்திறன் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது. பொருளுற்பத்தியில் ஆணின் பங்கு அதிகம் இருப்பதுபோல, மனித மன உற்பத்தியில் பெண்ணின் பங்கு அதிகமிருக்கின்றது. இயற்கையை இந்த மண் தாங்குவது போல இந்த சமுதாயத்தைத் தாங்கும் மண்ணாக, நிலமாக பெண்ணின் உடல் உருவகப் படுத்தப் படுகின்றது.

மனோன்மணீயம் சுந்தரனார் கூட,
*"நீராடும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழிலொழுகும்*
*சீராரும் வதனமென திகழ்பரத கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்*
*தக்கசிறு பிறை நுதலும்..."*

என்று கூறுகின்றார். நீரையே ஆடையாக உடுத்திய நிலமடந்தை இந்த பாரதம் என்ற பொருள் கொள்ளப் படுகின்றது, கற்பிதம் கட்டப்பட்டுள்ளது. இயற்கை நீரின் ஆதாரம். நீர் இருந்தால்தான் இயற்கை செழிக்கும். மனிதனின் ஆதாரமும் நீர். பெண்ணின் கருப்பையில் வளரும் சிசுவுக்கு ஆதாரம் நீர். எனவே பெண்ணின் கருப்பை வளர் நிலமாகக் கருதப்படுகின்றது. இந்தக் குறியை (Sign) பெண்ணை அடக்கும் ஆணின் தந்தையாதிக்கக் குறிப்பானாகிய லிங்க மையம் (Phollo Centric) தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்றது. அதாவது பெண்ணின் கருப்பை ஆணின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசதிக்கு ஏற்ப கையாளப்படுகிறது. இந்த கருப்பை பெண்ணின் ஆளுகைக்கு உரியது இல்லை என்ற குறிப்பீட்டை (Signified) சமூகமயமாக்கி யிருக்கின்றது. இந்தப் பிண்ணனியை எண்ணித்தான் பிரெஞ்சுப் பெண்ணியவாதியான சிமோன் திபோவா பெண் போகப் பொருள் (Woman is an object) என்றும், பெண் பிறக்கவில்லை, பிறப்பிக்கப்படுகின்றாள் என்றும் கூறுகின்றார்.

இயற்கையை உருவாக்கும், சமுதாயத்தை உருவாக்கும் பெண்ணின் இருத்தலியல் இரண்டாம் தரமானதாகக் கருதப்படுவதால், இயற்கைக்கு மாறாகப் பெண் குரல் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதை சூழலியல் பெண்ணியம் (Eco Feminism) என பிரெஞ்சு பெண்ணியவாதிகள் அழைக்கின்றனர்.

1970 முதல் 1980 வரையில் சூழலியல் பெண்ணியம் பல்வேறுபட்ட பெண்ணிய வாதிகளாலும் (Feminist) சமாதான அமைப்புக்கள் (Peace Movement) சூழலியல் (Ecology) போன்ற துறையினரால் பேசப்பட்டன. இந்தப் பெண்ணியத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் பிரான்கோஸிஸ் டி யூபோனே (Francoise D'Eaubonne). சுற்றுப்புறச் சூழல் அழிவிற்கு எதிராக இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பாகவும் அது தொடர்பான செயல்பாட்டையும் விளக்கிக் கூறுவதுதான் இந்தப் பெண்ணியம். இது ஒவ்வொரு தனிநபரையும் பலப்படுத்துகின்றது, ஒருங்கிணைக்கின்றது.



குறிப்பாக ஆண்களின் ஆதிக்க உணர்வும் தந்தையாதிக்க மனோபாவமும் (Patriarchal Temperament) குடும்ப, சமூக, அரசியல் தளங்களில் அவர்களுக்கு அதிகாரத்தை வளர்த்துள்ளன. இதனால் ஆண் பெண்ணின் மீதான, உள, உடல் ரீதியிலான தாக்குதலில் ஈடுபடுதல் சமூக அங்கீகாரமாகி யுள்ளன. பெண்ணின் மீதான பாலியல் தாக்குதல்கள் அன்றாட தாக்குதலாக மாற இது காரணமாகின்றது.

## பெண்ணியமும் சூழலியமும்

இதன் காரணமாக பாலியல் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு பெண் தள்ளப்படுகின்றாள். எங்கெல்லாம் பெண்கள் இயற்கைக்கு மாறாக நடத்தப்படுகின்றார்களோ, எங்கெல்லாம் கொடுமைகள் நடத்தப்படுகின்றதோ அங்கெல்லாம் தந்தையாதிக்கம் பெண்களுக்கு எதிராகச் செயல்படுத்தப் படுகின்றது. இதனால் உலகமயமாதல் சந்தையில் தொழில் ரீதியிலான முன்னேற்றம் கண்டாலும் பெண்களைப் பெண்களாக நடத்துவதில் மதிப்பதில் மூன்றாம் உலக நாடுகளின் நிலையினும் கீழாகிறோம். இந் நிலையிலிருந்து மாற்றம் பெறவேண்டும் என்ற பின்-நவீனத்துவத்தின் (Post-Modernism) தாக்கமாக சூழலியல் பெண்ணியம் உருப்பெறுகின்றது.

www.tamilarangam.net



ஏனென்றால், நவீன சிந்தனைகளின் வளர்ச்சியாக, அதன் தாக்கம் பெண்ணியத்தை சமூக இயக்கமாக முன்னெடுத்துச் செல்கின்றது. இது பெண் மீதான பழைய அணுகுமுறையை, பெண் மீதான பழைய அடையாளத்தை (Image) வேறுபாட்டை (Feminist Difference) முன்வைக்கின்றது. வேறுபாடு என்பது வகுப்பு (Class), இனம் (Race), பாலியல் (Sexuality) மற்றும் மதம் ஆகியவற்றில் ஆண்xபெண் மீதான குறிப்பான்களின் குறிப்பீடுகளாகப் பெண்ணியவாதிகளை கருதுகின்றனர். இந்த வேறுபாட்டுக் கொள்கையைச் சிந்தித்தவர்கள் பின்-அமைப்பியல் வாதியான டெரிடா(Derida), லக்கான் (Lacan), பூக்கோ (Foucoult), டிலியூஸ் (Deluz), இரிகாரே (Irigaray) மற்றும் கிறிஸ்தா (Kristana) ஆகியோர். இவர்கள் வளர்த்த பெண்ணிய மொழியியல் சிந்தனைகள் தீவிரமடைந்து இரண்டாம் அலைப் பெண்ணியமாக உருப்பெற்றது. கருப்பர் அதிகாரத்தை (Power of Black) இலக்கியமாக்கயது.

மூன்றாம் உலக நாடுகளின் விடுதலையை, லெஸ்பியன் பெண்ணியத்தை, சுற்றுப்புறச் சூழல் பெண்ணியத்தை வளர்த்தது. இவை மொழி, தன்னிலை (Subject) நனவிலி (Unconscious)உடல், சொல்லாடல் (Discouse) மற்றும் அதிகாரம் (Power) மூலமாக பின்-நவீனத்துவத்தை வேர்கொள்ளச் செய்தன. சுற்றுச்புறச் சூழல் பெண்ணியம் பெண்ணின் உடல் மீதான தந்தையாதிக்க ஒடுக்குமுறையை மேற்குறிப்பிட்ட பின்-நவீனத்துவ சிந்தனையின் மூலமாக விரிவாகப் பேசுகின்றது. ஒடுக்குமுறை பாலியம் (Gender) மூலமாக பெண்ணின் உடல், மனம் ஆகிய இரண்டையும் பாதிப்பதால் பெண்ணின் உடல் மீதான, மனம் மீதான அக்கறையை முக்கியப்படுத்த விழிப்புணர்வு தேவை எனப் பேசுகின்றது. இதற்கு முன்னுதாரணமாக 1984 இல் நடந்த போபால் விஷவாயுவினால் பாதிக்கப் பட்டவர் அதிகம். 3000 பேர் உயிரிழந்தனர். அந்த விஷக் கசிவின் தாக்கம் இன்றைக்கும் கருத்தரிக்கும் தாய்மார்களின் உடலை பெரிதும் பாதித்து வருகின்றது. இதற்கு நஷ்டஈடாக இதுவரை எந்தவித உதவித்தொகையும் வழங்கப்படவில்லை. அவர்கள் ஆரோக்கியமாக வாழ அடிப்படை தேவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை.

பெண்கள் அணுசக்தி உற்பத்திக்கு எதிராக போராட்டம் தொடங்கவில்லை என்றாலும், அவர்கள் இயற்கைக்கு எதிராக நிகழ்த்தப்படும் அணுசக்தி தொழில் நுட்ப உற்பத்தி -அதனால் அதிகம் பாதிக்கப்படும்- பெண்களுக்கு எதிரான பின்விளைவைத் தருவதை எதிர்க்கின்றார்கள். 1986 இல் செர்னோபில் இல் நடந்த அணு உலை வெடிப்புச் சிதறலையும் இதற்கு ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். இந்தச் சம்பவங்கள் வளரும் சந்ததியினரின் உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கக் கூடியதாக இருப்பதால்தான் சூழலியல் பெண்ணியத்தை ஒரு கோட்பாடாக பெண்ணியவாதிகள் முன்வைக்கின்றனர். முதலாளித்துவ, ஆணாதிக்க, நாட்டு உற்பத்தியை மட்டும் கவனத்தில்கொண்டு செயல்படும் ஆண்மனோபாவத்தை தீவிரமாக எதிர்க்கின்றனர்.

- நன்றி -

1. **Sandra Kemp & Judith Squires(Ed), Oxford University Press,1997**
2. நெடுஞ்செழியன் குழுவினர், சூழலியல் ஓர் அறிமுகம், சவுத் ஏசியன் புக்ஸ்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Arms to Fight
# Arms to Protect

இவ் ஆய்வுக் கட்டுரைக்கான தகவல் சேகரிப்புப் பணியில் சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடன் நொயிலின் மெண்டிஸ், ரெஜிகா ராமலிங்கம், மனோ பெரேரா, பிரான்சிஸ்கா டீ சில்வா, பரா கனிபா, மனில் ஜெயந்தி ஆகியோரும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் 'பெண்களும் அபிவிருத்தியும்' என்ற நிறுவனத்தின் நிலையப் பொறுப்பாளர் சரோஜா சிவசந்திரன், சுபத்ரா சண்முகம், மாலினி சண்முகம் ஆகியோரும் தகவல்களைச் சேகரித்து இவ் ஆய்வுக் கட்டுரையைத் தயாரிப்பதற்கு தமது ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. போராட்டச் சூழலினால் தமிழ், முஸ்லிம், சிங்கள பெண்கள் எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ~அவசியமும் தேவையும் கருதி~ Arms to Fight; Arms to Protect என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகியவற்றை தமிழில் தருகின்றோம்.
இதன் முதல் பகுதி சென்ற இதழில் வெளியாகியிருந்தது.
நன்றி Arms to Fight; Arms to Protect




## பிரச்சினைகள் பற்றி மனம் திறந்து பெண்கள்...

**கோகிலா 43**

**இடம்பெயர்ந்த தமிழ்ப் பாடசாலை ஒன்றின் தலைமையாசிரியர்.**

யாழ்ப்பாணத்திருந்து நாங்கள் இடம்பெயர்ந்துள்ளோம். நாங்கள் அமைதியான வாழ்க்கையை இழந்துவிட்டோம். இது ஒரு பெரிய இழப்பு. நான் என்னுடைய வீட்டை இழந்து விட்டேன். நிலபுலன்களை இழந்து விட்டேன். அவை பற்றிய நினைவுகள் மட்டுமே உள்ளன. நாங்கள் இடம்பெயர்ந்து வந்தபோது மனித உறவுகளைத் தவிர வேறெதையும் எங்களுடன் எடுத்துக் கொண்டுவர முடியவில்லை. பெறுமதியான புத்தகச் சேகரிப்பை இழந்து விட்டேன். இவற்றையெல்லாம் நினைக்கும் போது கவலைதான். அகதிமுகாமில் இருப்பவர்களோடு ஒப்பிடுகையில் நாம் திருப்தியாக இருக்கிறோம்.

www.tamilarangam.net



## போராட்டத்திற்கான பங்களிப்பு

நான் நினைக்கிறேன், கொழும்பிலும் வெளிநாடுகளிலும் நல்ல வாழ்க்கை தேடுவதை விடுத்து போராட்டத்தில் பங்குகொள்ள வேண்டும் என. வறுமையான குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு உழைப்பது கூட போராட்டத்திற்கான பங்களிப்புத் தான். நான் அதிபராகப் பொறுப்பேற்ற போது 3 இடம்பெயர்ந்த பாடசாலைகள் ஒரு கட்டடத்தில் இயங்கி வந்தன. ஆனால் நான் என்னுடைய பாடசாலையை தனியொரு கட்டடத்திற்குள் இயங்கக் கூடியவாறு பிரித்துக் கொண்டுள்ளேன்.

இதுவரை எனது இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் 2 நாவல்களும் வெளிவந்துள்ளன. இன்னும் இரண்டு புத்தகங்கள் வெளிவரவுள்ளன. இங்கு பேப்பர் தட்டுப்பாடு அமுலில் இருக்கிறது. நான் உளவியல் சம்பந்தமான ஆக்கங்களை எழுதிக் கொண்டிருக்கிறேன். இதன்மூலம் என்ன சொல்ல வருகிறேன் என்றால், மனிதன் மனிதனை மதிக்கப் பழக வேண்டும் என்பதைத்தான். எனது 'எரிதல்' என்ற சிறுகதை போர் பெண்களை எவ்வாறு உளவியல் ரீதியில் பாதித்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

## பெண்களின் நிலைமைகளில் மாற்றம்

போராட்டம் தொடங்குவதற்கு முன் எமது சமூகம் தாராள மனப்பான்மை அற்றதாகவும், இணக்கமில்லாததாகவும் இருந்தது. ஆண்களுக்கு மத்தியில் பெண்களுக்கு எந்த இடமும் இருக்கவில்லை. அவர்கள் தலைநிமிர்ந்து கதைத்ததில்லை. அவர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் என்று யார் நினைத்தார்கள். ஆனால் கடந்த பத்து வருடங்களாக பாரிய மாற்றங்கள். இளம் பெண்கள் போர்முனையில் ஆண்களுடன் சரிசமமாக நின்று போரிடுகிறார்கள். காலத்தின் தேவையால் இப்போது உலகெங்கும் பெண்கள் ஆயுதப் போராட்டங்களில் பங்குகொள்கின்றனர். ஏன் எங்களுடைய பெண்கள் கலந்து கொள்ளக்கூடாது. வெறிபிடித்த இராணுவத்தினால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு பயந்து சாவதற்குப் பதிலாக எங்களுடைய ஆயுதங்களுடன் அவற்றை எதிர்நோக்குவது ஆறுதலானது.

எம்முடைய பெண்கள் தங்களால் பல விடயங்களைச் செய்யமுடியும் என்பதை நிரூபித்துள்ளார்கள். இப்போது இரவு நேரங்களில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். பயமின்றி வாகனங்கள் செலுத்தலாம். இப்போது ஆண்கள் காதலித்துவிட்டு பெண்களைக் கைவிடுவதற்கு பயப்படுகின்றார்கள். இது ஒரு பெரிய மாற்றம். பொலிஸ் வேலைக்கு பெண்கள் செல்கின்றனர். இது முன்பு இருக்கவில்லை. ஆண்களைப் போல அதிகமான பெண்களும் வேலையை இழந்துள்ளனர். பெண்கள் நிருபர்களாகவும், விற்பனையாளர்களாவும் சிறிய தொழில் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் போராடுகின்றனர். நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்களுடைய மன உறுதி இழப்புக்களுக்கு மத்தியில் அவர்கள் நாட்டை மட்டும் பாதுகாக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள பெண்கள் எல்லோரையும் பாதுகாக்கிறார்கள். சமூகத்தில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படவேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க்கிறார்கள். அது நிகழும் என்று நம்புகிறேன். சுதந்திரப் போராட்டம் ஒருபோதும் பிழையாவதில்லை. எங்களுக்கு நல்ல பிரகாசமான எதிர்காலம் உண்டு. ஆனால் எப்போது என்பதுதான் கேள்வியாகவுள்ளது.

**வினோதினி**
**தமிழ்ப் போராளி**
**யாழ்நகர்**

நான் ஒரு ஆயுள்வேத மருத்துவராக வேலைசெய்து கொண்டிருந்தேன். ஏன் போராட்டத்தில் பங்குபற்றினேன். நாட்டின் மீதுள்ள பற்றினாலா? அப்படியொரு தேவையில்லை. மக்கள் கஸ்டப்படுகிறார்கள். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோம். இதனால் ஒவ்வொரு தமிழரும் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும். நான் எனது நாட்டினதும் மக்களதும் சுதந்திரத்திற்காக காயமடைந்த போராளிகளை கவனித்துக் கொள்வதோடு அரசியல் பிரச்சாரத்திலும் ஈடுபடுகிறேன். சமூகசேவையில் ஈடுபடுகிறேன். நான் முழு நேரத்தையும் அமைப்புக்காகச் செலவிடு வதை குடும்பத்தினர் விரும்பவில்லை. என்னுடைய மகள் போதிய கவனிப்பு இன்றி அலட்சியப்படுத்தப்படுவதாக நினைக்கிறார்கள். என்னால் உதவ முடியாமல் இருக்கிறது. நான் அமைப்பு வேலைகளில் ஈடுபடுவதை விரும்புகிறேன்.

துணைவர்களை இழந்த பெண்கள், திருமணமாகாத பெண்கள் ஆகியோரின் எண்ணிக்கை யுத்தத்தினால் அதிகரிப்பது தவிர்க்க இயலாதது. பெண்கள் தங்களுடைய சொந்தக் கால்களில் நிற்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் யுத்தத்தினால் பெரிதும் துன்புறுகின்றனர். எங்களால் இது தவிர்க்க இயலாதது. எதிரிகளிடம் இருந்து எங்கள் நாட்டையும் மக்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். இந்த இலட்சியத்திற்காக வாழ்வில் சிலவற்றை இழக்கத்தான் வேண்டும். எங்களுக்கு இந்த நாட்டில் வசிப்பதற்கான உரிமையுண்டு. அதை யாரும் மறுக்க முடியாது.

**அனு**
**யாழ் பல்கலைக் கழக மாணவி**

என்னுடைய இலட்சியம் ஒரு மருத்துவராக வருவது. ஆனால் அது என்னால் முடியவில்லை. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான புள்ளிகள் பிரத்தியேகமாக தமிழர்களுக்கு அதிகரித்துள்ளது. க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் பின் 3 வருடங்கள் பல்கலைக்கழக அனுமதிக்குக் காத்திருக்க வேண்டும். நான் என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

தமிழ் மாணவர்கள் இங்குள்ள கல்வி முறையினால் பின்தங்கியுள்ளார்கள். நான் இதை முழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொரு மாணவருக்கும் தனது கல்வியைத் தொடர அனுமதியுண்டு. நான் எதிர்கால சந்ததியினரையிட்டு கவலைப் படுகிறேன். அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்துவதனால் கல்வி பாதிக்கப்படுகிறது.

www.tamilarangam.net



எனக்குத் தெரிந்த பல மாணவர்கள் விரக்தி நிலையில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள்.

அரசியல்வாதிகளுக்கு சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதியளவு காலம் வழங்கியிருந்தோம். ஆனால் அவர்கள் தவறிவிட்டார்கள். இந்த யுத்தம் ஒரு முடிவைக் காணவேண்டும். தமிழ்ச் சமூகம் சிங்கள அரசியல்வாதிகளால் எவ்வளவு காலம் வெறுக்கப்பட்டு வந்தது என்று எனக்குத் தெரியும். கடந்த 1958 -1983 வரை நடைபெற்ற கலவரங்களில் அப்பாவித் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

## அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே

என்னுடைய அம்மாவின் வருமானம் எனது படிப்புச் செலவுக்குப் போதியதாக இருந்தது. ஆனால் அவரால் சீதனத்திற்கோ வேறு எதற்குமோ ஒரு சதமும் சேமிக்க முடியவில்லை. சீதனமுறை இன்னமும் நடைமுறையில் உள்ளது. மக்களின் மனநிலை மாறவேண்டும். சட்டங்களை உருவாக்குவதன் மூலம் மட்டும் சமுதாய அமைப்பு முறையை மாற்றமுடியாது.

கல்யாணத்தைப் பற்றி யோசிக்கவே நேரமில்லை. எங்களுக்கு அது கஸ்டமாக இருக்கப்போகிறது. பல ஆண்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு வாழ்கிறார்கள். இங்கு பெருந்தொகையான ஆண்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்கிறார்கள். இந்தப் பகுதியில் தற்போது பல திருமணமாகாத பெண்கள் இருக்கிறார்கள். பெண்கள் பெரிதும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குடும்பத்தை பொருளாதார ரீதியல் கவனித்துக் கொள்ளும் பொறுப்புக்கும் உள்ளாகியுள்ளார்கள். நாங்கள் தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

## யுத்த நினைவுகள்

நாங்கள் ஊர்காவற்துறையில் வசித்தோம். 1991 இல் இலங்கை இராணுவத்தினர் அந்த இடத்தைக் கைப்பற்றிய போது நாங்கள் இருந்த இடத்தை விட்டு உடைமைகள் அனைத்தையும் கைவிட்டு இளம் பெண்களாகிய நாங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக ஓடிவந்தோம். உங்களுக்குத் தெரியும் தானே இராணுவம் பெண்களுடன் எப்படி நடந்து கொள்ளும் என்று. நாங்கள் ஓடி வந்த பாதையில் விமானங்கள் குண்டுகளைப் போட்டபடி பறந்தது. நாங்கள் அழுதழுது ஓடிவந்தோம். வழியில் சில குழந்தைகள் காயமடைந்து கிடந்தார்கள். அவர்களுக்கு உதவி தேவைப்பட்டது. நாங்கள் குண்டுவீச்சு விமானங்களுக்குப் பயந்து அவர்களைக் கவனிக்காமல் ஓடி வந்தோம். அது இப்பவும் எனக்குக் கவலையைத் தருகிறது. சிலவேளை இந்த சுதந்திரப் போராட்டத்தில் இணைந்து விடுவோமா என்று யோசிப்பதுண்டு. நாங்கள் வாழ்க்கையில் மனிதர்களின் இழப்புகளையும் அழிவுகளையும் மட்டும் பார்த்திருக்கிறோம். நாம் அதற்குப் பழகிவிட்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுபவங்கள் எமக்கு உறுதியைத் தந்துள்ளது. எமது இளம் பெண்கள் போராட்டத்தில் இணைந்து கொள்ள விரும்புகிறார்கள்.

**மனோராணி**

**இவருடைய மகன் ஒரு நிருபர். ஜே.வி.பி பிரச்சாரத்தின்போது சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். கலவரத் தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் அரசு சார்பற்ற குடும்பநல நிலையத்தினூடாக புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டு வருகின்றவர்.**

எனக்கு இந்தக் கொடுமைகள் நிகழ்ந்தபோது அவர்கள் என்னுடைய வீட்டிலிருந்து எல்லாவற்றையும் எடுத்து விட்டார்கள். எல்லாவற்றையும் இழந்தேன். ஒரு வருடம் இருந்தேன். வேறொரு நாட்டில் வசிப்பதனையும் நான் விரும்பவில்லை. யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் யாருமே எனக்கு இந்தக் கொடுமை நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. என்னுடைய இந்த நிலைமை யினால் நான் ஒரு வருடம் வெளிநாடு சென்றிருந்தேன். வேறொரு நாட்டில் வசிப்பதை விரும்பவில்லை. ஆனால் என்னை எனது நாட்டிலிருந்து வெளியேற்ற யாருக்கும் உரிமை இல்லை.

நான் திரும்பி வந்து என்னுடைய வழமையான வாழ்க்கை க்குத் திரும்பியபோது, எனக்கே இவ்வளவு கஸ்டமாக இருக்கிறதென்றால் குறைந்த தொழில் நிலைமையிலுள்ள பெண்களின் நிலைமை எப்படி இருக்கும். கிராமங்களில் பெரும்பாலான பெண்கள் கொஞ்சம் நெல்வயல்கள் வைத்திருந்தனர். நாங்களே எங்களுக்குத் தேவையானதைத் தேடிக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் கவலையிலிருந்து விடுபட வேண்டும். அத்தோடு புதிய பொறுப்புக்களையும், நிலைமை களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பிரச்சினையைத் தீர்ப்பது போன்ற புதிய பொறுப்புக்களுக்கு தீர்வு காணவேண்டும்.

வீட்டு நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதற்கு கற்றுக் கொள்ளுதல்

ஒரு தடவை இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்று ஞாபகம் வருகிறது. பெண்கள் கூட்டம் முடியும்வரை கதைக்கவே இல்லை. நாங்கள் கேள்வி கேட்டபோது அதற்குரிய பதில்கள் மட்டுமே கிடைத்தன. 2,3 மாதங்களுக்கு பிறகும் நாங்கள் பார்வையிடச் சென்றபோது ஏற்பட்டிருந்த மாற்றம் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. அவர்கள் தங்களுக்கிடையே வருமானம், செயற்பாடுகள் பற்றி விவாதித்துக் கொண்டனர். தனித்தனியாகவும் கூட்டாகவும் முடிவுகளை எடுத்தனர். பல ஆலோசனைகளை முன்வைத்தனர்

தாய்மார்கள் கூட்டங்களுக்கு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வருவார்கள். அவர்கள் விளையாடுவதற்கு ஒழுங்குகள் செய்திருந்தோம். முதன்முதலில் பிள்ளைகள் வந்தபோது தங்களுடைய தாய்மார்களை குழப்பமான நிலையில் பார்த்துக் கொண்டிருந்தனர். தாய் இந்த குழப்பமான நிலையிலிருந்து சுமூகமான நிலைக்கு வந்தபோது பிள்ளைகள் தாமாகவே சுமுகமாகி விட்டார்கள். ஒரு நிலையான

www.tamilarangam.net



பொருளாதார வருமான நிலைமை தான் முதலில் தேவைப்படுகிறது. ஆரம்பிப்பதற்கு முதல் விவசாயம் செய்தாலும் குடும்பத்திற்கு போதியளவு வருமானமோ குழந்தைகளுக்கு உணவளிக்கவோ முடியாதபோது அவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். கவலைகள் அதிகரிக்கின்றது. கூட்டங்கூட்டமாக மனம் விட்டு கதைத்து ஆலோசனைகள் மாற்று முடிவுகள் மூலம் நம்பிக்கையும் ஏற்படுகிறது.

இராணுவத்தினரின் துணைவியருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்ட போதிலும் அதனை சரியான முறையில் பாவிப்பதற்கு உதவி தேவைப்படுகிறது. பணத்தைக் கொடுப்பது மட்டும் போதுமானதல்ல. ஒரு பெண் கிழங்குப் பயிர் செய்வதற்கு முடிவு செய்தால் பயிரிடுவதோடு போதியளவு தொழிலாளர்கள் தேவை கிடைக்காவிடில் பயனற்றதாகிவிடும். நாங்கள் உடைகள் தயாரிக்கலாம் என்று கூறுவார்கள். அவர்களால் தைக்கும் ஆடைகளை விற்கலாமா, சந்தையுண்டா என்பதை உறுதி செய்யவேண்டும். பெண்கள் அபிவிருத்தி அமைப்புக்களில் பதிவு செய்யப்பட வேண்டும். பண உதவிகள் பெறுவதற்கு பதிவு செய்யவேண்டும். கணக்குகள் எழுத வேண்டும். வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். காசோலைகள் வங்கிப் புத்தகங்கள் பதிவுகள் இவைகளுக்கு எல்லாம் அறிவும் தொடர்புகளுக்கு பயற்சியும் தேவை.

## ஒரே நிலைமையிலுள்ள பெண்கள் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளல்

தனிமையை உணராமல் இருப்பதற்கு குழுக்களாக சந்திப்பது நல்லது. முன்பு இருந்த அமைப்புக்களில் ஒன்றில் அரசினால் அல்லது ஜே.வி.பியினால் நடத்தப்பட்டது. ஜே.வி.பி திரும்ப வந்து குடும்பங்களுக்கு உதவியாக இருந்தது. பழையபடி சமூகத்தில் முக்கிய பாத்திரத்தைப் பெற்றனர். தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தங்களுடைய பிழைகள் அல்ல என்பதை எல்லோரும் அறிந்துள்ளார்கள்.

என்னுடைய முரண்பாடுகள் என்னவென்றால் அரசியல் வன்முறை காரணமாக அப்பாவித்தனமான பெண்களே பாதிக்கப்பட்டவர்களாவார்கள். இவர்கள் மூலம் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர். ஈராக் அல்லது எந்த யுத்தத்தை எடுத்துக் கொண்டாலும் பெண்கள் இந்த அழிவுகளைத் தாங்கிக் கொண்டு கவலைப்பட்டுத் தீர்க்க வேண்டும். அகதிகளை எடுத்துக் கொண்டால் ஒரு சிறிய இடத்தில் சாறியை தொங்கவிட்டு ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். வேலையில்லாமல் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் துணைவன் பிள்ளைகளுடன் சமாளிக்கின்றனர்.

இப்படியான காரணத்தினால் நான் நினைக்கிறேன், சமாதானப் பேச்சுக்களை ஊக்குவிப்பதில் பெண்கள் இருக்கவேண்டும். அவர்களால் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியும். இராணுவத்தினரின் துணைவியர் தாய்மார்களைப் பாருங்கள். ஜே.வி.பி பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்களைப் போல அவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எல்லாப் பெண்களும் துயரக் கண்ணீரை அனுபவித்துள்ளனர். எங்களுடைய குழுக்களில் அங்கம் வகிக்கும் பெண்கள் தமது முடிவுகளை தாமே எடுப்பதற்கு வழிகாட்டுவதே தவிர கற்பிப்பதில்லை. கிராமத்திலுள்ள பெண்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமாளிக்கக் கூடிய வலிமையைப் பெற்றிருக்கின்றனர். அகதிப் பெண்களை எடுத்துக் கொண்டால் சமூகப் பொருளாதார நிலைமையை கட்டி எழுப்புவதற்கான உந்துதல் மிகவும் உறுதியாகவுள்ளது. அத்துடன் வளர்ச்சியில் இவர்களுடைய பங்களிப்பு முக்கியமாகிறது.

அவர்கள் தங்கள் பழைய நிலைக்குத் திரும்பமாட்டார்கள். ஆனால் புதியவர்களாக மாறுவார்கள். ஏனெனில் குடும்ப அமைப்பில் இப் பெண்கள் ஓர் புதிய இடத்தைப் பெறுகின்றனர். கிராமத்திலுள்ள அமைப்புமுறை மிகவும் கடினமானது. உண்மை என்னவெனில் அவர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவுக்கு தேவையானவற்றை சம்பாதித்துக் கொள்வதோடு ஏனைய செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு யாரிலும் தங்கியிராமல், கிராமத்தில் தமக்கென்று ஓர் அந்தஸ்தினையும் ஒரு இடத்தினையும் பெறுகின்றனர். சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகின்றனர்.

## வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்

துப்பாக்கி முனையில் உன்னுடைய கைகளிலிருந்து உன்னுடைய குழந்தையை பறித்துக் கொண்டால் எப்படி? ஒருவரை இழப்பது மிகவும் கொடுமையானது. இது ஒருவர் நோயினால் இறப்பது போல அல்ல. இந்த மிகப் பயங்கரமான விடயம் வீடு கைப்பற்றப்பட்டு, துப்பாக்கி முனையில் எங்களுடைய பிள்ளை எங்களுடைய கரங்களிலிருந்து பறிக்கப்படுவது. இப்படியான கொடுமையான சம்பவத்திற்கு பிறகு எதையாவது தொடங்குவது என்பது சுலபமானதல்ல. நான் மெல்ல மெல்ல வேலை செய்யத் தொடங்கினேன். கொலை மிரட்டல்களை கவனத்தில் எடுத்துக் கொண்டால் வாழ்வது வசதியான வாழ்க்கையல்ல. என்னுடைய தொழிலை திரும்பத் தொடங்குவது எனக்குப் பலத்தையும் முழுமையையும் அளித்தது. நான் மருத்துவராக 40 வருடங்கள் பணிபுரிந்தேன். பெண்கள் அமைப்புகளுடன் பணிபுரிபவர்களுக்கு கவலைகள் இல்லை என்று நினைக்கிறார்கள். நான் கவலையாக இருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை.

நான் இயங்குகிறேன். கவலை உள்ளே இருக்கிறது. ஏதாவது பிழை நடந்தால் பிள்ளைகளுக்கு கஸ்டம் வந்தால் நோய் ஏற்பட்டால் கவலை இரட்டிப்பாகிறது. வெளியே கதைப்பார்கள். கவலைகள் வெளியே வரவேண்டும். பலர் தமக்குள்ளேயே அழுது தீர்த்துக் கொள்கிறார்கள். வழக்கமாக கிராமத்தில் பெண்கள் சத்தமிட்டு அழுகிறார்கள். காணாமல் போதல், கைது செய்தல் போன்றவற்றிற்கு பெரும்பாலும் மரணச்சடங்குகள் நிகழ்வதில்லை, உடல் கிடைப்பதில்லை. அழுது ஓய்வதற்கு அவர்கள் கவலையை வெளிக்காட்டுவது மறுக்கப்படுகிறது. கவலைகள் மனதிற்குள் அழுத்தப்படுகிறது. கவலைகள் எங்களை அழிக்காமல் பார்க்கவேண்டும். அது அவ்வளவு சுலபமல்ல. கவலைகளை வெளிப்படுத்த வேண்டும். இந்த உணர்வு வெளிப்பாட்டினை ஏதாவது சாதகமான விடயத்திற்கு மாற்றலாம். உங்களுக்கு என ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பழைய நிகழ்ச்சிகளைக் கொண்டு மகிழ்ச்சிகளையும் கொண்டு மனதை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருடைய கவலையும் அவர்களுக்கு முக்கியம். இதைத்தான் நாங்கள்

www.tamilarangam.net



இந்த குடும்பசேவையை 'நிலையம்' என்றழைக்கிறோம். குடும்பம் ஓர் அங்கத்தவரை இழந்தாலும் குடும்பமாக இருக்கிறது. அவர்கள் தனிநபர்களாக இல்லாமல் குடும்பமாக இயங்க வேண்டும். இந்த அமைப்பு உளவியல் ரீதியான உடல்ரீதியான ஒத்துழைப்பை வழங்குகிறது. ஆசியப் பெண்கள் அன்பாக இருப்பவர்கள். அன்பான குடும்பத்தை அமைத்துக் கொள்கிறார்கள். இந்த நாட்டில் எந்த மதமானாலும் எந்த இனமானாலும் சமூகத்தில் என்ன நிலையில் இருந்தாலும் எல்லாப் பெண்களும் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

**ரீற்றா 42**

**குடும்பசேவை நிலைய அங்கத்தவர். இவருடைய மகன் காணாமல் போய்விட்டார்.**

1989 இல் வழக்கிற்குச் சென்றுவிட்டு திரும்பி வருகையில் ஒரு வெள்ளை நிற வான் எங்களுக்கு அருகில் வந்து நின்றது. மகனின் நெஞ்சுக்குக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்தபடி அவரைக் கூட்டிச் சென்று விட்டார்கள். இச் சம்பவம் நிகழும்போது நான் அருகில் நிற்கிறேன். அவர்களில் ஒருவர் எனது நெஞ்சுக்கு நேரே பிஸ்டல் ஒன்றை பிடித்திருந்தார்.

நாங்கள் பொலிசுக்குச் சென்றோம். பிறகு பூசா முகாமுக்குச் சென்றோம். அநுராத புரத்திற்குச் சென்றோம். இதுவரை நான்கு தடவைகள் பூசா முகாமிற்குச் சென்றோம். நாங்கள் எங்கு போனாலும் அவர்கள் சொன்னார்கள், அவர் இங்கு கொண்டுவரப்பட வில்லை என. எனது மகனைக் கூட்டிச் சென்றபோது சீதுவா பொலிஸ் நிலையத்திற்குச் சென்றேன். ஆனால் அவர்கள் மகனை அங்கு கொண்டுவரவில்லை என சொன்னார்கள். முறைப்பாடு கொடுப்பதெனில் மூன்று நாட்களுக்குப் பிறகு வரும்படி சொன்னார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு சென்றோம். அவர் எங்கே என்பது பற்றி எந்தத் தகவலும் தெரியவில்லை.

நாங்கள் இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறோம். எத்தனை இடங்களுக்குப் போயிருப்பேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை தரம் சோதிடர்களிடம் போயிருப்பேன். எல்லா சோதிடர்களும் எனது மகன் உயிருடன் இருப்பதாகக் கூறுகிறார்கள். எனது மகனை வெள்ளை வானில் கொண்டு போனபின்பு சுற்றியுள்ள வர்கள் எம்மை விநோதமாகப் பார்க்கத் தொடங்கி விட்டதோடு வித்தியாசமாக நடந்து கொள்கின்றனர். எமக்குப் பொருளாதார ரீதியான கஸ்டங்கள் ஏற்பட்டதோடு, சுற்றியுள்ளவர்களும் இப்படி நடந்து கொள்வது வேதனையாக இருக்கிறது. ஒருவரும் உதவி செய்ய முன்வரவில்லை.

அந்தப் பையனின்களில் ஒருவன் என்னுடைய மகனின் நண்பன். அவர்களுடன் தான் எந்த நேரமும் இருப்பார். சிலவேளை நாங்கள் நினைப்போம், எனது பையன் காணாமல் போனதிற்கு பின்னணியில் இந்தப் பையன் இருந்திருக்கலாம் என்று. சீதுவாவில் ஜே.வி.பியுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் இன்னமும் சுற்றித் திரிகிறார்கள். உண்மையில் சட்டம், ஒழுங்கு என்று இருந்தால் இப்படி நிகழுமா? நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளர்களாக இருந்தோம். இனிமேல் ஒருபோதும்

www.tamilarangam.net

அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம். பிரேமதாசா கொல்லப்பட்டதைக் கேட்டதும் சந்தோசம் அடைந்தோம்.
22 வயதாக இருக்கும்போது எனது மகனை பிடித்துச் சென்றார்கள். என்னால் இப்போதும் அதைக் கண்களால் காணக் கூடியதாக இருக்கிறது.

அவர்கள் வானை நிறுத்தினர்
ஒருவன் அதிலிருந்து குதித்தான்
எனது நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியை நீட்டினான்
எனது மகனை அவர்கள் பிடித்துச் சென்றனர்
எனது மகன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி... சென்றான்
மகன் பார்த்த பார்வை இன்னமும் என் கண்களுக்குள் நிற்கிறது!

**ஜெயந்தி**

**2 குழந்தைகளின் தாய். நிகம்புவில் வசிக்கிறார். ஜே.வி.பிக்கும் அரச படைக்கும் இடையில் நடந்த பிரச்சினைகளின் போது துணைவனை இழந்தவர்.**

1989 ஏப்ரல் 4ம் திகதி அரச மருத்துவமனைக்கு வேலைக்குச் சென்றார். அன்று பிற்பகல் அறிந்தோம், சுடப்பட்டு இறந்தார் என. அவர்கள் எங்களுக்கு உடலைக் கூடக் காட்டவில்லை. அதை சவக்காலையில் போட்டுவிட்டார்கள். எப்படி வீடு வந்து சேர்ந்தேன் என்பது எனக்குத் தெரியாது. ஏன் இப்படி நடந்தது என்றோ, யார் செய்தது என்பதைப் பற்றியோ எதையும் அவர்கள் கூறவில்லை. எனது துணைவர் ஐக்கிய தேசிய கட்சியின் கமிட்டித் தலைவராக இருந்தவர். தனிப்பட்ட கோப தாபங்களினால் கொல்லாப்பட்டிருப்பதாக பலர் கதைத்துக் கொள்கின்றனர். சிலர் அரசாங்கம் செய்திருக்கும் என்று சொல்கிறார்கள். உண்மையில் யார் கொன்றிருப்பார்கள் என்று தெரியாது. இறந்த உடல் மட்டுமே கிடைத்தது.

நான் வீட்டிலிருக்கும் போது பகல் பொழுது கஸ்டமானதல்ல. ஆனால் பிற்பகல் ஆறு மணிக்குப் பிறகு நான் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல உணர்கிறேன். யார் இதைச் செய்தார்களோ அவர்கள் அனுபவிப்பார்கள். இந்தப் பிறவியில் இல்லாவிட்டாலும் அடுத்த பிறவியில் அனுபவிப்பார்கள். துணைவர் ஏதாவது தவறு செய்திருந்தால் இதை என்னால் தாங்கமுடியும். ஆனால் அவர் ஒருபோதும் இழிவான வேலைகள் செய்யவில்லை. கிராமத்திலோ வைத்தியசாலை யிலோ அவரைப் பற்றி பெரிதாக நினைக்கவில்லை.

முதல் 9 மாதங்களும் நாங்கள் மிகவும் கஸ்டப்பட்டோம். எங்களிடம் சாப்பிடுவதற்கு போதியளவு இருக்கவில்லை. பிள்ளைகள் இருந்திருக்காவிட்டால் எனது வாழ்வை முடித்திருப்பேன். என்னைப் போல துணைவர்களை இழந்த பல பெண்களுடன் நான் கதைத்திருக்கிறேன். எல்லோரும் ஒன்றையே கூறுகின்றனர். எனக்கு ஓய்வூதியம், நஸ்ட ஈடு என்று நிரந்தர வருமானம் கிடைக்கிறது. ஆனால் அடிக்கடி வெறுமை ஏற்படுகிறது. சனக்கூட்டமான இடத்தில் இருப்பது பிரச்சினையல்ல. இரவுகளில்

www.tamilarangam.net



வீட்டில் இருப்பது தான் கஸ்டம். பிரியோசனமில்லாமல் இருப்பதாக உணர்கிறேன். சிலவேளை ஏன் இப்படி இருக்கிறேன் என்று யோசிப்பேன். கொஞ்சக் காலம் வீட்டிலிருந்து அழுது தீர்த்தேன். இதனால் வேதனை கூடியதே தவிர வேறொன்றும் இல்லை. இப்போது சிரித்துக் கதைக்கக் கூடியளவிற்கு வழமைக்குத் திரும்பி விட்டேன். இந்தக் கூட்டங்களுக்குப் போய்வரத் தொடங்கிய பிறகு, நான் தனிய அல்ல என்பதை உணர்ந்தேன். எத்தனையோ கொடுமையான அனுபவங்களுடன் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர்.

ஒரு பையனை முழு நேரமும் வீட்டுக்குள் வைத்திருப்பது மிகவும் கஸ்டமானது. மருத்துவமனையில் மாதத்தில் இரண்டு தடவை வேலை செய்வேன். வேலை எனக்குப் பிடித்துள்ளது. தடுப்பூசி வழங்குவது. வீட்டில் இருப்பதற்கு நேரம் கிடைப்பது இப்போது மிகக் குறைவு. சிலவேளைகளில் நேரம் கிடைப்பது மிகக் கஸ்டம். இந்தக் கமிட்டி நல்ல வேலைகள் செய்கிறது என்று அறிந்ததால், நான் அதில் இணைந்து கொண்டேன். எனக்கு எதுவும் கிடைக்காது என்று தெரிந்தாலும் கூட, என்னால் எதற்காவது யாருக்காவது உதவமுடியும் என்பதால். உண்மையில் இறந்த காலம்பற்றி நான் கதைப்பதில்லை. முன்பு நான் மிகுந்த பயந்த சுபாவமும் வெட்கமும் உடையவளாக இருந்தேன். ஆனால் இப்போ அதில் ஒரு துளிகூட இல்லை.

**நிசாந்தி**

**குடும்பப் புனர் நிலையப் பொறுப்பாளர்.**

எம்முடைய குழுவில் துணைவர்களை இழந்தவர்கள், அனாதைகள், அகதிகள், காணமால் போனவர்கள், யுத்தத்தால் ஏதாவது ஒரு வழியில் பாதிக்கப்பட்வர்கள், தடுத்து வைக்கப்பட்டு வெளியில் வந்தவர்கள் போன்றோர்கள் அங்கம் வகிக்கின்றனர். அதிகமானவர்களுக்கு தமது துணைவர்களை இழந்துவிட்டோமா இல்லையா என தெரியாது. காணாமல் போய்விட்டார்கள் என்றே நினைக்கின்றார்கள். எங்கள் திட்டத்தின் நோக்கம் துணைவர்களை இழந்த பெண்கள் தாங்களாக இயங்கக் கூடிய நிலைக்கும், தாங்களே தங்களது வாழ்க்கையை நடத்துவதற்கும் உதவுதல். இத் திட்டம் பெரும் வெற்றியை அளித்தது. பல துணைவர்களை இழந்தவர்கள் தங்களுடைய கிராமங்களில் தலைவர்களாகி உள்ளார்கள். ஒவ்வொரு இடத்திலும் தலைவராக இயங்குபவர்களில் ஒருவரைத் தெரிவுசெய்து கொழும்பில் பயிற்சியளிப்போம். பயிற்சியளிக்கப்பட்டவர்களில், இதுவரை 600 பேர்களை திரும்பவும் அவர்களுடைய கிராமங்களுக்கே அனுப்பியுள்ளோம். மாற்று முகவர்களாக பிரதிநிதிகளை மாற்றுவதும் முக்கியமானதாகும். ஏனெனில் இது பல துணைவர்களை இழந்த பெண்களை எமது நிறுவனத்தில் அங்கம் வகிக்க வழிகோருகின்றது. இதனால் பல பெண்கள் நன்மையடைவர். இவ் அமைப்பில் தமிழ், சிங்கள, முஸ்லீம், பறங்கி இனத்தவர்கள் அடங்கியுள்ளனர். எந்தவொரு நிகழ்ச்சித் திட்டங்களும் மூன்று இனங்கள் இல்லாதவிடத்து செய்வதில்லை. மூன்றாவது கட்டமாக நாங்கள் மருத்துவம், கல்வி, அரசாங்க அலுவல்கள் பற்றியவை சம்பந்தமாக பயிற்சியளிக்கின்றோம். இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

*(முடிவுற்றது)*

www.tamilarangam.net

தென்னிலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பெண்கள் அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ள ருவாந்தி நெரஞ்சலா



*ஜேர்மனி, சுவிஸ் நாடுகளுக்கு கடந்த ஜீலை மாதம் விஜயம் செய்திருந்தார். அவருடனான*

# உரையாடல்

**இங்கு சக்திக்காக தொகுக்கப்பட்டுள்ளது.**

*நீங்கள் சமீபத்தில் இலங்கையிலிருந்து வந்திருக்கிறீர்கள். அங்குள்ள பெண்களின் தற்போதைய நிலையைக் கூறமுடியுமா?*



இன்று இலங்கையிலுள்ள பெண்கள் மத்தியில் ஓரளவேனும் விழிப்பு உணர்வு இருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அவர்கள் இன்னும் பாரம்பரிய சம்பிரதாயங்களில் ஊறியிருப்பதால் அவர்களால் அதிலிருந்து விடுபட்டு முன்னோக்கிச் செல்ல முடியாமலுள்ளது. இன்று பெண்கள் அமைப்புகள் தோன்றினாலும், அதிகமான பெண்களின் வாழ்க்கை இன்னும் வீட்டுவேலை, குழந்தைவளர்ப்பு என வரையறுக்கப் பட்டுள்ளது. ஒரு சிறு பகுதியினர் மட்டுமே பெண்கள் அமைப்புகளில் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

*தற்போது நிலவும் யுத்தச் சூழலினால் தென்னிலங்கையில் பெண்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்?*

இன்று இலங்கையில் நிலவும் யுத்தத்தினால் தென்னிலங்கையிலுள்ள பெண்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் வட,கிழக்கிலுள்ள பெண்கள் யுத்தச்சூழலில் வாழ்வதால் அதன் கொடூரத்தை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆயினும் இவ் யுத்தத்தின் விளைவால் தென்னிலங்கை யிலுள்ள பெண்களும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பாதிக்கப்படுகிறார்கள்.

*வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படும் பெண்கள் பற்றி, தென்னிலங்கையிலுள்ள சிங்களப் பெண்கள் அறியும் சந்தர்ப்பம் உள்ளதா?*

ஆம். வட,கிழக்கில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும் பெண்கள் பற்றி அவர்கள் அறியும் சந்தர்ப்பம் உள்ளது. அத்தகைய நிலைமைகளில் அங்கு இயங்கும்

www.tamilarangam.net



பெண்கள் அமைப்புகள் குரல் எழுப்பியுள்ளார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மிகவும் பலம்வாய்ந்த எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். இத்தகைய நிகழ்வுகளுக்கெதிராக மனித உரிமைகள் அமைப்புகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால் நகரப்புறங்களிலுள்ள அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி கிராமப்புறங்களிலுள்ள பெண்கள் அறியும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிது. இன்று இலங்கையிலுள்ள தொலைத்தொடர்புச் சாதனங்கள் மூலம் வடக்கிலுள்ள பெண்களின் பிரச்சினைகள் தென்னிலங்கையிலுள்ள பெண்களையும், அதேபோல் தென்னிலங்கையிலுள்ள பெண்களின் நிலைமைகள் வடகிழக்கு பெண்களுக்கும் சென்றடைவதில்லை. இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். இரு பகுதியிலும் ஒரு சிறு பகுதியினரே இதுபற்றி உணர்ந்திருப்பதால் இவர்களது நடவடிக்கைகள் வெற்றியளிப்பது சாத்தியமில்லாமலுள்ளது.

*சிங்கள சமூகத்தில் திருமணத்தின் பிற்பாடு பெண்களுக்கு மேற்கொள்ளப் படும் கன்னித்தன்மையைப் பரிசோதிக்கும் முறை இன்னும் வழக்கில் உள்ளதா?*



ஆம். இத்தகைய கன்னித்தன்மையை பரிசோதிக்கும்முறை இன்னும் நடைமுறையிலுள்ளது. சிலவேளைகளில் மத்தியதர வர்க்கக் குடும்பங்களில் இந் நிலைமை இல்லாது போயிருக்கலாம். ஆனால் இலங்கையில் இன்றும் ஆணாதிக்கச் சமூக அமைப்புமுறையே உள்ளதால் இந் நடவடிக்கையால் பாதிக்கப் படும் பெண்களை இன்றும் கூடுதலாகக் காணக்கூடியதாகவுள்ளது.

*இதுதொடர்பாக இப்போதைய சந்ததியினருக்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதா?*

இன்றைய இளம் சந்ததியினர் இதுபற்றி விழிப்படைந்துள்ளார்கள். ஆனால் அவர்கள் சம்பிரதாயங்களால் பின்னிப் பிணைந்துள்ள ஒரு சமூகத்தில் சிறைப்பட்டு வாழ்வதால், அதற்கெதிராக குரலெழுப்பினால் எமது சமூகத்தின் இழிவுக்கு உட்படுத்தப்படுகிறார் கள். இலங்கையிலுள்ள ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து விடுதலையடைவதென்பது ஒரு சுலபமான காரியமல்ல.

*இலங்கையிலுள்ள பெண்கள் அமைப்புகள் இதுபற்றி கிராமப்புறப் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்களா?*

இதுபற்றி நகரத்திலுள்ள பெண்கள் அமைப்புகள் கிராமப்புறப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்கள் என நான் நினைக்கவில்லை. கிராமப் புறங்களிலுள்ள சிறிய பெண்கள் அமைப்புகளில் குழந்தை வளர்ப்பு போன்ற பிரச்சனைகள் பற்றி கதைப்பதும், அவற்றிற்கு தீர்வுகள் தேடுவதிலுமே ஈடுபடுகிறார்கள். அவர்கள் இன்னும் ஆணாதிக்கச் சமூகத்தில் கட்டுண்டு வாழ்வதால், அவர்கள் சம்பிரதாயங்களால் பெண்களுக்குள்ள ஒடுக்குமுறைகள் பற்றி ஆராய முன்வரு வதில்லை.

www.tamilarangam.net

*நகரத்திலுள்ள பெண்களின் ஒடுக்குமுறைக்கும் கிராமப் பெண்களின் ஒடுக்குமுறைக்கும் ஏதாவது வேறுபாட்டினை நீங்கள் காண்கிறீர்களா?*



நிச்சயமாக! உண்மையில் ஒரு பாரிய வேறுபாடு உள்ளது. கிராமியப் பெண்கள் இன்றுகூட மிகவும் துன்பகரமான வாழ்க்கையையே மேற்கொள்கிறார்கள். அவர்களிடமிருந்து கல்வி கற்கும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வயல்களிலும் தோட்டங்களிலும் உழைக்க வேண்டியுள்ளது. திருமணத்திற்குப் பிற்பாடும் அவர்களின் பொருளாதார நிலைமைகளினால் தொடர்ந்தும் வயல்வெளிகளில் வேலைசெய்ய வேண்டியுள்ளதோடு, குடும்பப் பாரம், குழந்தை வளர்ப்பு என எல்லா சுமைகளையும் அவர்களே சுமக்கிறார்கள். ஆனால் நகர்ப் புறங்களிலுள்ள பெண்களின் வாழ்க்கை அப்படியல்ல. அவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பிருக்கின்றது. மற்றும் தொலைத்தொடர்பு ஊடகங்களினால் அவர்கள் தமது அறிவை வளர்க்கக்கூடியதாக உள்ளது. அத்துடன் நவீன உபகரணங்களின் பாவனையும் அவர்களின் வாழ்க்கை முறையை இலகுவாக்குகின்றது. திருமணத்திற்குப் பிற்பாடு கிராமப் பெண்கள் போல் அவர்கள் மீது குடும்பப் பளு ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன.

*கிராமப் பெண்களின் பிரச்சினைகளை தென்னிலங்கைப் பெண்கள் அமைப்புகள் கருத்தில் எடுத்துக் கொள்கின்றனவா?*

சில பெண்கள் அமைப்புகள் அவர்களது பிரச்சினைகளை கருத்தில் எடுக்கின்றனர். ஆனால் இவற்றை செயற்படுத்துவதில் சில தடைகள் உள்ளன. இந் நிலைமைகளுக்கு கிராமியப் பெண்களே பொறுப்பானவர்கள். அவர்களின் ஊக்கமின்மை இதற்கொரு முக்கியமான காரணமாகும். கிராமப் பெண்கள் சம்பிரதாய பழக்க வழக்கங்களிலிருந்து வெளியில் வருவதற்கு அஞ்சுகிறார்கள். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது என்றே நான் கருதுகிறேன்.

*சிங்களச் சமூகத்தில் சீதனம் கொடுக்கும் வழமை உள்ளதா?*

சிங்களச் சமூகத்தில் சீதனம் கொடுக்கும் முறை முன்பு போல் தற்போது பெருமளவில் இல்லை. ஆனால் இன்றும் பேசிச் செய்யும் திருமணங்களின்போது இப் பிரச்சினை எழுகின்றது.

*சுதந்திர வர்த்தகவலயத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் நிலை பற்றி...?*

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்களின் நிலை மிகவும் கவலைக்குரியது. அவர்களின் உழைப்பு தினமும் சுரண்டப்படுகின்றது. அவர்களுக்கு உரிய வதிவிடம் மற்றும் சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை. அத்தோடு அவர்கள்

www.tamilarangam.net



சமூகத்தினால் இழிவாகவே பார்க்கப்படுகின்றார்கள். அவர்கள் ஆண்களின் விளையாட்டுப் பொருட்களாகவே கருதப்படுகிறார்கள். பாலியல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களின் நிலையை தொலைத்தொடர்பு ஊடகங்கள் வேறுவித மாகவே பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால் இந் நிலைமைக்கு காரணமானவர்களைத் தேடிக் கண்டுப்பிடிப்பதில் அவர்கள் அக்கறை செலுத்துவதில்லை. சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண்களில் 80 வீதமானவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். இதில் கல்வியறிவு உடையவர்களும், கல்வியறிவு அற்றவர்களும் அடங்குவர். அவர்கள் பெண்கள் உரிமைகள் பற்றி சிலசமயங்களில் குரலெழுப்பினாலும், தமது வேலையைப் பாதுகாத்துக் கொள்வதில் கவனமெடுக்க வேண்டியுள்ளது.

*இப்போது இலங்கையில் கல்வி, மற்றும் வேலையில் சம்பளம், உயர்பதவி என்பவற்றில் பாரபட்சம் காட்டப்படுகின்றதா?*



ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் காட்டப்படும் இந்தப் பாரபட்சம் சில சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் வைத்திய, ஆசிரிய, வங்கி, மற்றும் மருத்துவதாதி ஆகிய துறைகளில் ஒரு சமத்தன்மை காணப்படுகின்றது. சம்பளத்தில் காட்டப்படும் பாரபட்சத்திற்கு உதாரணமாக இறப்பர் தொழிலாளர்கள் மத்தியில் ஆண்களுக்கு 150 லிருந்து 200 ரூபா வரையிலும் பெண்களுக்கு 70லிருந்து 100 ரூபா வரையிலுமே கிடைக்கின்றது. அதேசமயம் பெண்தொழிலாளர்கள் உயர்அதிகாரிகளின் பாலியல் சேஷ்டைகளுக்கு இலக்காகிறார்கள். இதற்கு இணங்கும் பெண்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களும், இணங்காத பெண்கள் வேலையிலிருந்து நீக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

*இலங்கையில் இன்றைய இளம் சந்ததியினரில் பெண் ஒடுக்குமுறை பற்றி விழிப்புணர்வு உள்ளதா?*

இளம் சந்ததியினருக்கு பெண் ஒடுக்குமுறை பற்றி அவ்வளவான விழிப்புணர்வு உண்டென கூறிவிட முடியாது. ஏனெனில் அவர்கள் இன்று கல்விப் போட்டியில் சிக்குண்டிருக்கிறார்கள். இலங்கையில் இளம் சந்ததியினர் ஒரு நிச்சயமற்றதும், கடினமானதுமான ஒரு எதிர்காலத்தையே முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அவர்கள் படித்தளவிற்கு வேலைவாய்ப்பின்மை, கல்வியில் போட்டி, மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றார்கள்.

*இலங்கையில் இயங்கும் பெண்கள் அமைப்புகளின் அணுகுமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?*

பெண்கள் அமைப்புகள் இன்னும் பல நடவடிக்கைகளை மெற்கொள்ளலாமென நான் நினைக்கிறேன். குறிப்பாக இளம் சந்ததியினருக்குப் பெண்கள் உரிமைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தலாமெனறும் நினைக்கிறேன். அது சம்பந்தமான வேலைத்திட்டத்தை மேற்கொள்வது அவசியம். கிராமியப் பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கும் நகரப்பெண்களின் பிரச்சினைகளுக்கும் பாரிய வேறுபாடு இருக்கின்றதென்பதை விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதோடு, இரு சாராரும் ஒன்றிணைந்து இப் பிரச்சினைகளுக்கு தீர்வெடுக்க முயற்சி செய்யவேண்டும். முக்கியமாக பெண்களுக்கு அவர்களின் ஒடுக்குமுறை பற்றிய தெளிவை ஏற்படுத்துவதற்குப் பெண்கள் அமைப்புகள் கூடியளவு கவனம் செலுத்தவேண்டும்.

**இலங்கையில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியப் பெண்கள் ஒன்றிணைந்து பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் யுத்தத்திற்கு எதிராகவும் குரலெழுப்பும் சூழல் தற்போதுள்ளதா?**



தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியச் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் ஒன்றிணைந்து யுத்தத்திற்கு எதிராக செயல்படும் அவசியமுள்ளது. இன்று இலங்கையில் ஒரு யுத்த சூழல் நிலவுகின்றது. ஒவ்வொரு சமூகங்களிற்கிடையில் பல பிரிவினைகள் இருப்பதால் நாம் எல்லோரும் இணைந்து செயற்படும் சந்தர்ப்பங்கள் அருகியுள்ளன. எல்லாச் சமூகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் பெண்கள் அமைப்புகள் இன்று இலங்கையில் இயங்கினாலும், அவர்கள் முன்னோக்கிச் செல்வதற்கு பலமற்றவர்களாகவே உள்ளார்கள். ஆனால் நாம் ஒன்றிணைவது மிகவும் அவசியம். இப் பிரச்சினைக்கு மத்தியில் இது எப்போது சாத்தியமாகுமென்ற கேள்வி எம் எல்லாருக்குள்ளும் எழுகின்றது.

**சுவிசில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பில் நீங்கள் கலந்து கொண்டீர்கள். இதன் மூலம் புலம்பெயர் பெண்கள் சந்திப்புப் பற்றி நீங்கள் கருதுவது என்ன?**

உண்மையில் அந்தச் சந்திப்பில் நான் கலந்து கொண்டதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். பல பெண்களின் கருத்துக்களையும் கேட்டறிந்ததோடு மட்டுமன்றி நாம் அனைவரும் இன மத வேறுபாடின்றி ஒரு சந்திப்பில் பெண்களாக மட்டும் எமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், ஆக்கபூர்வமான சந்திப்பாகவும் எனக்குப் பட்டது. பல புதிய தோழிகளின் அறிமுகமும் எனக்கு கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இப்படியான சந்திப்புக்களை நடத்துவதன் மூலம் தான் பெண்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஏற்பட்டு இந்த ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிராக குரல்கொடுக்க வலுவாக இருக்கும் என நினைக்கின்றேன்.



**நேர்காணல் உமா (ஜேர்மனி)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது நானாகி

எனக்கு இப்போதெல்லாம்
ஏதையும்
சகித்துக் கொள்ள இயலவில்லை
ஏன் என்ற கேள்விக்கு
எந்தப் பதிலையும்
சுலபமாக ஏற்றுக் கொள்ளவும்
இயலவில்லை.

இயலாமை பற்றி
இன்னமும்
நான் சிந்திக்கவில்லை
இயற்கையாக ஏற்றுக் கொண்டேனா?
இதுவும் இப்போ கேள்விக்குறிதான்

இயங்கி இயங்காமல்
இயங்குவதாகக் கூறி
இன்று எனக்கு அலுத்துவிட்டது.
இதுவும் இப்போ எனது
இன்றைய வாழ்வாகிவிட்டது. ●

உமையாள்
நோர்வே

தலைவர் உன்னதமானவரென்கிறான்
இராணுவச்சிப்பாய்
2வது லெப்ரினன்ட்
அவர் மாமனிதர்களை உருவாக்குபவர் என்கிறான்
மக்களின் துன்பங்களை அவர் மட்டும் போக்குவார்
என்கிறான் தேசப்பற்றாளன்.
விடுதலையின் பெறுமதி மக்களுக்குத் தெரியவேண்டுமென்பதற்காக
அவர்களின் துயரங்களை தலைவர் விட்டுவைத்திருப்பதாக.
முதிர் கல்விமான் அவர் அவதாரம் என்கிறான்
குழந்தை அவரைக் கும்பிடச் சொல்கிறது.
யுத்தக் குற்றவாளி என்று அசரீரி சொல்கிறது ●

சுகன்
பிரான்ஸ்

www.tamilarangam.net

# நட்சத்திரங்கள்

சந்திரா இரவீந்திரன்
லண்டன்

உறவினனா.. நண்பனா?
சகோதரனா.. அன்பனா?
இளையவனா.. மூத்தவனா?
அவன் எனக்கு யாரென்று புரியவில்லை!

நண்பனென்ற நினைவு
வசதியாக இருக்கிறது!
பதினைந்து வருடங்களின் பின்
என்வீடு தேடி வந்தான்!
உறவிற்கும் அப்பால் ஒரு சுகமான உணர்வு!

அவன் பார்வைகளின்
சில பக்கங்கள் எப்பவும்
என்னுள் நெருக்கமாயிருந்தன!
உலகம்.. சமூகம்.. கலைகள்
உயிரினங்களின் நேசம்
மனித மனங்களின் ஆழம்
யாவும் சூரியப் பார்வையாய்..!
பதினைந்து வருடங்களின் முன்
நான் கண்ட நீயில்லை இன்று !
கணவர் குடும்பங்களுடன்
இனிய குடும்பம் உனது ஆயினும்
எதைத்தான் தொலைத்துவிட்டாய்?

அவன் புருவச் சுருக்கங்களிற்குள்
விரியும் கேள்விக்குறிக்கோடுகளிற்கான பதில்
எப்பவும் என் முகத்தில்
வரிவரியாய் வடிந்தபடி
இருந்திருக்கும்!
சூரியப் பார்வைக்கு முன்
மேலுமொரு மின்சாரம் எதற்கு?
என் இமயப்பிரமிப்பின் மறுபுறத்தில்
இதயத்வதை ஓட்டுக் கேட்ட
இளிப்பு அவனுள் !

உச்சியில் நின்றுகொண்டு
பள்ளத்தைப் பார்த்தே பரிதவிக்கும் எனக்கு
இப்போ மீளவும் கைநீட்டும் சில கதிர்கள்
சுடம் விடும் நேரமிது!
உச்சியில் என்னிருப்பு மிக
உவப்பாயிருக்கிறது!

www.tamilarangam.net



# மௌனம்

நிதி
கோமேதகம்

"அய்யோ அஞ்சும்
பொண்ணாப் போச்சே..."
என்னை மௌனத்தில்
பெறவில்லை என் தாய்.

பல்லாங்குழியும், பம்பரமும்
ஏரிக்கரையில் எந்நேரமும்,
கல்லாங்காய் மட்டுமல்ல,
கவேட்டி (கபடி) கூட
கழனி மேட்டில் ஆடுவேன்
கட்டையனுடன்.

பையன் பொண்ணுன்னு
பாராத நேரம்.
மௌனத்தை மனதை
சிறைபிடிக்காத காலம்.

பட்டனு அறுந்தால,
பனை நாரால் கட்டின
மேல்சட்டையைக் காட்டி,
'பொட்டக் கழுதைக்கி
பொத்தான் எங்கடி போச்சு?
முளைக்கும்போதே மூடமாட்டேன்னுது'
மூடச் சொன்னார்
மூணாங் கிளாஸ் வாத்தியார்.

அந்தநாள்....

'நீ பெரிய மனிசியாயிட்டடி பீட'
பங்காளி, பயித்தாளியும்
பந்தல் போட்டு நின்றார்கள்.
நொச்சிலையும், வேப்பிலையும்
வெட்டியாந்தார் பீலிகுட்டி.
தாய் மாமன் தென்னங்கீத்தை
தட்டியாய் முடைந்து தந்தார்.

கட்டினார்கள்..
இருக்கின்ற குடிசையினுள்
இன்னொரு குடிசையை.
தலைத்தண்ணீர் விட்டார்கள்,
புட்டுச் சுட்டுப் போட்டார்கள்,

www.tamilarangam.net

புதுத்துணி கொடுத்தார்கள்,
பொழுதும் புலர்ந்தது,
நான் மட்டும்,
மௌன இருட்டில்...

'மாராப்பு போட்டு
மறைக்காம,
மதம்புடிச்ச தேவடியாளு,
போறாளுவ பாரு
பொலிகாளை மாரி'
என்றார்
கிட்டுவூட்டு கிழவர்.

'ஒரு பல்லு இருக்காது...
ஆம்பளையாண்ட இன்னாடி
அப்படியிளிப்பு'
என்றாள் தாய்.
'வச்சிருக்கக் கூடாதுய்யா
வயசுக்கு வந்தவள
கூனோ குருடோ
தள்ளி வுட்டுடணும்
வந்தவன் கிட்ட'
என்றார் தாய்மாமன்...

உதட்டை ரசித்தவன்
சொற்களை ரசித்தானா?
வீங்கி விடும் கன்னம்
என்றான் கணவன்...
பெற்ற மகனிடம்
வாய் திறந்தபோது,
'இன்னமா
பொம்பளையா பட்ச்சமா
போவ மாட்டியா கம்முனு'
மூடிக்கொண்டேன்.
மௌனச் சேற்றில்
புதையுண்ட குரல்வளையின்,
விசும்பல் மட்டும்
வெகுகாலமாய்...
நீங்களுமா என்னைப் போல,
மௌனமாய் மரிக்கவேண்டும்.

www.tamilarangam.net



# ஒரு காற்புள்ளி

மூச்சுகணுக்கு இன்னும்
இடமிருக்கிறது.
அடிமுடி தேடுகின்ற வாழ்வின்
அந்திமங்களில் கரைகிறது
மிகுதி.
புரியமுடியாத அல்லது
புரிய நினைக்காத ஒரு
குழப்பமான உலகமே எம்மைக்
கௌவிக் கொண்டுள்ளதாய்
இன்னும் விரிகிறது.
தேசம் உதறி விடினும்
நெருக்குதல்கள் இதயத்தைக்
பிழிகிறது.
எந்த ஆணையும் அல்லது
எந்த பெண்ணையும் நம்புவதாகத்
தெரியவில்லை.
இந்த பூம்பாகம்
முத்தங்களில் மட்டுமே
சோடித்ததாகத் தெரியவில்லை
அவள் அழகானவளாகவும்
இன்னும் உணர்வு பூர்வமானவளாகவும்
உள்ள விசாலமானவளாகவும்
நம்பிக்கையுடையவளாகவுமே
கற்பனை கொண்டேன்.
எனது எல்லாமே கற்பனையில் தான்
கழிகிறது.
இது சோர்வு பற்றிய
கவிதையாக எனக்குப் படவில்லை.
அவளின் நினைவுகள் வரும்போதெல்லாம்
கவிதை வருகிறது சில நேரங்களில்
இந்தப் பெண்ணிலைவாதியை
என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை,
அவளை ஒரு பெண்ணாக மட்டும்.

21.05.1999.
இளைய அப்துல்லா
இலண்டன்.

www.tamilarangam.net

## இரைமீட்பு

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் வீடு.

பொழுது சாய்ந்தாலும்
மனிதர்கள் மறையா
தோழர் சகித
அப்பா சிரிப்பு.

பட அறை தாங்கும் துவக்குகள்
வாய்பிளந்து
நோக்கும் பார்வைகள்
அதிசய பொருளின் ஸ்பரிசம்
தேடித்தொடும் கைகளின்
சாதித்த மனசு
போராட்டத்திற்காக
ஆயுதம் தூக்கும்
மாமாக்களாம்.

அம்மா சொன்னாள்.

வெளிச்சத்தை கண்ணுக்கடித்து
பயப்பட்டலற மேலே
தூக்கி கண்ணடிக்கும்
தென்னைமர மூலைகளில்
வீட்டுக் கொல்லைகளில்
'கோலிங் அப்பா... கோலிங் அப்பா
ஓவர்...ஓவர்' என
அடிக்கடி பெட்டியோடு பேசும் மாமா
இன்றில்லை.
படிக்கப்போன பல்கேரிய அத்தையின்
பரிசுக் கிட்டாரை மீட்கக் கற்பிக்கும்
பிரசுரம் கொண்டுபோய்
அந்நியன் பிடித்து வராது போன
பிறிதொருவர்.

www.tamilarangam.net



கிட்டாரை மீட்ட
விரல்கள் மீளுமா?

அவர்கள் வைத்த கண்ணிவெடிக்காய்
அமைதிகாப்போர் சுட்டவர்களுள்
அப்பாவும் ஒண்டென்று
கதறியழும் நண்பியின்
தந்தையின் சைக்கிள் பின்சீட்டில்
பலநாள் பயணித்தது
பலமாய்த் தாக்க

தலைக்கு துணியால் கொண்டைபோட்ட
ஆண்கள் தலைகளைக் காண்கையில்
பயமாய்க் கோபமாய்
மாறிடும் மனதில்
சொர்க்கமேயென்ற பூமி
கொதித்து கனன்றது.

தாத்தாவின் நண்பர்
காக்கா
காரணப்பெயரல்ல
நண்பர் வெள்ளை.

நீண்ட ஆராய்ச்சியின் பின்
காக்கா அண்ணா
கூப்பிடலில்
திருப்பிச் சிரிப்பார்.
காக்கா என்பதே
அண்ணா என்றறிகையில்
எம்மகராதி
ஓர் சொல் சேர்த்துக் கொள்ளும்

பிறதொரு நாளில்
அம்மா
பாவம் சனங்கள்
விளக்கோடும் பாயோடும்
மழை வேறு

www.tamilarangam.net

வெளியேற்றப்பட்ட சனங்களை
வவுனியா வழிகளில்
கண்ட கவலைகள்
கவலைப்படாமல்
கெந்தித்தட்டுவோம்.

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் வீடு.
கனடா வாழ்க்கை
கடத்தலின் பின்
ஈழம் நோக்கிய
இன்னொரு பயணத்தில்
வானம் நோக்கும்
வாழ்தல் பயத்தில்.

அம்மம்மா வீட்டு
தேசி மரமும்
கருவேப்பிலை மரமும்
பூத்துக் காய்த்து
செழித்து இருக்கையில்
விமானச் சத்தமோ பீதி தரும்.

கொட்டில் வாங்கில்
படுத்துக்கிடக்கும்
ஆத்ம சுகத்திற்கே
பீதிதான் விலை.

தாத்தாவின் வாயோ
புளியமரக் காணியில்
முழங்கால் வளைத்து
குந்தி
புல்லுப் பிடுங்கும்
முனைதலின் ஊடே வளர்த்த
ரெண்டு தென்னம் பிள்ளைகள்
'அவங்கள்' சுட்டுப்பழகி பட்டதனை
அவங்களுக்கென்ன தெரியும்
என ஆறும்.

www.tamilarangam.net



எனது காற்றோ
அப்பா கேட்கச் சொன்னதை
வேண்டா வெறுப்பாய்
வெள்ளைக்காரன் வரமுன்னம்
நெடுந்தீவில் நெசவு இயந்திரம் இருந்ததாமே
கேள்வி வீசும்
பதில்மேல் சுரணையற்று

கனடா (சு)வாசத்தில்
நாவூற மின்னிய
கிணற்றுத் தண்ணீர்
கைப்பாய்க் கைத்தது.
குளம்
கலிங்குப் பாய்ந்தது.

மறுநாள் மாலை
சித்தி
இயக்கத்துக்கு ஓடீற்றாள்

தாத்தா
நெடுந்தீவு மண்ணும்
வன்னி வாழ்தலும் பற்றி பேசி
விடைபெறும் போது
கலங்கும் முதுமையை
முக்காடிட்டு மறைத்து.
'சின்ன காக்காவை
கொழும்பில் கண்டனியோ?'
கேள்வியில் வெளிறும்
சொர்க்கமே எனது பூமி

கிணத்துத் தண்ணி
கைக்கும்
கலிங்குப் பாயும்

சொர்க்கமே எனது பூமி? ●

பிரதீபா தில்லைநாதன்
கனடா

பிரதீபா
தில்லைநாதன்
15 வயதே
நிரம்பப்பெற்ற
இளைய புதிய
கவிஞர்.
வோபர்ன்
கல்லூரியின்
மாணவி.



இக் கவிதை
அருவி
வெளியீட்டகத்தினால்
வெளியிடப்பட்ட
'யுத்தத்தை
தின்போம்' என்ற
தொகுப்பிலிருந்து
இங்கே மீண்டும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலம்பெயர் இலக்கியத்தில் தமிழ் பேசும் பெண் சிந்தனைகளின் பரிமாணம்

**புது உலகம் எமை நோக்கி**

**நூல் மதிப்பீடு**

லக்ஷ்மி
*பிரான்ஸ்*

## சிறுகதைகள் பற்றிய பார்வைக்கு முன்...

பெரும்பாலான தமிழ் பேசும் பெண்களின் புலம் பெயர் நாடுகளிற்கான பிரவேசம் என்பது பெரும் பாலான தமிழ் ஆண்களைப் போல் சுயமான தல்ல. ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஆணிடம் (அது சகோதரனிடமோ, தந்தையிடமோ, கணவ னிடமோ, காதலனிடமோ, திருமண பந்தத்தால் இணையப் போகிறவனிடமோ) தான் வந்து சேர்கிறாள். இப்படியான இடப்பெயர்வின் போது பெண்கள் பெளதீக ரீதியாகத்தான் இடம் மாற்றப் படுகிறார்கள். உடனடியாக அவர்கள் மாற்றுச் சூழலுடன் தம்மை இணைத்துக் கொள்வதற்கான வாசல்கள் பெரும்பாலாகத் திறக்கப்படுவதில்லை. அதாவது இவர்கள் அங்கிருந்து வரும்போது அவர்களுடன் பிணைந்திருக்கும் சகல அம்சங்களுடன்தான் இங்கும் வாழும் நிர்ப்பந்தம் உள்ளது. இந்தப் பெண்கள் இங்கு முகம் கொள்ளும் எண்ணற்ற பிரச்சனைகளுக்கு இடையில் இவர்களுடைய எழுத்துலகப் பிரவேசம் என்பது மகத்தானது தான்.




புது உலகம் எமை நோக்கி

புற உலகை இப் பெண்கள் தரிசிப்ப தற்கும், புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில்கூட அவர்கள் ஆண்களின் நுகத்தடியில் நின்று அவற்றைக் கண்டு கொள்ள மட்டுமே நிர்ப்பந்திக்கப்படுகி றார்கள். இப் பெண் சிந்தனையின் வெளிப்பாடானது ஆண்களினதும் ஆண் அதிகாரத்தினதும் எதிர்கொள்ளலையே பெரும்பாலும் வெளிப்படுத்தி நிற்கிறது. 'புது உலகம் எமை நோக்கி' என்ற தலைப்பில் -பத்து ஆண்டுகளாக தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கும் பெண்கள் சஞ்சிகை யான- சக்தி (நோர்வே) யினால் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கும் 23 சிறுகதைகள் அடங்கிய தொகுதி பல வகைகளிலும் முக்கியத்துவம் பெறுகிறது. ஈழத்து இலக் கிய வரலாற்றிலும் புகலிடத்து இலக்கிய வரலாற்றிலும் வெளியீட்டுத்துறையில் இத் தொகுதி முக்கியமான ஒரு பாதச்சுவடு என்று கூறுவது மிகையானதல்ல.

www.tamilarangam.net



ஈழத்துப் பெண்களின் கவிதைகள் 'சொல்லாத சேதி' களாக ஈழத்திலும் 'மறையாத மறுபாதி' யாக புகலிடத்திலும் ஏற்கனவே தொகுக்கப்பட்டு வெளிவந்தபோதிலும், பெண்சிந்தனைகளின் மற்றுமொரு தொடர்ச்சியாக சிறுகதைகள் முதன்முறையாகத் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. ஈழத்தில் இப்படியான சாத்தியக்கூறு இதுவரை இல்லாமல் இருப்பது கவலைக்குரியது. தமிழ்நாட்டிலும் இப்படியான தொகுப்புக்கள் வெளிவந்ததாக பெரிதாக அறிய முடியவில்லை. அண்மையில் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியத்தின் (லண்டன்) வேண்டுகோளின் பெயரில் கோவை ஞானியின் முயற்சியில் 'காயங்கள்' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டிருக்கிறது.

புலம்பெயர் சஞ்சிகைகளிலும் புலம்பெயர் இலக்கியத் தொகுப்புக்களிலும் ஏற்கனவே வெளிவந்த இருபத்துமூன்று சிறுகதைகள் இத் தொகுதியில் இடம்பெறுகின்றன. ஆண்களின் அதிகாரத்திற்கு எதிரான விழிப்புணர்வுகள், பொதுவாக ஆண்களால் ஒடுக்கப்பட்டிருத்தல் போன்றவற்றை இனங்கண்டு கொள்ளுதல் போன்ற இப்படியான வெளிப்பாடுகளைக் கொண்ட எத்தனையோ படைப்புக்கள் ஏற்கனவே வெளிவந்த போதிலும் இத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் அத்தனையும் பெண்களினாலேயே படைக்கப் பட்டிருப்பதனால், விசேடமான அந்தப் பிரச்சினைக்குரிய தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன. சிறுகதைகள் இப்படித்தான் எழுதவேண்டும் என்று திட்டவட்டமான வரையறைகள் போடமுடியாவிட்டாலும், ஒரு படைப்பில் பிரச்சாரத்தன்மை நேரடியாக இருக்கும் பொழுது, ஆத்மார்த்தமாக மனதை ஊடுருவும் அனுபவத்தைத் தருவதில் அந்தப் படைப்பிலக்கியம் தோல்வியடைகிறது அல்லது அந்த அனுபவத்தை இழக்கிறது. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் கருத்து ரீதியாக ஒரு விடயத்தை ஆய்வு செய்வதற்கும் அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளினுடாக ஒரு பிரச்சினையையோ அல்லது பல பிரச்சனைகளையோ இனங்கண்டு அதனைப் படைப்புக்குள்ளாக்குவதற்கும் இடையே ஆழ்ந்த வேறுபாடு உள்ளது. இத் தொகுதியில் இடம்பெறும் கதைகளில் சில இவற்றைக் கருத்தில் கொள்ளாமலும் படைக்கப் பட்டிருக்கின்றன என்பதை அவதானிக்க முடிகிறது.

இச் சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளுடன் ஒட்டாமலும், முற்றிலும் வேறுபட்ட ஒரு கதையாக காவேரியின் 'நீயும் ஒரு சிமோன் தி போவுவா போல' எனும் சிறுகதை அமைந்துள்ளது. இப்படியான தொகுப்புக்களை வெளியிடும்போது சில அவதானங்கள் தேவைப்படுவதை தொகுப்பாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். காவேரி பம்பாயில் வசிப்பவர். இவர் தமிழ் இலக்கிய உலகில் பரவலாக அறியப்பட்டவர். இவரின் இப் படைப்பானது புலம்பெயர் இலக்கியத்திற்குள் அடங்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இன்னும் ஒரு முக்கியமான விடயம் இத் தொகுப்பில் இடம் கொள்ளும் சில பெண்கள் தங்களுடைய பெயர்களை கணவனுடைய பெயருடனோ அல்லது தந்தையின் பெயருடனோ இணைத்து தங்களை அடையாளம் காட்டுவது பெரும் முரணாகத்தான் தெரிகிறது. ஒரு ஆணின் பெயருடன் தங்களுடைய பெயர்களை இணைத்துத்தான் தங்களை இந்த சமூகத்திற்கு அடையாளம் காட்ட நிர்ப்பந்திக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டிருக்கும் இப் பெண்கள், இந்த ஆணாதிக்க சமூகத்தில் இருக்கும் ஆண்கள் தங்களை அடையாளம் காட்டுவதற்கு எந்தப் பெண்ணின் பெயரையும் (தாயோ அல்லது மனைவியோ) தாங்க வேண்டிய அவசியமில்லாமல் இருக்கும்படி அந்த ஆணாதிக்கச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டு கொள்வது அல்லது கண்டுக் கொள்ள முனைவது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமாகிறது. அத்துடன் இந்தவிதமாக பெண்களை அடையாளப்படுத்துதல் என்பது பெண்கள் சுதந்திரமற்றவர்களாக ஆக்குவதற்கான ஒரு விடயம் என்பது மிகவும் அவசியமாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

தொகுப்பாளிகள் குறிப்பிலிருந்து...

பெண்களுடைய உணர்வுகளும், கருத்துக்களும், எண்ணங்களும் இலக்கிய வடிவம் பெறுவதற்கும், இலக்கிய ஆக்கம் தொடர்பான அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதற்கும் பெண்களது ஆக்கங்களைத் தனியே தொகுத்து நோக்கவேண்டும். பெண்களுக்கான ஒரு கலை இலக்கிய நெறி இதனால் உருவாகும் என்ற கருத்து வலுப்பெறும்.

ஈழத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் முடிவிலா யுத்தம் மக்களை உலகத்தின் நாலா பக்கமும் ஓட வைத்துள்ளது. ஓடிவந்த இடத்தில் எம்மை ஒட்ட வைத்துக் கொள்வதற்கும் நாம் நிகழ்த்தும் போராட்டச் சிக்கல், மன உளைவுகள் என்ற சூழலிலும் புலம்பெயர்வு பல சிறப்புக் களைக் கொண்டுள்ளதாக இருக்கின்றது என்று நாம் ஆழ்ந்து நோக்கும் போது புரிகின்றது. புலம்பெயர்வு பல பெண் எழுத்தாளர்களை ஈழத்து இலக்கியத்திற்கும் பெண்கள் இலக்கியத்திற்கும் தந்துள்ளது. இச் சிறுகதை தொகுதி புலம்பெயர் இலக்கியத்தில் பத்தோடு பதினொன்றாக மறைந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பது எமது அவா.

## சிறுகதைகளினினுள்ளே...

***முகம்***

***உமா ஜேர்மனி*** பெண்விடுதலை குறித்த கருத்துக்களை மட்டும் அறிந்து வைத்திருக்கும் ஆண்கள், அவர்களுடைய செயற்பாடுகளில் எவ்வளவு தூரம் முரண்பட்டவர் களாக இருக்கின்றார்கள் என்றும், வெளிப்பார்வைக்கு அவர்கள் தங்களுடன் சேர்ந்து வாழும் பெண்ணுக்கு ஆதரவாயிருப்பவர்கள் போல இருந்தாலும், கருத்துரீதியாக அப் பெண்கள் மீது எவ்வளவு தூரம் மேலாட்சி செலுத்துபவர்களாக இருக்கின்றார்கள் என்பது அந்த ஆண்களுடன் நெருங்கிப் பழகும் போதுதான் தெரியவருகின்றது. மேலும் பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதற்கு சித்தாந்தம், கோட்பாட்டு ரீதியாக வளர்ச்சியடைந்து இருக்கவேண்டும் என்றும் அப்படியில்லாவிட்டால் போராட முடியாதென்றும் ஒரு ஆணினால் கூறமுடியாது

www.tamilarangam.net



என்பதனை மிகவும் ஆணித்தரமாகக் கூறுகின்றது. ஒரு பெண் பெண்ணாக இருந்து பிரச்சினைகளைக் கண்டு கொள்வதே பெண்விடுதலைப் போராட்டத்தின் முதற்படி என்பதை வலியுறுத்துகிறது.

இதில் பெண்விடுதலை பற்றி எவரெவர் பேசலாம், எவரெவர் பேசக்கூடாது என்பது குறித்த விவாதத்தை இரண்டு கதாபாத்திரங்களுக்கிடையிலான உரையாடல் மூலம் தெளிவாகக் காட்டுகின்றார் உமா. பெண்விடுதலை பற்றி பேசும் அல்லது பிரக்ஞை கொள்ளும் பெண்கள் அனைவருமே தங்கள் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக பல ஆண்களுடன் உறவை ஏற்படுத்த மட்டுமே பெண்நிலைவாதம் பேசுகிறார்கள் என்று சமூகத்தில் பெரும்பான்மையானவர்கள் கருதுவதற்கு கிஞ்சித்தும் குறைவில்லாமல்தான் பெண்விடுதலை குறித்து மேடைகளில் முழங்குகின்ற ஆண்களும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கதை தெளிவாகச் சொல்லுகிறது. இங்கு முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இன்னொரு விடயம் என்னவென்றால், சமூக அக்கறை கொண்ட, விழிப்புணர்வு கொண்ட ஒரு பெண்ணுடைய செயற்பாடுகள் ஒரு ஆணுடன் சேர்ந்திருக்கும் போது அதனை அதற்கான முழுப்பரிமாணத்துடன் நிறைவேற்றமுடியாமல் இருப்பதும், அதுவும் அந்தப் பெண்ணுடன் சேர்ந்து வாழும் ஆண் சமூகம் மீதான அக்கறை கொண்டவனாக இருக்கும் பட்சத்தில் அப் பெண்ணுடைய செயற்பாடுகள் இன்னும் மோசமாக முடக்கப்படுவதுதான் நடைபெறுகின்றது. அதாவது ஒரு பெண்ணின் மீதான ஆணின் ஒடுக்குமுறை என்பது செயற்படும் தளங்களில் வேறுபடுகிறதேயன்றி எங்கும் எதிலும் விரவிக்கிடக்கின்றது. கதையின் பின்புலமும் சொல்லவந்த விடயமும் அங்கிங்கென்று இழுபடாமல் கதைசொல்லலின் உணர்வுகளுடே திறமையாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது.

**சுரண்டலின் கொடுக்குகள்**

**தேவா ஜேர்மனி** வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்கள் எப்படி சுரண்டலுக்கு உள்ளாக்கப் படுகிறார்கள் (பாலியல் சுரண்டல் உட்பட) என்பதை, வீட்டு வேலைக்குச் செல்லும் ஒரு பெண்ணின் கதையினூடாகவே மிகவும் அற்புதமாக நகர்த்தியிருக்கும் கதாசிரியை எந்த இடத்திலும் குறுக்கிட்டுத் தன்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லாமல் இருப்பது இக் கதையின் சிறப்பென்று கூறலாம்.

**பொய் முகங்கள்**

**சுகந்தி ஜேர்மனி** சாதி ஒழிப்பு, முற்போக்கு என்று மேடையில் பேசுவதன் மூலம் தங்களை உயர்த்திக் காட்டிக் கொள்பவர்கள் திருமண பந்தம் என்று வரும்போது தங்கள் குடும்ப நிலைமை, சகோதரிகளின் எதிர்காலம் என்பன குறித்து சிரத்தையுடன் இருப்பதாகக் கூறி தப்பித்துக் கொள்ளும் போலிகளை இனம் காட்டுகிறார் சுகந்தி. சூழல் பற்றிய விபரிப்பு மிகவும் இயல்பானதாக இருக்கிறது. எந்தக் காலகட்டத்தில் இது நிகழ்ந்திருக்கலாம் என்று ஓரளவு ஊகிக்கக் கூடியதாக கதை நகர்த்தப்படுகிறது. இப்படியான கதைகள் வரலாற்றுப் பதிவுகளாகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடையில் முன்புபோல் வருமானம் இல்லை. இராணுவமும் இயக்கங்களும் பொடிய ளைப் பிடித்துக் கொண்டுபோய் தாங்களே மொட்டையடித்து விட்டார்கள். ரவுனுக்கை ஆமிக்காரர் சுடுகினம் எண்டு சனம் அடிபட்டு ஓடிச்சுதுகள் இப்ப பார்த்தா இப்பிடி என்று மேல் சாதியினர் என்று கருதப்படுகிறவர்களால் இப்பொழுதும் தாங்கள் எப்படி நடத்தப்படுகிறோம், ஒடுக்கப்படுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கும் கௌரி தெட்டத்தெளிவாக எடுக்கும் நிலைப்பாடும், அதே நேரத்தில் மேல் சாதிக் காரர்கள் என்று எண்ணக் கூடிய சிவாவும் கரனும் தடுமாறும் நிலையும் பிரச்சார வாடையின்றி தெளிவாகக் கதையில் கொண்டுவரப் பட்டுள்ளது.

**நீயும் ஒரு சிமோன் திபோவுவா போல**

**காவேரி நோர்வே** ஒரு பெண்ணை சிமோன் திபோவுவா என்னும் தத்துவவாதியுடன் பெண்நிலைவாதியுடன் ஒப்பிட்டு அவளைத் தங்களுடைய தோழியாக்கும் கைங்கரியம் வாய்ந்த ஆண்கள் எவ்வளவு தூரம் தங்கள் முட்டாள்தனத் தைக் காட்டுகின்றார்கள் என்பதை இச் சிறுகதை தெளிவாகக் காட்டுகிறது. சிமோனும் சார்த்தரும் இணைந்து வாழ்ந்தது ஒரு பெண்ணியப் பார்வையில் எப்படி ஏற்றுக் கொள்ள முடியாத வாழ்க்கை என்பதை ஒரு சில உரையாடல்கள் மூலம் மிகத் தெளிவாகத் துல்லியமாகக் காட்டுகின்றது சிறுகதை. சிமோன் என்னதான் பெரிய தத்துவவாதியாக இருந்தாலும் அவருடைய செயற்பாடுகள் அனைத்தும் சார்த்தரைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டிருந்தன என்பதும், அவர் சார்த்தரில் தங்கி யிருந்தது போன்ற நிலையிலேயே அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பது பற்றியும் தொண்ணூறுகளில் உள்ள பெண்நிலைவாதிகள் எவ்வளவு ஆத்திரமும் மனக்கிலேசமும் அடைந்துள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றார் படைப்பாளி.

மேலும் ஒரே வாக்கியம் நீயும் ஒரு சிமோன் தி போவுவா போல, சொற்களில் எந்தவித மாற்றமும் இன்றி ஒரு பெண்ணின் வளர்ச்சிப்படியின் ஒவ்வொரு கால கட்டங்களிலும் வெவ்வேறு ஆண்களால் அச்சொட்டாக ஒப்புவிக்கப்படும்போது அவளுடைய அனுபவங்கள் அவளுடைய கற்றல்கள், அவளுடைய தேடல்கள் எவ்வாறு தன்னை நோக்கிய விமர்சனமாகவும் அதேநேரம் மற்றவர்களைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்பதைக் கூறுகின்றார். இளமைக் காலத்தில் அதாவது போதியளவு அனுபவங்கள் பற்றிக் கொள்ளாத ஒரு காலத்தில் ஒரு ஆணின் புகழுரைகள் தன்னுடைய நுண்ணிய உணர்வுகளைத் தாங்கிக் கொள்ளும், அதனை மெருகேற்றும், உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் கூடிய இன்பசுகத்தில் ஒரு பெண் தன்னை இழந்து போவதையும் வாழ்க்கை அனுபவங்கள் ஒன்றுசேரும் போது இப்படியான போலியான வர்ணிப்புக்கள் எல்லாம் அவளை ஒன்றுமே செய்துவிடாது தனியே சுயாதீனமாகச் சிந்தித்து செயலாற்றக் கூடிய ஒரு நிலைக்குத் தள்ளுவதையும் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது.

சிமோனது சார்த்தருடனான வாழ்வுமுறையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் காவேரி ஓரிடத்தில் கோட்டை விட்டு விடுகிறார் என்றுதான் தோன்றுகிறது. சார்த்தரின் மீதுள்ள ஆத்திரம், வெறுப்பு அல்லது சிமோன் சார்த்தரை விட்டு விலகிப் போய்விட

www.tamilarangam.net



வேண்டும் என்னும் ஆதங்கம் அவரை இப்படி சொல்லவைக்கிறது. அதாவது நெல்சன் ஆல்கிரேனை சிமோன் மணந்து கொண்டு சார்த்தரை விட்டு விலகி இருந்திருக்க வேண்டும் என்று. திருமண பந்தமில்லாமல் வாழும் சிமோனும் சார்த்தரும், சார்த்தரை விட்டு விலகமுடியாதிருக்கும் சிமோனும் என்று கூறிக் கொண்டு செல்லும் படைப்பாளி ஏன் சிமோனை திருமண பந்தத்திற்குள் தள்ள முனைகிறார் என்பதுதான் தெளிவானதாக இல்லை. திருமண பந்தம், அதன் சட்டதிட்டங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் ஆணாதிக்கம் கொண்டவை என்பதும், ஏன் நெல்சனுடன் மட்டும் சென்று சேர்ந்து வாழவேண்டும் என்று படைப்பாளி நிர்ப்பந்திக்கிறார் என்பதும் முரணாக உள்ளது. கொதிக்கின்ற எண்ணைச் சட்டியினுள் இருந்து எரியும் நெருப்புக்குள் தள்ள முனைகின்றாரோ என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. சிமோன் சார்த்தருடன் என்னதான் நண்பியாக வாழ்ந்தாலும் அவளுடைய மிகநுண்ணிய உணர்வுகளை விழிக்கவைக்க அல்லது அதனைக் கண்டுகொள்ள நெல்சனால்தான் முடிந்தது என்பதை அழகாகக் கூறுகிறார்.

கோட்பாட்டு ரீதியான பார்வைகள் ஒரு போராட்டத்தை எடுத்துச் செல்வதற்கான முனைப்புக் கொண்டவர்களுக்கு அதனை வென்றெடுப்பதற்கான அமைப்புக்களிற்குத் தேவை. அதேநேரம் தனிநபர்களுக்கிடையேயான உணர்வுப் பரிமாற்றங்கள், ஒருவரில் ஒருவர் (ஒருத்தியில் ஒருத்தி, ஒருவனில் ஒருவன், ஒருவனில் ஒருத்தி, ஒருத்தியில் ஒருவன்) தங்கள் தங்களை இழந்து போவது என்பது மிகவும் நுண்ணியமான உணர்வுகள் சார்ந்த விடயம். அந்த உணர்வுப் பகிர்தலில் ஒருவரில் ஒருவரை இழந்து போவதும் ஒருவரின் கருத்தாளுமையின் கீழ் ஒருவர் முடங்கி தங்களை இழந்து போவதையும் ஒன்றில் இருந்து மற்றதைப் பிரித்துப் பார்க்காமல் சேர்த்து அடையாளம் காண்பது அபத்தம் என்றுதான் தோன்றுகின்றது. நெல்சன் கூட சார்த்தரிடம் சிமோன் திரும்பிப் போவது குறித்து எரிச்சல் படுகிறான். என்னிடம் வந்து இருந்துவிடு என்று மறுபக்கத்தால் பலவந்தப்படுத்துகிறான். சிமோனால் முடியும் முடியாது என்பது ஒரு புறம் இருக்க, அவள் தனக்கென்று முழுமையாக இருந்தால் என்ன என்ற ஆதங்கம் தான் நெல்சனிடமிருந்தும் வெளிப்படுகிறது. சார்த்தரும் சிமோனும் இணைந்து வாழும் வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்ட பின் என்ன நடந்ததென்று கதாசிரியர் கருதுகின்றாரோ அதே நிலைமை நெல்சனுடன் சேர்ந்திருக்கும் போது ஏற்படாதென்றோ அல்லது சிமோன் சார்த்தரின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருந்தாரென்றோ சொல்லமுடியாது. ஒருபுறம் என்னதான் கோட்பாட்டு ரீதியான விளக்கங்களுடன் சிமோன் இருந்தாலும் அவரில் அகவயமான மாற்றம் முற்றுமுழுதாக ஏற்பட்டுவிடவில்லை என்று கொள்ளத்தான் தோன்றுகிறது.

### அடுத்த காலடிகள்

**நளாயினி இந்திரன்**
**லண்டன்**

ஒரு பெண் தனது உரிமைகள் மறுக்கப்படும்போது அதற்காகப் போராடுவாள், போராடுவதற்கு முனைவாள் என்று சொல்ல முனைகிறார் படைப்பாளி. கதை அவர் சொல்லவரும் விடயத்தை இறுக்கமாகக் கட்டமைக்க ஒத்துழைக்கவில்லை. இக் கதை பல விடயங்களை தொட்டுச் செல்கிறது.

www.tamilarangam.net

**தஞ்சம் தாருங்கோ**

**நிருபா**
**ஜேர்மனி**

இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு வருவதற்குப் புறப்படும் ஒவ்வொரு பெண்ணும் ஏஜென்சிக்காரர்களாலும் அவர்களுடன் சேர்ந்து பிரயாணம் செய்யும் அல்லது அவர்கள் சந்திக்கும் ஏனைய ஆண்களாலும் எவ்வாறு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதில் ஏற்படும் வேதனையை, மனக்கொதிப்பை, ஆதங்கத்தை இன்னும் அதனால் ஏற்படும் அவலங்களை மிகவும் நேர்த்தியாக வாசகியின் அல்லது வாசகனின் நெஞ்சைத் தொடும் வண்ணமான மொழிநடையில் கூறுகின்றார் நிருபா.

இந்தத் தொகுப்பில் உள்ள ஏனைய கதைகளுடன் ஒப்பிடும்பொழுது இந்த எழுத்து நடை மிகவும் வித்தியாசமானது. எங்களுடைய நிலையைப் பாருங்கோ, உங்களுக்கு மனதில் ஈரமே இல்லையா என்று இங்கு ஏற்கனவே தஞ்சம் புகுந்திருக்கும் இலக்கிய கர்த்தாக்கள் அல்லது இங்கு வந்ததனால் இலக்கிய கர்த்தாக்களானவர்கள் அனைவரும் இந்தத் துயரங்களைப் படைப்புக்களாக்கியதுடன் நின்று விட்டதையும் அமைப்பு ரீதியாக இந்தக் கொடுமைகளிற்கு எதிராகப் போராடுவதற்கு எந்த முயற்சியும் எடுக்க முனையாமல் இருக்கும் இந்த முற்போக்காளர்களோ அல்லது இலக்கியவாதிகளோ இவ்வளவு காலமாகத் தங்கள் சொந்த விடயங்களை மட்டும் கவனித்துக் கொண்டிருப்பதை ஆவேசமாகக் கேள்வி கேட்கிறாள்.

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருத்தியும் சந்திக்கும் இடர்கள், அவலங்கள் நல்ல இலக்கியத்தரமாக வித்தியாசமான மொழிநடையுடன் மிகவும் இலாவகமாகப் படைக்கப்பட்டிருக்கின்றது. கதை நேரடியாகச் சொல்லப்பட்டாலும் கதையின் மொழிஓட்டம், உரையாடல்கள் என்பன மிகவும் நேர்த்தியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. புலம்பெயர் இலக்கியத்திற்கு சாட்சியாக அமையும் நல்ல கதைகளில் இதுவும் ஒன்று என ஆணித்தரமாகக் கொள்ளலாம்.

ஒரு சிறு நெருடல்.

ஓரிடத்தில், உங்களுடைய சோசல் காசு கிடைக்காமல் போனாலும் எண்டு அரசாங்கத்த எதிர்க்கமாட்டியள் என்று இங்கு ஏற்கனவே தஞ்சமடைந்திருப்பவர்களிடம் கேட்கும் கதைசொல்லி, அடுத்த பந்தியில் பொலிசுக்காரன் தோளில் கை வைக்க திருப்பி கதைத்தால் தஞ்சம் தரமாட்டாங்கள் என்று தனக்குள் பேசி அந்த இம்சையை தாங்கிக் கொள்கிறாள். இரண்டையும் ஒரே தளத்தில் வைத்து ஒப்பிடமுடியாவிட்டாலும் அங்கிருந்து தப்பி இங்கு வருபவர்கள் தஞ்சம் தரும் நாடுகளுக்குள் புகுந்து பாதுகாப்பாக இருக்க இடம் கிடைத்துவிட்டால் போதும் என்ற தன்மை இரண்டு உரையாடல்களிலும் தொக்கி நிற்பது தெரிகின்றது.

கதையின் இறுதிப் பகுதியில் அமையும் படிமக் குறிப்பு மிகவும் அழுத்தமானதும் கதைக்கு மேலும் உரம் சேர்ப்பதாகவும் அமைகிறது.

www.tamilarangam.net



**வல்லைவெளி தாண்டி**

**சந்திரா இரவீந்திரன்**
**லண்டன்**

தாயகத்தின் யுத்த சூழல் அதற்குள் ஒரு குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரிடையேயும் உள்ள மென்மையான உணர்வுகள். இவை எல்லாவற்றையும் மிக லாவகமாக எடுத்துச் சொல்லி எங்களையும் தன்னுடன் பயணித்துச் செய்யவைக்கிறார் படைப்பாளி. போர்ச்சூழல், இயக்கங்களின் நடமாட்டம், இராணுவக் கெடுபிடிகள், ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும் போது இராணுவ இடைமறிப்புக்கள், கேள்விகள், பதில்கள், மனக்கிலேசங்கள் என்று கதை நகர்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருமித்து வளர்ந்த சகோதரர்கள் கூட நினைத்தவுடன் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு முடியாத யுத்தசூழல் மிகவும் நயத்தோடு நகர்த்தப்படுகிறது.

அக்கா, தங்கை, தம்பி பாசத்தினூடு ஓடும் மெல்லிய இழைகள், ஒரு ஆண் போராளி தனது மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம். தங்களுடைய சகோதரன் போராளியாக இருக்கின்றான் என்பதைப் பெருமையாகக் கருதும் அதேநேரம் அதனைப் பொறுப்பாகவும் கருதும் சகோதரிகள். இப்படி ஒரு யதார்த்த சூழலை இலக்கிய நயத்துடன் லாவகமாகச் சொல்கிறார். ஒருத்தி இயற்கையை என்னமாய் ரசிக்க முடிகிறது, எப்படி இயற்கையுடன் ஒன்றிப் போகமுடிகிறது. மனசு பட்டாம்பூச்சி போல் பறக்கும் மனநிலை எல்லாவற்றையுமே மிகவும் அற்புதமாகப் படைத்திருக்கிறார். என்னதான் யுத்த சூழல் நிலவினாலும் அங்கேயும் எல்லாமே நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை அலட்டிக் கொள்ளாமல் நயமாகச் சொல்கிறார் படைப்பாளி.

**எய்தவர் யார்**

**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**
**லண்டன்**

ஆசிய நாட்டவர்கள் தங்களுடைய நாட்டில் வந்து குடியேறுவது தங்களுடைய இருப்பிற்கு அச்சுறுத் தலாக இருப்பதாகக் கருதும் மேலைநாட்டு இளை ஞர்கள் எப்படியான குரோத உணர்வுடனும் இனவெறியுடனும் நடந்து கொள்கிறார்கள் என்பதை அனுபவங்களினுடாக வெளிப்படுத்துகின்றார். குடும்பம் என்ற பந்தத்தினுள் வரும்போது அதனுடைய இறுக்கம் எவ்வாறு இரண்டு நபர்களின் உறவுமுறையயைப் பாதிக்கின்றது என்பதையும் பொருளாதரா நெருக்கடி உறவுகளின் மீது செலுத்தும் பாதிப்புக்களையும் கதையில் சொல்கிறார். எந்த உறவும் பொருளாதாரத்தின் மீது தான் கட்டப்படலாம் என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

கதையில் சித்தரிக்கும் இரண்டு குடும்பங்களிலும் குடும்ப அமைப்பையும் கௌரவத் தையும் காப்பாற்றுவதற்கு என்ன செய்யவேணடும் என்பதையும் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் வாழ்க்கை எவ்வாறான நிர்ப்பந்தங்களை வாழ்க்கையில் ஏற்படுத்து கின்றது என்பதையும் சொல்லுகின்றது. நிறவெறியைத் தூண்டியவர் யார் என்ற கேள்வியை எழுப்புகிறார்.
அதற்கான பலமான கட்டமைப்பில் கதை இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விலங்குடைப்போம்**

**சந்திரவதனா**
**ஜேர்மனி**

இக் கதையானது தாலிக்கும் உறவுக்குமான பிணைப்பின் பிரமையை உடைக்க வேண்டும் என்ற உணர்வில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் கதாசிரியையின் நோக்கம் நிறைவேறவில்லை என்றுதான் கூறமுடியும். தாலி கட்டினால் மட்டும் கணவனாக முடியுமா? என்ற கேள்வி எழுப்பும் அதே நேரத்தில், தாலி கட்டாமல் ஒரு மேற்கு நாட்டுப் பெண்ணுடன் குடும்பம் நடத்த முடியுமென்றால், அதாவது கணவன் மனைவி உறவைப் பேண முடியுமென்றால் அந்தத் தாலியின் பாத்திரம் என்ன? தாலியைக் கழற்றி வைத்தவுடன் அந்த உறவு கழன்று போகின்றதா அல்லது ஏற்கனவே கழன்று போயிருந்த உறவினால் தாலியைக் கழற்றினாளா? இது கேள்வி.

தாலி என்பது அடையாளச் சின்னமாகத்தான் இருக்கின்றது. உண்மையில் ஒருத்தி ஒருவனை அகவயமாக கணவனாக வரித்துக் கொள்வதில் இருந்து மீள்வது எவ்வளவு தூரம் சாத்தியமாகின்றது என்பது இன்னும் கேள்விதான்...

**கல்யாணச் சீரழிவுகள்**

**சுகந்தி அமிர்தலிங்கம்**
**ஜேர்மனி**

கலியாணத்திற்காக இருந்த சொத்துக்கள் அனைத்தையும் விற்றுக் காசாக்கி திருமணம் நிச்சயிக்கப்பட்டவனிடம் அனுப்பி வைக்கப்படும் ஒரு பெண் இங்கு வரும்போது பெரிய எதிர்பார்ப்புக்கள் எதுவும் இல்லாவிட்டாலும் இப் பெண் இங்கு வந்த பின்பு எந்தவித உரையாடல்களும் இன்றி இரண்டு பேரும் தனித்தனியாக ஒரே வீட்டில் வசிப்பதும் அவளுக்குப் பழக்கப்படாத இந்த ஊரில் ஒரு அறைக்குள்ளேயே கொட்டுக் கொட்டென்று இருப்பதும் கொடுமை. ஏற்கனவே திருமணத்திற்காக நிச்சயிக்கப் பட்டிருந்தவன் அப் பெண்ணை தனக்குப் பிடிக்கவில்லை என்று கூறியதும் ஒருகணம் நிலைகுலைந்து போனாலும் அவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று அடம் பிடிக்காது தனியே வெளியே சென்று தன்காலில் நிற்கக் கூடிய ஒரு வாழ்வைத் தேடிக் கொள்கிறாள். ஒரு பெண் தன்னம்பிக்கையை இழக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

**மாறியது நெஞ்சம்**

**விக்னா பாக்கியநாதன்**
**ஜேர்மனி**

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து வாழும் போது இருவரும் வீட்டிற்கு வெளியே சென்று தொழில் புரிபவர்களாக இருக்கும் போது ஆண்கள் தங்களுக்கு ஒரு நியாயம் பெண்களுக்கு ஒரு நியாயம் என்றுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை எடுத்துச் சொல்கின்றார். பிரச்சினைகள் இருக்கும் போது தீர்த்துக் கொள்ளலாம் ஆனால் சந்தேகம் இருக்கும் போது சேர்ந்து வாழமுடியாது என்று தீர்மானித்து மனைவி வீட்டை விட்டு வெளியேறுகிறாள். பலவிதமான எடுத்துக் காட்டுகளுடன் ஆண் பெண் பக்கங்களை விபரிக்கின்றார் கதாசிரியை. கதையின் இறுதியில் கோசத்துடன் கொடிபிடிக்காமல் இருந்திருந்தால் சிறுகதையின் ஆழம் மேலும் ஒருபடி உயர்ந்திருக்கும்

www.tamilarangam.net



**வேலைக்காரிகள்**

**உதயபாநு**
**ஜேர்மனி**

பணிப்பெண்களாக தொழில் புரிவதற்காக வெளிநாடுகளுக்கு ஏஜென்சிகளால் ஏற்றி அனுப்பி வைக்கப்படும் பெண்களின் வேலை அனுபவங்களையும் அவர்கள் அங்கு வீட்டு முதலாளி அம்மாக்களால் நடத்தப்படும் விதங்களையும் அப் பெண்களின் மன உளைச்சல்களையும் பின்னணி யாகக் கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது. இப்படிப் பணிபுரியும் பெண்களில் சிலர் தாங்கள் தனியே சந்திக்கக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் பரிமாறிக்கொள்ளும் விடயங்களினூடாக காத்திரமான விவாதங்களைக் கொண்டு வந்திருக்கிறார் கதாசிரியை.

பெண்களை தன்னம்பிக்கை அற்றவர்களாக வளர்க்கும் பெற்றோர்களையும் சமூக நிலைமையையும் ஒவ்வொரு பெண்ணுக்கும் யாராவது ஒரு ஆண் பொறுப்பு என்று உளவியல் ரீதியில் தயாரிக்கப்பட்டுள்ளதால் உரிமை, கடமை என எண்ணும் ஆண்கள். அந்த ஆண்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதில் சுகம் காணமுயலும் சகோதரிகள். சகோதரிகளைக் காப்பாற்றவென்று தங்கள் உழைப்பினால் முடியாமல் சீதனத்திற்காகத் தள்ளப்படும் ஆண் வர்க்கம். ஆண்களினால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு அதன்பின் செய்யப்பட்ட கொலைகளை தற்கொலை என்று செய்தி ஊடகங்கள் வெளிச்சமிட்டுக் காட்டும் தன்மை. இவைகளிற்கு எதிராகப் போராடமுடியாமல் இருக்கும் அந்தப் பெண்களின் உதிரி நிலை என்பவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறார் கதாசிரியை. எவ்வளவு மனச்சுமைகளுடனும் இந்தப் பணிப்பெண்களின் உழைப்பு ஈவிரக்கமின்றி உறிஞ்சப் படுகின்றது என்பதை தெளிவாகக் காட்டுகிறது சிறுகதை.

**கானல்நீர்**

**சுகந்தி**
**ஜேர்மனி**

ஒருவரை ஒருவர் காணாமல் ஜாதகப் பொருத்தத்தை மட்டும் பார்த்துச் செய்யப்படும் திருமணங்கள் ஒருபோதும் பொருந்தப் போவதில்லை என்பதையும், வெளிநாடு என்ற மயக்கத்தில் முன்பின் தெரிந்திராத ஒருவரிடம் ஒரு பெண் வந்து படும் இன்னல்களைக் கூறுகின்றது. அதேநேரம் உள்ளூரில் இருக்கும் ஆண்கள் யாராக இருந்தாலும் எங்கள் ஆண்களைப் போல் அவ்வளவு மோசமாக இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையையும் கொடுக்கின்றது. ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனை கஸ்டப்பட்டு ஏதோ ஒரு நம்பிக்கையில் தங்கள் பெண்பிள்ளையை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் ஒவ்வொரு பெற்றோரின் மனநிலையும் என்றுமே தெரிந்திராத ஒரு ஆணைச் சந்திப்பதிலுள்ள மனப் பயங்கள், நடுக்கங்கள் என்பன எடுத்துக் காட்டப்படுகின்றன. இங்கு வந்தவுடன் எதிர்கொள்ளும் புதிய சூழ்நிலையில் அந்நியன் ஒருவனுடன் (எதிர்காலத்தில் கணவனாகப் போகும்) சகஜமாகப் பழகமுடியாது ஒரு பெண் இருக்கும் நிலை எவ்வளவு கடினமானது என்பதையும் அப் பெண்ணுக்கு ஆதரவாக இன்னொருவர் கிடைக்கும்போது இங்குள்ள சூழ்நிலைகளும் சேர்ந்து ஒரு பெண் தனியே வாழ்வதற்கான முடிவை மிக இலகுவாக எடுப்பதற்கு முடிகின்றது என்பதை கதையாகச் சொல்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கசப்பான பலாக்கனி**

**மல்லிகா ஜேர்மனி** ஒரு ஏழைக் குடும்பத்தின், எந்த ஆதரவுமற்று இருக்கும் ஒரு விதவைத் தாயின் மனப்போராட்டங்களையும் வாழ்க்கையில் அவள் எதிர்கொள்ளும் கஸ்டங்களையும் இளமைப் பராயத்தின் ஏக்கங்கள் எவ்வாறு முன்பின் தெரியாத ஒருவனை நம்பி ஏமாறுவதற்குத் துணை போகின்றன என்பதையும் தனக்கேயுரிய மொழிநடையில் மல்லிகா எழுதியிருக்கிறார். இச் சிறுகதையைப் படிக்கும்போது இது உண்மைச் சம்பவமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. சம்பவத்தை எதுவித கலப்புமின்றி அப்படியே பதிவு செய்திருக்கிறார் கதாசிரியை. தனித்து வசிக்கும் ஒரு பெண் இந்தச் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கூறுகிறது கதை.

**மூளைக்குள் ஒரு சமையலறை**

**நந்தினி ஜேர்மனி** குடும்பத்தலைவியாக(?) இருக்கும் ஒரு பெண் நாள் முழுவதும் ஓடியோடி உழைத்த பின்பும் ஓய்வெடுக்கவென்று படுக்கைக்குச் சென்ற பின்பு கண்ணயரும் வரை கிடைக்கும் கணப் பொழுதில் கூட அடுத்த நாளைக்கான வேலை அட்டவணையை தயாரிக்கும் வேலையில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கும் நிலையை அன்றாட வேலைச் சுழற்சியை கதை கூறுகிறது. இதில் இன்னுமொரு முரண்நகை என்வென்றால் ஒவ்வொரு வேலையைப் பற்றி சிந்திக்கும் பொழுதும் அந்த மனிசன் என்ன சொல்லுமோ என்பதைக் கவனத்தில் கொண்டுதான் அவளுடைய அன்றாட நேர அட்டவணையைத் தயாரிக்கிறாள். தனக்கு புருஷனாக அல்லது கணவனாக இருக்கும் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டிருப்பவன் மீது எந்தவிதமான பரிவோ அவனுக்காக ஏக்கமும் இல்லாதபோதும் கூட அவனுடைய மறைமுகமான ஆதிக்கத்தின் கீழ்தான் அவளுடைய அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்படுகின்றன என்பதை ஒவ்வொரு நிகழ்விலும் சுட்டிக்காட்டுகிறார் படைப்பாளி. தன் குடும்பத்தைச் சுற்றியே அனைத்து வேலைகளையும் கட்டமைத்துக் கொண்டிருக்கும் அவள் தன்னுடைய பசியைப் பற்றியோ தன்னுடைய ஆடையணி களைப் பற்றியோ, இன்னும் தன்னை வேலைப்பளு அமுக்குகின்றது என்பதைப் பற்றியோ கவலைப்படாமல் இருப்பதை மிகவும் சிக்கலில்லாதபடி கதாசிரியை நகர்த்திச் செல்கிறார். கதாசிரியை இடையில் புகுந்து அபிப்பிராயம் சொல்லாமல் இருந்திருந்தால் கதை இன்னும் நேர்த்தியாக இருந்திருக்கும்.

**சுபைதா ராத்தாவின் பொழுது**

**நந்தினி நோர்வே** இஸ்லாமியப் பின்னணியைக் கொண்ட கதை. குடும்பத்தில் மனைவி என்ற ஸ்தானத்தில் அமர்த்தி வைத்திருக்கப்பட்ட ஒரு பெண், எந்த நேரமும் கணவனின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நுனிக்காலில் நின்று கொண்டு சுழன்றோடி திரிந்து கொண்டிருக்க வேண்டும். வீட்டில் என்ன நடக்கின்றது, போகின்றது, வருகின்றது என்பதற்கான மேற்பார்வைப் பணியை செய்யும் கணவன் அந்தஸ்தைப் பெற்றிருக்கும் ஆண். வீட்டில் இருக்கும்போது சகலரையும் (சகல ஆண்களையும்) அத்துடன் வீட்டிற்கு வரும் சகல விருந்தினர்

www.tamilarangam.net



களையும் ஒரு சிறு குறைகூட விடாமல் கவனித்துக் கொண்டிருப்பவளாகவும் சிறிது ஓய்வு கூட கிடைக்காது உழைப்பதும் அதை எவரும் கண்டு கொள்ளாமல் இருக்கும் அவலமும் இக் கதையில் மிக அருமையாக வெளிப்படுத்தப் படுகின்றன. இங்கு பெண்ணாக இருப்பதால் ஏற்படும் துன்பங்களுடன் சேர்ந்து ஒரு முஸ்லீம் பெண்ணாக இருப்பதானால் ஏற்படும் கஸ்டங்களும் சேர்ந்து இரட்டிப்பு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் சுபைதா.

இஸ்லாமியக் குடும்பச் சூழலின் பேச்சு வழக்கு இயல்பாக வந்திருக்கின்றது. வீட்டில் இருந்து உழைக்கும் அவளுக்கு நேரத்திற்கு சாப்பாடு கிடைக்கிறதா? சீ என்ன நேரத்திற்கா? சாப்பாடு கிடைக்கிறதா என்று பரிவு கொள்வதற்குக் கூட ஆளில்லாமல் அல்லது சாப்பாடு இருக்கும்போது சாப்பிடுவதற்கு நேரம் ஒதுக்க முடியாமல் அந்தப் பெண்ணின் உழைப்பை, உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத, உணர்ந்து கொள்ளாத ஜடங்களாக இந்த ஆண் ஜென்மங்கள் இருக்கிறார்கள் என்பதை மிக அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் நந்தினி.

**கமலா காத்திருக்கிறாள்**

**கருணா ஜேர்மனி**

தன் மனதுக்குப் பிடித்தது போல் ஒரு வாழ்க்கைத் துணைவன் தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் ஒரு பெண், ஒரு வருடத்தி லேயே ஒரு குழந்தைக்குத் தாயாகி திருமணத்தின் பின் ஊனமாக்கப்பட்டு விட்ட கணவனுடனும் வாழ்க்கை நடத்துவதென்பது எத்துணை சிரமம் என்பதைக் கூறும் கதை. இடையிடையே ஆணின் சில உணர்ச்சி வெளிப்பாடுகள் கூறப்பட்டாலும் அந்தப் பெண்ணுடைய ஏக்கங்கள் அபிலாஷைகள், குழந்தைக்கும் அவளுக்கும் இடையேயான உணர்வுப் பரிமாற்றங்கள், குழந்தைக்கும் தந்தைக்குமிடையிலான தொடர்புகள் பற்றி எந்தவிதமான விபரிப்புகளும் இல்லாமல் கதை நகர்த்தப்படுகிறது. வெறும் நம்பிக்கையோடு காத்திருக்கும் கமலா. அவள் படும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாத தந்தை கருணைக் கொலைக்கு சம்மதிக்க வேண்டுகிறார். இவைகள் எல்லாவற்றையும் மீறி அவள் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர் கொள்கிறாள்.

**ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீள முடியும்**

**சுருதி சுவிஸ்**

ஒரு ஒத்தைத் தண்டவாளம் தனது வாழ்நாளில் கண்ட ஒரு கோரத்தைப் பற்றிச் சொல்லுகிறது. கதை சொல்லும் முறை மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. ஒரு பெண்ணின் தற்கொலையையும் ஒரு குழந்தையின் கொலையையும் இத் தண்டவாளம் மூலமாக சமூக யதார்த்தங்கள், சமூகத்தில் உள்ள சிக்கல்கள் அந்தக் கொலையினதும் தற்கொலையினதும் மீதான கேள்விகள், சமூகத்தின் மீதான விமர்சனங்கள் என்பவற்றை கேள்விகள் கேள்விகளாகவே கதாசிரியை கேட்கிறார். இக் கேள்விகள் அனைத்தும் கேட்கப்படக் கூடிய வெளி கதையில் இருக்கிறது. ஒரு முடிந்த முடிவாக ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் தான் கொலையும் தற்கொலையும் நடந்திருக்கக் கூடும் என்று ஒரு பக்கக் காரணியை மட்டும் காட்டி நிறுவ முனையாமல் சமூகத்தின் மீது கேள்விக் கணைகளைத்

www.tamilarangam.net

தொடுக்கின்றார். இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடவைப்பதும் அதற்கான நகர்வும்தான் கதாசிரியையின் நோக்கமாக இருக்கலாம். இந்தக் கேள்விகளிற்குப் பதில் தேடுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதுதான் இதன்மீது தொக்கி நிற்கும் கேள்வி.

**ஒரு மானுடத்தின் குரல்**

**ஆர்த்தி நோர்வே** ஒரு பெண் தனது மாதவிடாய் வரும் காலத்தை அடையும்போது அவள் மீது எவ்வளவு கட்டுப்பாடுகள் சுமத்தப்படுகின்றது என்பதைப் பற்றிய அங்கலாய்ப்புக்கள் சமூகத்தின் மீதான விமர்சனத்துடன் முன்வைக்கப் படுகின்றன. கதை சொல்லும் நிகழ்காலம் ஒரு பெண்ணின் முதல் மாதவிடாய் வந்த காலம். பெண்களைப் பண்டப் பொருளாகப் பார்க்கும் விடயமும், உற்பத்தி இயந்திரமாகக் கருதும் விடயமும் கருத்துக்கள் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

**அத்துமீறல்கள்**

**ராஜினி நோர்வே** ஒரு பெண்ணின் அன்றாட வாழ்க்கையில் ஆண் பஸ் கண்டக்டர் தொடக்கம் தன்னுடன் நெருங்கிப் பழகும் நண்பன் வரை தன் உடலை தன் சம்மதமின்றி உரசும் இந்த ஆண் ஜென்மங்களின் வக்கிரங்களைச் சகித்துக் கொள்ள நேரிடுகிறது என்பதையும், இதுவும் ஒருவகையில் விபச்சாரம் தான் என்பதைக் கூறிச் செல்கிறார் கதாசிரியை. இந்துமதக் கோவில்களில் இருக்கும் சிற்பங்கள் எல்லாம் பெண்ணை அம்மணமாகக் காட்டுவது ஏன்? ஆணை அம்மண மாகக் காட்டமுடியவில்லையா? ஆண்களின் பாலியல் இச்சைகளைத் தீர்ப்பதற்காக சஞ்சிகைகள், திரைப்படங்கள் போல் எங்களுடைய கோயில்களின் சிற்பங்களும் அவர்களிற்கு (ஆண்களுக்கு) பாலியல் தணிப்பைக் கொடுப்பதற்காகவே படைக்கப் பட்டிருக்கின்றன. விளம்பரத்திற்குப் பெண்ணுடல் பண்டமாகப் பாவிக்கப்படுதல், பெண்ணின் உடலை நிர்வாணமாகக் காட்டுவதுதான் கலை என்று கூறுதல். இப்படி நிறைய விடயங்களை உதாரணங்களினுடாகச் சொல்லிச் செல்லும் கதாசிரியை தன்னுடைய கருத்துக்களை இடையில் செருகுவது படைப்பின் மீது பிரச்சார வாடையைக் கொடுக்கிறது.

**வடிகால்**

**வசந்தி கனடா** கதையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஒரு பெண் குழந்தைகள் மீது எவ்வாறு கரிசனை கொண்டிருக்கிறாள் என்பதையும் தன்னால் காதலிக்க முடிந்த ஒரு ஆண் எடுத்த எடுப்பிலேயே தனது குழந்தை களுக்குத் தகப்பனாகிவிட முடியாது என்பதில் நிதானமாகவும் உறுதியாகவும் இருக்கிறாள். ஆனால் ஆணின் சிந்தனை எப்போதும் தாங்கள் இருவரும் தங்களிற்கு இடையேயான காதல் என்றில்லாமல் சமூகம் என்ன நினைக்கும் என்ற கேள்வி முதலில் எழுகின்றது. சமூகத்தில் உள்ள நடைமுறைகளுடன் ஒத்துப்போகக் கூடிய உறவென்றால் பாதுகாத்துக் கொள்வோம் அல்லது துண்டித்துக் கொள்வோம் என்பது ஆணின் பக்கம். அந்தப் பெண் தன்னுடைய எதிர்காலம் பற்றி நிதானமாக யோசிக்கிறாள். அப்படியிருந்தும் இவர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும்

www.tamilarangam.net



உறவின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்ளும்படி அந்த ஆண் கேட்கும் போது அவள் என்ன சொல்கிறாள், அப்படியென்றால் இந்த உறவை நான் முறித்துக் கொள்கிறேன். நீங்கள் கணவன் அந்தஸ்தைப் பெறுவதற்கு அல்லது உங்களுக்கு மனைவி ஸ்தானத்தில் ஒருத்தி தேவை என்றால் அதற்கு இன்னொரு பெண்ணை நீங்கள் தேடிக் கொள்ள வேண்டியதுதான். எக் காரணம் கொண்டும் அவள் தன்னை ஒரு இறுக்கமான திருமண பந்தத்தில் இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதில் அவள் தெளிவாகத்தான் இருக்கிறாள். ஆணின் உரையாடல்கள்தான் அவளுடைய முடிவு சரியா பிழையா என தடுமாற வைக்கின்றன.

இங்கு சம்பந்தப்படும் ஆண் காதலனாக இருந்தாலும் அவனை ஒரு ஆணாக உணர்வது முக்கியமான விடயம். ஒருத்தியினுடைய காதலனாக இருப்பதனாலேயே அவனுக்கு அவள் மீதான எல்லாவித உரிமையும் இருக்கமுடியாது என்பதிலுள்ள தெளிவு மிக நன்றாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு தெளிவாக இருக்கும் அந்தப் பெண், அவனுடைய வீட்டில் இருக்கும் போது அவனின் மகனுக்கான சாப்பாட்டைத் தயாரிப்பது, மகனைப் பாடசாலையில் இருந்து கூட்டிக் கொண்டு வருவதை ஞாபகப்படுத்துவது என்பன ஒரு பெண்ணிற்கென வரையறுக்கப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கான எதிர்பார்ப்பையும் ஆணின் அதிகாரத்திற்கு கட்டுப்படுவதற்கான நிர்ப்பந்தத்தையும் மீண்டும் கொண்டுவர முனைகிறது.

**சதுரங்கம்**

**தயாநிதி**
**நோர்வே**

கதையினூடு இரண்டு இழைகள் ஓடுகின்றன. வித்தியாசமான உத்தி முறையில் கதை எழுதப்பட்டுள்ளது. தாயையோ தகப்பனையோ அறிந்திராத, அகதி முகாம் ஒன்றில் தனது அடிப்படைக் கல்வியைக் பெற்றுக் கொண்ட ஒரு அகதியின் விண்ணப்பம் ஏதோ ஒரு தகவல் உண்மையில்லை என்பதன் அடிப்படையில் நிராகரிக்கப்படுகின்றது. வாழ்வதற்கு இடமில்லாது அலையும் அகதி ஒருபுறம், எங்கு வாழ்வது என்ற தெரிவுகளுடன் உள்ள மனித உயிரி ஒருபுறம். கதைசொல்லும் பாத்திரம் இறுக்கமாகக் கட்டமைக்கப்படவில்லைப் போல் தெரிகிறது.

**அக்கரைப்பச்சை**

**றஞ்சி**
**சுவிஸ்**

அகதி வாழ்க்கை அக்கரைமாட்டுக்கு இக்கரை பச்சை என்று நாடு விட்டு நாடு மாறும் தன்மை. கணவனும் மனைவியும் சேர்ந்து வாழமுடியாத நிலை. வாழ்க்கையை ஸ்திரமாகத் தொடங்கு முன்னரே அது நிலைகுலைந்து போவது. ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பமாகி வாழும் அகதி வாழ்க்கையிலும் சின்னச் சின்ன ஆசைகள். கடைசியில் எதுவும் இல்லாமல் சிதைந்து போவதையும், அடுத்ததொரு வாழ்க்கைக்கான காத்திருத்தலையும் படாடோபம் எதுவும் இல்லாமல் மிகவும் சுருக்கமாகச் சொல்கிறார்.

முன் அட்டையில் எதிர்காலம் பற்றி கேள்விக் குறியுடன் தன் முகத்தை இரு கைகளிலும் ஏந்தியபடி, தாங்கியபடி இருக்கும் ஒரு பெண். செம்மையாகவும்,

www.tamilarangam.net

எளிமையாகவும், நேர்த்தியாகவும் ரவி(சுவிஸ்) யினால் வடிவமைக்கப்பட்டு நூலுருப் பெற்றிருக்கும் 'புது உலகம் எமை நோக்கி' எல்லோர் கவனத்தையும் பெறும் என்பதில் ஐயமில்லை. இந்தத் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் எந்தக் காலத்தில் வெளிவந்தவை என்பது பதியப்படாமல் இருப்பது, இத்தனை நிறைவுகளுக்கிடையிலும் ஒரு குறையாகவே இருக்கிறது.

## நூல் அறிமுகம்

ரஞ்சி (சுவிஸ்)

'எனக்குள் பெய்யும் மழை' 22 ஆசியக் கவிஞைகளின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக ஜமுனா ராஜேந்திரனால் மொழிபெயர்க்கப்பட்டு, எக்ஸில் இனால் வெளியிடப்பட்டுள்ளது. குடும்பம், சாதி அமைப்பு, சமூக பொருளாதாரக் கட்டுமானம் அனைத்தும் பெண்களை ஆண்களின் பிற்சேர்க்கைகளாகவே கருதும் இவ்வேளையில் பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகளை பெண்களே ஏற்கும் வண்ணம் இவ் ஆணாதிக்க சமூகம் கட்டமைக்கப்பட்டு உள்ளது. கல்வி, தொடர்பு சாதனங்கள், புலம்பெயர் வாழ்வின் அவலம், பெண்ணைப் போகப்பொருளாகவும், உணர்வும் சிந்தனையுமற்ற பதுமையாகவுமே சித்தரிக்கப்பட்டு, பெண்களின் உணர்வுகள் மழுங்கடிக்கப்படுகின்றன. குடும்பம், கலாச்சாரம், என்ற குறுகிய வரையறைக்குள் நில்லாமல் இந்த 22 கவிஞைகளும் தமது உணர்வுகளை தத்தமது கவிதைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கிஸ்வர் நஹீத்,

நாங்கள் பாவம் நிறைந்த பெண் ஜென்மங்கள்
இருள் எம்மைத் தொடர்ந்து வந்தாலும் கூட
எமது ஒளிரும் விழிச்சுடரை அணைக்க முடியாது
உடைந்து நொறுங்கி தரைமட்டமாகின சுவர்களை
மறுபடி கட்டியெழுப்ப
எம்மை வற்புறுத்த வேண்டாம்.

என்று தனது கவிதையில் பெண்கள் பாவம் நிறைந்த ஜென்மங்கள் ஆக்கப்பட்டாலும் பெண்கள் வலிமையுடையவர்கள் என்றும், இன்னுமொரு கவிதையில்,




எனக்குள் பெய்யும் மழை

நீ பேச வேண்டுமென்று விரும்பினால்
உனக்கு தண்டனை மரணம்
நீ மூச்சுவிட விரும்பினால்

(தொடர்ச்சி பக்.72)

www.tamilarangam.net



# தேவமஞ்சம் தீப்பிடிக்கிறது

## சுரயஹன கினிகனீ

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான பாலுணர்வு என்பது காலம் காலமாகவே ஆண்களுக்குரிய ஒன்றாகவே கருதப்பட்டு வருகின்றது. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது என்பது மறுக்கப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் இது குறித்த நிலைப்பாடுகள் வரவேற்கத்தக்கதாக இருப்பினும் மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் இது பேசப்படாத பொருளாகவே இருக்கின்றது. பாலற்ற நிலைதான் விடுதலையின் உச்சம் என்றாகும்போது, ஓரினப் பால்புணர்வு என்பது இங்கு அதிகாரத் திற்கு எதிரான செயற்பாடாக மாறும்போது, உடல் மீதான ஆதிக்கமும் விலகும்.

இந்த வகையில் இலங்கையில் சினிமாத்துறை வரலாற்றில் ஒரு மாற்றுச் செயற்பாடாக பெண்களுக்கிடையிலான பாலியல் உணர்வுகளைச் சித்தரிக்கும் படமாக 'சுரயஹன கினிகனீ (தேவமஞ்சம் தீப்பிடிக்கிறது) திரையிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவில் லெஸ்பியன் உறவு சம்பந்தமான ஃப்யர் எனும் திரைப்படம் சர்ச்சைக்குரியதாக்கப் பட்டது யாவரும் அறிந்ததே. அவ்வாறான திரைப்படமாக சுரயஹன கினிகனீ எனும் படம் உள்ளதாக கூறப்படுகிறது. இப் படத்திற்கு X (கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும் என்பதை எக்ஸ் என்ற அந்த குறியீடு குறிக்கிறது) 'சான்றிதழ்' வழங்கப்பட்டுள்ளது.


ஒரு பங்களாவில் வீட்டுப் பணிப்பெண் (குமுதினி நிலவீர) அதன் சொந்தக்காரியான வீணா ஜயக்கொடியுடன் வசித்து வருகிறார். இதேவேளை வீணாவின் வீட்டின் இன்னொரு சிறிய பகுதியில் புதிதாக திருமணம் முடித்து வந்த ஒரு தம்பதியினர் (சிறியந்த மெண்டிஸ், சனோஜா பிபிலே) வாடகைக்கு தங்கி வருகின்றனர். குழந்தை பெற்று குடும்பமாக வாழ்வதில் மனைவி சனோஜாவுக்கு அதிக ஆர்வமும் ஆசையும் உள்ளது. மாறாக கணவனோ தனது உழைப்பு எம்மிருவருக்கும் போதாது குழந்தை வந்தால் குழந்தையின் கதி என்னாவது எனக் கூறி மனைவியின் உணர்வுகளைத் தட்டிக் கழித்து வருகிறான். மேலதிகமாக உழைப்பதற்கு கணவன் பாதுகாப்பு அதிகாரியாக இரவு நேரக் கடமையில் ஈடுபடுகின்றான். மனைவி இரவு நேரத்தில் தனிமையில் உறங்குவதை வீட்டுச் சொந்தக்காரி அவதானிக்கிறாள். இச் சந்தர்ப்ப த்தைப் பயன்படுத்தி வீணா சனோஜாவை லேடிஸ் கிளப்பிற்கு அழைக்கிறாள். தனது கணவனின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு சனோஜாவும் செல்கின்றாள். இங்கு மது அருந்தி போதையில் வீட்டுக்கு வருகின்றனர். சனோஜா போதையில் இருக்கும்போது வீணா பாலியல் உறவில் ஈடுபடுத்துகிறார்.

இவ்வாறாக இவர்களது பாலியல் உறவு தொடர்கிறது. இதற்கிடையில் வீட்டு வேலைக்காரி தனது எஜமானிக்கு இரவு நேரங்களில் ஒரு நோய் இருப்பதாகவும் இதனால் தனது உடம்பு முழுவதையும் அருகிலுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்வதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுரயவநன கினிகனீ

## சினிமா மதிப்பீடு

**வரலாற்றில் பெண்கள் மரபை மீறிய போதெல்லாம் பைத்தியம் பிடித்தவள் வக்கிரமானவள் வித்தியாசமானவள் ஒழுக்கக்கேடானவள், ஆணின் தொடுகைக்கு அலைபவள் என்றே சித்தரிக்கப்படுகிறாள் இந் நிலையில்...**



வும் அந் நேரங்களில் தான் பக்கத்தில் இருக்கவேண்டும் எனவும் சனோஜா விடம் கூறுகின்றாள். (இதன் மூலம் எஜமானிக்கும் பணிப் பெண்ணுக்கும் இடையில் பாலியல் உறவு இருப்பதை தயாரிப்பாளர் மறைமுகமாக எடுத்துக் காட்டுகின்றார்) ஒரு கட்டத்தில் பணிப் பெண் சுய இன்பத்தில் ஈடுபடுவதாக வும் காட்டப்படுகிறது. எஜமானியின் இந்த நடவடிக்கையை அவதானித்து கவலைகொள்ளும் பணிப்பெண் அங்கு ள்ள இளைஞன் ஒருவனுடன் காதல் கொண்டு இருவரும் பாலுறவில் ஈடுபடுகின்றனர். தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் சனோஜாவை ஒருநாள் கணவன் உறவுகொள்ள அழைக்கும் போது அவள் மறுக்கிறாள். இறுதியில் வீணா உறவு கணவனுக்கு தெரிய வரவே வீணாவைக் கொலை செய்கிறான். இதுவே படத்தின் கதைச் சுருக்கம்.

வரலாற்றில் பெண்கள் மரபை மீறிய போதெல்லாம் பைத்தியம் பிடித்தவள், வக்கிர மானவள், வித்தியாசமானவள், ஒழுக்கக் கேடானவள், ஆணின் தொடுகைக்கு அலைபவள் என்றே சித்தரிக்கப்படுகிறாள். இந் நிலையில் இவ்வாறானதொரு திரைப்படம் வரவேற்கத்தக்கதே. எனினும் இவ்வாறு மரபை மீறிய மாற்றுக் கருத்தை கொண்டிருக்கும் இப் படமானது இவ்வுறவு சரியெனக் கூறுவதாக அமையவில்லை. இதனை படத்தின் ஆரம்பத்திலிருந்தே 'தேவமஞ்சம் தீப்பிடிக்கிறது'என்பது ஆணும் பெண்ணும் கொள்ளும் உறவு மட்டுமே புனிதமானது; அதற்கு மாறான உறவுகள் சமூக சீரழிவுக்கு வழிவகுக்கும் என்பது இத் தலைப்பின் மூலம் தெளிவுபடுகின்றது.

**இது கொழும்பிலிருந்து வெளியிடப்படும் விபவி மாற்று கலாச்சார நிலையத்தினரின் சஞ்சிகைக்காக எழுதப்பட்டு பின்னர் அச் சஞ்சிகையினால் நிராகரிக்கப்பட்ட சிறு விமர்சனம் ஒன்று. இது விபவியின் நிலைப்பாடுகளுக்கு எதிரானது என்பது அவர்களது வாதம். அதனால் இதை சக்தியில் பிரசுரிப்பதற்காக...**

**கங்கா ஜமுனா, இலங்கை**

www.tamilarangam.net



**மத்திய தணிக்கைக் குழு**

திரைப்படத்தின் பெயர்: படைப்பாளி மீதான சித்திரவதை

இயக்குனர்: A.G.யோகராஜா **U/A**

நீளம்: A5,9

நன்றி
மத்திய தணிக்கைக் குழு

**சமர்ப்பணம்**

*(இசையுடன் பாடவும்)*

கொட்டுண்டு கருகி விழுந்த
கொழுந்துகளே இளம் தளிர்களே
மொட்டாகி மலர்ந்து கருகிய
மோகனங்களே வாலிபங்களே
சட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும் பழக்குலைகளே
வெட்டுண்டு துண்டுகளாகி
வீழ்ந்து சிதறிய சீவியங்களே
உங்களை நாங்கள் நினைவு கூருகின்றோம்
உயிர் கலந்து உணர்வு பெறுகின்றோம்.

# நல்லதோர் வீணை செய்து...

குறும்பட விமர்சனம்

A.G.யோகராஜா



## படைப்பாளி மீதான சித்திரவதை

www.tamilarangam.net

**விமர்சனம் என்பது நோயாளிக்குக் கொடுக்கும் மருந்தைப் போன்றது. மருந்தினால் நோயாளி குணப்படுத்தப்பட வேண்டுமேயொழிய சாகடிக்கப்படக் கூடாது**

தலைவர் மாஓவின் இக் கூற்று இன்றைய முற்போக்கு முகாம்களைப் பொறுத்தவரை காலாவதியாகிப் போன மேற்கோள் ஆகிவிட்டது. அதனால் தான் விமர்சனம் என்றாலே கறாரும் கண்டிப்பும் தான் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இத்தகைய கறாரும், கண்டிப்பும், படைப்பாளி மீதான சித்திரவதையும் மிகுந்த விமர்சனங்களினால் துளிர்விடும் போதே துவண்டுபோன கலைஞர்கள் எத்தனை? முளையிலேயே கிள்ளியெறியப்பட்ட எழுத்தாளர் எத்தனை... மொட்டாகி மலர்ந்து கருகிய கலை இலக்கிய கர்த்தாக்கள் எத்தனை...எத்தனை! அவர்களுக்கு எனது இந்தச் சிறு கட்டுரை சமர்ப்பணம்.

இங்கு ஒன்றைக் கூறவேண்டியுள்ளது. கலைப் படைப்புகளை விமர்சிப்பவன் முதலில் நல்ல ரசிகனாக இருக்க வேண்டும். கவிதை மீதான ரசிப்புத் தன்மை, இசை மீதான ரசிப்புத் தன்மை, நாடகம் மீதான ரசிப்புத் தன்மை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். சினிமாவை ரசிப்பதற்கு சினிமா உணர்வு பெற்றிருக்க வேண்டும் என்கிறார் ஒரு சுவிற்சர்லாந்துக் கலைஞர். ஆழமான ரசிப்புத் தன்மை இருந்தால் தான் கலைப் படைப்புக்கள் வெளிப்படுத்தும் காட்சிப் படிமங்களுக்கு அர்த்தத்தையும் புரிந்து கொள்ளமுடியும். இதற்கு நீண்டகால அனுபவமும் அவசியம்.

சக்தி ஜனவரி-மார்ச் இதழில் 'நல்லதோர் வீணை செய்து' குறும்படத்திற்கான விமர்சனத்தை வாசித்ததும் ஒருவகை புன்சிரிப்பை உமிழ்ந்து கொண்டது என் உள்ளம். (அவர் கூறும் விமர்சன அரங்கிற்கு தலைமை தாங்கியவன் நான்) அந்தளவில் விட்டு என் வழமையான காரியங்களில் இறங்கிவிட்டேன். ஒருநாள் ஐ.பி.சி வானொலியை கேட்டுக் கொண்டிருந்த போது... சக்தி இதழிற்கான அறிமுகத்தைத் தொடர்ந்து, இதே விமர்சனம் யசோதா மித்திரதாஸின் குரலில் வானலைகளில் தவழ்ந்து வந்து என் செவிப்பறைகளை அறைந்தது. யசோதா மித்திரதாஸின் எடுப்பான குரலும் உணர்வு பூர்வமான வாசிப்பும் அக் குறும்படம் பற்றிய விழுதுகளை என் உள்ளத்தில் விழுத்திக் கொண்டது. ஒருசில கிழமைகளில் அதே வானொலியில் மீண்டும் அதே குரல்... அதே தொனி... அதே வசனக் கோர்வைகள்... விமர்சனம் படைப்பாளி மீதான சித்திரவதையாகி என் இதயத்தை அழுத்தியது.

துணிச்சல் + தூய்மை = விமர்சனம் ஆகாது

இங்கு நான் உள்ளத் தூய்மையைக் குறிப்பிடவில்லை. கலைப் படைப்பில் எதிர்பார்க்கும் தூய்மையைக் குறிப்பிடுகின்றேன். பின்நவீனத்துவம் பகுத்தறிவுத் தர்க்கவியலை முழுமையாக எதிர்க்கிறது, குறிப்பாக கலை இலக்கியத்தில். கவிஞனின் பார்வையில் நிலா அழகாக இருப்பதும், விஞ்ஞானியின் பார்வையில் நிலா கரடுமுரடாக இருப்பதுவும் இதனால்தான்.

www.tamilarangam.net



# Fade In

'நல்லதோர் வீணை செய்து' ஆரம்பக் காட்சி தம்பூரா ஏந்திய மீரா பொம்மை, அவலத்தை வெளிப்படுத்தும் இராணுவ அழிப்புக் காட்சி இரண்டையும் குறுந்திரைப் படத்திற்கு உரியதாக இல்லை என்று கூறிவிடுகிறார். ஆனால் உண்மை என்னவெனில் மீரா பொம்மையும் அதன் அசைவும் படத்தின் கருப்பொருளை முன்கூட்டியே படிமமாக நின்று வெளிப்படுத்துகின்றது. பாதிக்கப்பட்ட பெண் ஒருத்தி தனது குறித்த இலட்சியத் திற்காக குடும்ப வாழ்விலிருந்து விடுபடுவதன் குறியீடாக காட்சியளிப்பதுதான் மீரா பொம்மை. தம்பூரா இசைக்கருவிக்கு அதன் நரம்புகளும் அது மீட்டும் இசைக்கு சுருதியும் அமைவதுபோல் இக் குறும்படத்தின் மையக்கருவாய் அமைவது பாதிக்கப்பட்ட பெண் ஒருத்தி என்பதை ஓர் ஒற்றைக் காட்சியின் (shot) மூலம் துல்லியப் படுத்திவிடுகின்றார் இயக்குனர் ஜெகாதரன். இது குறும்படத்தின் செறிவைக் கூட்டுவதற்காக கையாளப்படும் உயர் சினிமாக் கோட்பாடு.

அதேபோன்றுதான் இராணுவ அழிப்புக் காட்சியும் சில செக்கன்களில் தாய்மண் அவலத்தையே வெளிப்படுத்தி விடுகின்றது. அது நண்பர் அழகுக்கு பம்பாய் திரைப்படக் காட்சியை நினைவு படுத்துகின்றது. எனக்கு வியற்னாம் படக்காட்சி ஒன்றினை நினைவுபடுத்தியது. வேறொருவருக்கு வேறொரு படத்தின் காட்சியை நினைவுபடுத்தக்கூடும். அதற்காக அக் காட்சியை கொச்சைப்படுத்திவிட முடியாது. அது கூறவரும் பொருள் என்ன என்பதுதான் இங்கு முக்கியம். இக் காட்சியினால் இப் படம் குறும்படத்திற்குரிய தன்மையை இழந்துவிடுகின்றது என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றார் விமர்சகர் அழகு குணசீலன். உண்மையில் விமர்சகர் இத்தகைய ஒரு முடிவுக்கு வருவதற்கான காரணம் என்ன? ஒன்று மேற்படி காட்சி பற்றிய புரிதலில் உள்ள கோளாறு. இரண்டாவது, மிக முக்கிய காரணம் படைப்பாளியைக் குறைத்து மதிப்பிடுவதன் வெளிப்பாடுதான்.

பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவன அறிமுகம் போன்று திருவள்ளுவர் சிலையை திருப்பி அகர முதல பாடுவது போல் ஜெகாதரனும் மீரா பொம்மையை திருப்பி சும்மா காட்சிப்படுத்தியதாகவும், பம்பாய் திரைப்படத்தை கொப்பியடித்திருப்பதாகவும் எண்ணி படைப்பாளியின் உள்ளத்தில் குத்தூசியால் குத்திவிடுகின்றார் நண்பர் அழகு. படைப்பாளி என்பவன் ஆக்கங்களை சிருஷ்டிப்பவன். விமர்சகன் எவ்வளவுதான் தூய்மையாக இருந்தபோதும் படைப்பாளி உயர்ந்து நிற்கிறான். படைப்பாளி உயர்ந்து நின்றபோதும் கவிஞர் சுபத்திரன் பாடியது போன்று,

*உரிமைப் போரில் ஒரு சொட்டு இரத்தத்தைத் தருபவன்*
*முன்னே வெறும் தூசு...தூசு...*

படத்தில் முரண்பட்ட பாத்திரங்களுக்கிடையில் பேசப்படும் வசனங்களை ஒற்றை வரியில் பிரித்தெடுத்து ஏதோ இந்த வசனங்களை மையப்படுத்தித்தான் படம் நகர்வதாகக் காட்டி படைப்பாளியை கேவலப்படுத்தி, அவரின் படைப்பிற்கெதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**படைப்பாளி என்பவன் ஆக்கங்களை சிருஷ்டிப்பவன். விமர்சகன் எவ்வளவுதான் துய்மையாக இருந்தபோதும் படைப்பாளி உயர்ந்து நிற்கிறான்.**

கருத்துத் திணிப்பை செய்திருப்பதன் மூலம் படைப்பாளியின் மூளைப் பகுதியில் சம்மட்டியால் அடித்து விடுகின்றார் நண்பர் அழகு. வாசக நேயர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இப் படத்தின் கதைச் சுருக்கத்தை சற்று விரிவாக தருகிறேன்.

படத்தில் மொத்தம் நான்கு பாத்திரங்கள்.

1. நாயகி (சியாமளா)
2. நாயகன் (பிரகாஷ்)
3. நாயகனின் நண்பன் (தேவன்)
4. நாயகன் வீட்டில் குடியிருக்கும் நண்பன் (பாலா)

பாத்திரத்தின் தன்மைகள்:

நாயகி: இராணுவத்தின் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட நிலையில், குடும்ப வாழ்வை வெறுத்த போதும் தாயின் வற்புறுத்தலால் திருமணத்திற்காக புலம்பெயர் நாட்டிற்கு அனுப்பப்பட்டவள்.

நாயகன்: திருநீற்றுப் பூச்சுடன் கூடிய வைதீகப் பாரம்பரியங்களை (புலம்பெயர் நாட்டுச் சூழலுக்கேற்ப) பேணுபவர். மனிதநேயமுடைய ஒரு நல்ல பிறவி.

நண்பன் (பாலா) : நாயகன் வீட்டில் குடியிருப்பவர். திருநீற்றுப் பூச்சுக்கள் இல்லாவிட்டாலும் மரபுவழிச் சிந்தனையில் ஊறிப்போனவர். நண்பனின் கஸ்ரங்களுக்கு மரபுவழிச் சிந்தனையில் தீர்வுகாண முற்படுபவர்.

நண்பன் (தேவன்) : நாயகனின் நண்பனாக இருப்பதுடன், புலம்பெயர் நாட்டு வாழ்வியல் சூழலுக்கேற்ப தன்னை தகவமைத்துக் கொண்டவன்.

கதைச் சுருக்கம் (விரிவாக)

நாயகி, நாயகனிடம் வந்ததும் நாயகன் கூறுகின்றான்,
"வெளிநாடுகளில் குழந்தையை வைத்துக் கொண்டுதான் கூடுதல் திருமணங்கள் நிகழ்கின்றன. ஆனால் என்னைப் பொறுத்தவரை திருமணத்திற்குப் பின்புதான் கணவன்-மனைவி உறவு எல்லாம்."
நாயகனின் வேண்டுதலுக்கேற்ப பாலியல் உறவுகளைத் தவிர்த்து நாயகன், நாயகி ஒரே வீட்டில் குடியிருக்கின்றனர். ஆனால் நாயகனின் வைதீக பாரம்பரியத்திற்குரிய நடைமுறைகளை அவள் புனிதத் தன்மைக்குரியதாக நோக்குகின்றாள். நாட்கள் செல்லச் செல்ல நாயகனிடமிருந்து விலகுகிறாள். சுயசிந்தனை இழந்த நடைப் பிணமாக எதிலும் நாட்டமில்லாதவளாகக் காணப்படுகின்றாள். கற்பு எனும் புனிதத்தை இழந்த நான் இந்தப் புனிதனுக்கு

www.tamilarangam.net



மனைவியாவது குற்றம் என உணர்கிறாள். அதை வெளிப்படுத்தும் வகையில் ஒரு கட்டத்தில்,

"என்னைப் பிடிக்கவில்லையா?" என்று நாயகன் கேட்டதற்கு,

"பிடிச்சிருக்கு... அதனாலதான் விலகிவிலகிச் செல்கிறேன்" என்கிறாள்.

அவள் விலகிச் செல்வதற்கான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாத கணவன்,

'சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு வாங்கோ!'

'தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாங்கோ!'

'கடைக்குப் போவம் வாங்கோ!'

என்ற வகையில் செயலாக்கத்திற்கு முயற்சிக்கின்றான்.

ஒரே வீட்டில் இருக்கும் அவனின் நண்பனோ,

'பொன்னுக்கு மயங்காத பெண் உண்டோ... வாங்கிக் குடு வழிக்கு வருவாள்...' என்கிறான்.

நாயகனே உடுப்பு வாங்கி வருகிறான். நாயகியோ தொடர்ந்து எதிலும் நாட்டமற்ற வளாகத் தான் காணப்படுகிறாள். தன்னைக் குறைத்து மதிப்பிட்டு தாழம்பூவிற்கு ஒப்பிட்டுப் பாடுகின்றாள். ஒரு கட்டத்தில் நாயகன் தொட்டுக் கதைத்த போது... மிகுந்த வெறுப்புடன் விலகிவிடுகின்றாள். நாயகனுக்கோ எதுவும் புரியவில்லை. இறுதியாக அவள்,

'நான் இராணுவத்தினால் கெடுக்கப்பட்ட பெண்' என்று விடயத்தை கூறிவிடுகின்றாள்.

நட்பைப் பெரிதாக மதிக்கும் ஒரே வீட்டில் இருக்கும் நண்பன் தனது இன்னல் ஏற்பட்டு விட்டதாக எண்ணுகிறான். 'ஏமாற்றி வந்தவள்' என்று உரைக்கிறான்.

ஆனால் மற்ற நண்பனோ 'இதை இப்ப சொன்னதுக்கே இப்பிடி கோவிக்கிறாய் கலியாணத்துக்குப் பிறகு சொல்லியிருந்தால், நீ என்ன சொல்லுவாய்; இந்த ஊர் என்ன சொல்லும்?' என்றும்,

'உன் விருப்பப்படி நீ திருமணம் செய்யத் தயாராக இருந்தால், கலியாண ஆசையில் இதை கூறுகிறாயா? எதிர்காலத்தில் இதையிட்டு எந்தவித பிரச்சினையும் எடுக்கமாட்டாயா...?' என்று தூர நோக்குடன் விசாரித்து,

'உன்னுடைய முடிவு (சியாமளாவை திருமணம் செய்வது) எனக்கு சந்தோசத்தைக் கொடுக்கிறது' என்று கூறி உற்சாக வார்த்தையினை உதிர்க்கிறான்.

நாயகியோ 'நான் நாட்டுக்குப் போவதுதான் நல்லதாகப் படுகின்றது' என்றதும்,

'அங்கு போய் என்ன செய்யப் போகிறீர்கள்' என்று நாயகன் கேட்டதற்கு, அவள் போராடப்போவதாகக் கூறியதும்,

நாயகன் 'கரப்பான் பூச்சிக்கே பயந்த நீங்கள் அங்கபோய் என்ன செய்யப் போறீங்கள்'

என்று நையாண்டிச் சிரிப்புடன் கேட்கிறான்.

'உங்களுடைய பார்வையே பிழையானது. போராட்டம் பல பக்கங்களைக் கொண்டது. அதில் ஒன்றுதான் ஆயுதப் போராட்டம்' என்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உடலுடன் ஒன்றாகக் கருதப்பட்டு வந்த கற்பு நெறியை மனதுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக நோக்குகின்றாள் (கற்பிதம் செய்யப்பட்ட ஒன்றுதான் கற்பு எனும் உயர் நிலையை எட்டாவிட்டாலும் ) இது கூட கற்புச் சார்பான மரபு நெறியை மீறுகின்ற, சீர்திருத்த நெறிக்குட்பட்ட அடுத்த படிநிலைதான்.**

---

'இதில் நான் கிரிஷாந்தி, கோணேஸ்வரி போன்றவர்கள் மீண்டும் தோன்றாமல் இருப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடவே போகிறேன்' என்று கூறி, போராட்டங்களின் பரிமாணங்களை ஒரு சில வார்த்தைகளில் கூறிவிடுகின்றாள்.

நாயகனும் தன் விருப்பத்தை நாயகியிடம் கூறி ஒருபடி மேல் சென்று, 'நீங்கள் எனக்கு கிடைக்காமல் போய்விடுவியளோ என்று பயப்படுகிறேன்' என்று கூறி, ஆறுத லாக யோசித்து ஒரு நல்ல முடிவைத் தரும்படி வேண்டுகிறான். இதில் அவளை யோசிக்க வைக்கும் வகையில் அவன் பல கருத்துக்களை, செலவான பணம், தனது உழைப்பு என்று கூறுகிறான். இது இரண்டு நண்பர்களுக்கு இடையிலான உரையாட லாகத்தான் காணப்படுகின்றதே அன்றி அழகு குணசீலன் கூறுவது போல் அவன் அவள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதாகவோ, கருத்துத் திணிப்பாகவோ அமையவில்லை.

## INTERMISION

மேற்படி கதைச் சுருக்கத்தில் இருந்து படத்தின் உள்நோக்கத்தை வாசக நேயர்கள் ஓரளவிற்கு புரிந்து கொண்டிருப்பார்கள் என நம்புகிறேன்.

புலம்பெயர் நாடொன்றில் வாழ்கின்ற தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பாகத்தான் இந்த ஆண் பாத்திரங்கள் மூன்றும் காணப்படுகின்றன. பெண்கள் பற்றிய விடயத்தில் சனாதனப் பார்வைக்குட்பட்ட வகையிலான பெண்கள் மீதான அக்கறையும், பெண்கள் மீதான வெறுப்புணர்வும் கூட சில முரண்களுக்கிடையில் சித்தரிக்கப் பட்டுள்ளன. பாலியல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட பெண்களை திருமணம் செய்வதில் தவறில்லை என்ற வகையிலான ஓர் உயர் சீர்திருத்தக் கருத்து இப் படத்தின் உயிர் நாடியாக மேலோங்கி நிற்பதை நண்பர் அழகு குணசீலன் வேண்டுமென்று தான் மறைத்தாரோ தெரியவில்லை.

நாயகியோ போராட்டச் சூழலில் இருந்து வந்தபோதும், போராட்டத்தின் பல பரிமாணங்களை விளங்கிக் கொண்ட போதும், மரபுவழிச் சிந்தனையின் வழிச்செல்லும் சனாதனப் பெண்ணாகவே காணப்படுகின்றாள். இருந்தபோதும், உடலுடன் ஒன்றாகக் கருதப்பட்டு வந்த கற்பு நெறியை மனதுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக நோக்குகின்றாள்

www.tamilarangam.net



(கற்பிதம் செய்யப்பட்ட ஒன்றுதான் கற்பு எனும் உயர் நிலையை எட்டாவிட்டாலும்) இதுகூட கற்புச் சார்பான மரபு நெறியை மீறுகின்ற, சீர்திருத்த நெறிக்குட்பட்ட அடுத்த படிநிலைதான் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். ஆனால் இதையும் மீறி நானும் இல்லற வாழ்விற்குத் தகுதியானவள்தான் என்ற மனநிலைக்கு அவள் உந்தப்பட்டவளாக இல்லை. இன்றைய போராட்ட சூழலிலும் காதல் இன்னும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகின்ற, அல்லது காதலிப்பவனையே கட்டாயம் மணம் செய்யவேண்டுமென்கின்ற ஒரு சமூக அமைப்பின் பிரதிபலிப்பாகத்தான் இப் பெண் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

புலம்பெயர் நாட்டுச் சூழலுக்குட்பட்ட எமது சமூகம் எப்படி இரட்டை மனோநிலைக்கு உட்பட்டு வாழ்கின்றதோ, அதே போன்றுதான் போராட்டச் சூழலில் வாழும் எமது சமூகம் போராட்டச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப மரபுவழிச் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் மீறி வெளிவர முடியாதவர்களாகத்தான் காணப்படுகின்றார்கள். இதுவும் ஒருவகை இரட்டை மனோநிலைதான். நல்லதோர் வீணை செய்து.. குறும் படத்தின் கதாநாயகிப் பாத்திரம் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

இப் படத்தின் இயக்குனர் இதையெல்லாம் உணர்ந்துதான் படத்தை இயக்கினாரோ இல்லையோ, சமூகத்தின் பிரதிபலிப்பாக ஒரு படைப்பு வெளிவரும்போது. சமூகத்தின் முரண்பாடுகள் படைப்புகளில் இயல்பாகவே வெளிப்படுவதற்கும் இடமுண்டு. சினிமா உணர்வுடன், மறைந்திருக்கும் முரண்பாடுகளையெல்லாம் கண்டுணர்ந்து வெளிக்கொணர்வது தான் உண்மையில் ஒரு நேர்த்தியான விமர்சகனின் கடமையாகும். (இதற்கும் விமர்சகன் ஓரளவிற்கேனும் வெகுஜனத்திரளின் மனோநிலையை, உளவியலைப் புரிந்திருக்க வேண்டியதும் அவசியம்.) ஆனால் குணசீலன் அவர்களோ தான் எண்ணும், தனது மனதில் படியும் ஒரு புதுமைப் பெண்ணைக் கற்பனையாகக் கொண்டுவந்து படத்தில் முன்நிறுத்தவேண்டும் என கோருகின்றார். இது அவரது விருப்பமும், ஆசையும் மட்டுமல்ல. அவரது உரிமையும் கூட. மறுப்பதற்கில்லை. ஆனால் தனது விருப்பமும் ஆசையும் ஒரு படைப்பில் இல்லை என்பதற்காக, அப் படைப்பை நையாண்டி செய்வதும், அப் படைப்பாளியை மனோரீதியாக சித்திரவதை பண்ணுவதும், முத்திரை குத்துவதும் படைப்பாளி மீதான வன்முறை சார்ந்த திணிப்பாகும். இது கலைப் படைப்புக்களை முற்போக்கு பிற்போக்கு என்ற வரையறைக்கு உட்படுத்துவதில் ஏற்படும் தவறு.

இது ஈழத்தைப் பொறுத்தவரை 1960 களுக்கு முன்பிருந்து பேணப்பட்டுவரும் முற்போக்கு மரபுவழி விமர்சன முறையாகும். செ. கணேசலிங்கம் வகையினரின் படைப்புக்கள் இதற்கு நல்ல உதாரணம். இவ் விமர்சனப் போக்கிற்கு எதிராக 60-70 களில் உரத்து குரல் கொடுத்தவர்கள் மு.தளையசிங்கம், மு.பொன்னம்பலம், எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) போன்றவர்கள். எஸ்.பொ, மு.தளையசிங்கம் போன்றவர்கள் இவ் வகைகளை மீறி சுதந்திரமாக படைப்புக்களை வெளிக்கொணர்ந்ததால்தான் இவர்களது படைப்புக்கள் தமிழ்ச் சூழலில் இன்றும் பேசப்படும் இலக்கியங்களாக மிளிர்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒரு கலைஞனுக்கு எது பிரக்ஞை பூர்வமாக இருக்கின்றதோ அதையே அவன் எழுதட்டும் கலைப் படைப்புக்களை சிருஷ்டிக்கட்டும்.**

இப் படத்தில் காணப்படும் இயற்பண்புத் தன்மையை (Reality) உள்ளதை அப்படியே காட்டுவதன் மூலம் இச் சமூகத்திற்கு இப் படம் சொல்ல வருவது என்ன?' என்று ஒரு கேள்வியை எழுப்புகின்றார் விமர்சகர் அழகு. ஐயா! ஒரு படைப்பு அக் கால சூழலின் இருத்தல்கூட போதும் அது அப் படைப்பிற்குக் கிடைத்த வெற்றிதான். சங்ககால இலக்கியப் பதிவுகள் எமக்குச் சங்ககாலத் தமிழ்ச் சூழலை மதிப்பிட உதவுகின்றனவல்லவா?

## *Climax*

இப் படத்தின் முடிவு குறித்து நண்பர் அழகு மிகவும் ஆதங்கப்படுகின்றார். ஆனால் இயக்குனரோ முடிவு குறித்து மூன்று விடயங்களை முன்வைக்கிறார்.

1. இயக்குனர் பெண் பாத்திரத்திற்குக் கொடுத்திருக்கும் முடிவு. பெண்களுக்காகப் போராட நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்பது.
2. மனதளவில் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அம் முடிவு சார்பாக யோசிப்ப தற்கு கால அவகாசம் எடுத்துக்கொள்ளும் படி நாயகன் மூலம் கேட்கப்படுதல்.
3. இவள் என்ன முடிவெடுத்தால் உங்களுக்கு சம்மதம் என்று பார்வையாளரிடம் கேட்டுவிடுகின்றார் இயக்குனர்.

இதில் உயர் ஜனநாகப் பண்பைக் காணமுடிகின்றது. முடிவாக பார்வையாளனுக்கு இருக்க வேண்டிய அக்கறையை உணர்த்தி கேள்விக்கு உள்ளாக்கிவிடுகின்றார் இயக்குனர் ஜெகாதரன்.

ஆனால் விமர்சகரோ பின் இரண்டு முடிவுகளையும் இயக்குனர் எடுத்துக் கொண்ட முடிவாகவும், கதாநாயகியின் முடிவிற்கும் இயக்குனரின் முடிவிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாதது போல் இயக்குனரை குதறுகின்றார். இதில் சிரிப்பான விடயம் படைப்பாளி மீது சித்திரவதையைப் பிரயோகிக்கும் ஒருவர் பின்நவீனத்துவத்தை துணைக்கிழுப்பதுதான். ஜனநாயகத் தன்மையுடன் கூடிய படைப்பாளியின் முடிவை மாற்றியமைக்கக் கோருவது முதல், விமர்சனத்தின் அனைத்துப் பக்கங்களிலும் வன்முறையுடன் கூடிய திணிப்பை பின்நவீனத்துவத்திற்கு நேர் எதிரான முறையில் படைப்பாளி மீது பாய்ச்சிவிடுகின்றார் விமர்சக நண்பர் அழகு குணசீலன்.

## Inter Cut

கலை இலக்கியங்கள் முற்று முழுதாக எமது போராட்டத்தைச் சித்தரிப்பனவாக அமைய வேண்டும் என்ற நிலை மாற்றப்பட வேண்டும் என்று கூறுவதன் மூலம் பரந்துபட்ட படைப்பாளிகள் மீதும் ஒருவகை திணிப்பை செய்திருக்கின்றார் விமர்சகர். ஒரு படைப்பாளிக்கு எது பிரக்ஞைபூர்வமாக இருக்கின்றதோ அதைத்தான் அவன்

www.tamilarangam.net



படைக்க முற்படுகின்றான். அது சமகாலப் போராட்டங்களாக இருக்கலாம், தாம் வாழும் (புலம் பெயர்ந்து) நாட்டுச் சூழலாகவும் இருக்கலாம், அல்லது அவனின் மனதைப் பாதித்த காதல் பிரச்சினையாகக் கூட இருக்கலாம்.

தமிழில் தலித் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர் எழுத்தாளர் அமரர் கே.டானியல் ஆவார். தனது இறுதி மூச்சுவரை சாதீயப் பிரச்சினையையே எழுதினார். 1983க்குப் பின் இனமுரண்பாடு கூர்மையடைந்த உச்சக்கட்டத்திலும் கூட சாதீயப் பிரச்சினையையே தமது மூச்சாக நினைத்தார். சிலர் அவரிடம் சமகால தமிழர் பிரச்சினையை எழுதும் படி கேட்டதற்கு அவர் கூறிய பதில் 'நானும் தமிழர் பிரச்சினையைத்தான் எழுதுகிறேன்' என்பதாகும். அவர் இறக்கும் வரை பிரக்ஞைபூர்வமாக அவரைப் பாதித்த பிரச்சினைகள் சாதீயப் பிரச்சினை தான். கரவெட்டியில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிநீர் கிணற்றில் நஞ்சு ஊற்றியது முதல் சங்கானையில் இறந்த தாழ்த்தப்பட்டவர்களின் உடலத்தை சுடலையில் எரிப்பதில் இருந்த தடைகள் வரை அவரின் உள்ளத்தைப் பாதித்த அனைத்து சம்பவங்களையும் எழுதினார். அவர் இறக்கும் வரை அவரின் உள்ளமும் உடலும், எலும்பும் தசையும், நரம்பு நாளங்கள் அனைத்திலும் பிரக்ஞைபூர்வமாக வெளிப்பட்டது சாதீய ஒடுக்கு முறைதான்.

ஆகவே ஒரு கலைஞனுக்கு எது பிரக்ஞை பூர்வமாக இருக்கின்றதோ அதையே அவன் எழுதட்டும்; கலைப் படைப்புக்களை சிருஷ்டிக்கட்டும். அவன் மீது உங்கள் திணிப்பைச் செலுத்தாதீர்கள்.

ஜமுனா ராஜேந்திரன் ஒருமுறை குறிப்பிட்டது போன்று புலம்பெயர் நாட்டுச் சூழலில் தயாரிக்கப்படும் படங்கள் பலவற்றில் சமூகம் பற்றிய, குறிப்பாக பெண்கள் பற்றிய சனாதனப் பார்வைகள் மலிந்து காணப்படுவது உண்மையே. இப் படங்களை இயக்குபவர்களும் இச் சமுகத்துடன் ஒன்றிப்போன சாதாரண பிரகிருதிகள் என்பதால் இது நிகழ்கின்றது தொடர்ந்து. ஆனால் இவற்றைக் களைவதற்கே தேவை ஆரோக்கியமான விமர்சனங்களும், சமூகம் பற்றிய அறிவுபூர்வமான விழிப்புணர்வும் தான்; கண்டிப்புடன் கூடிய கட்டளைகள் அல்ல. நண்பர் அழகு செய்ய வேண்டியது இதுதான். படைப்பாளிகள் நல்லதோர் வீணை செய்வதற்கு மனதார உதவ வேண்டும். அதை நலன்கெட புழுதியில் எறிவதா அல்லது பூசி அலங்கரித்து பூஜைக்கு வைப்பதா அல்லது...

எதையும் தீர்மானிப்பவர்கள் தீர்மானிக்கட்டும்!

வணக்கம்

## Fade Out

| நல்லதோர் வீணை செய்து... குறும்படத்தினைப் பெற : 0049 30 6152373 |
|---|



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிதறல்கள் செய்தி



**ஜயந்திமாலா (சுவிஸ்)**

**சிதறல்–1**

ஆர்யு-486 (RU486) எனப்படும் கருக்கலைப்பு மாத்திரையை சுவிஸில் விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாத்திரைகள் ஏற்கனவே இங்கிலாந்து, பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதுடன் அங்குள்ள பெண்களில் 50-60 வீதமானவர்கள் இம் மாத்திரைகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சுவிஸில் விற்பனை அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சில மத ஸ்தாபனங்கள் பெரும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளன. அவர்களின் கருத்துப்படி கருக்கலைப்பு என்பது கொலை என்றும், கொலைக்கான இந்த மாத்திரையை விற்பனை செய்ய அனுமதித்திருப்பது மனித உயிர்களை பிறக்குமுன் கொலை செய்யும் முயற்சி என்றும் விமர்சித்துள்ளனர்.

குறிப்பிட்ட மாத்திரையை உற்பத்தி செய்துள்ள, விற்பனை செய்கின்ற மருந்தகங்களை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். அதேவேளை மறுதரப்பில் சத்திர சிகிச்சை மூலம் கருக்கலைப்புச் செய்வதை விடவும் இது பாதுகாப்பான முறை என்றும் கூறப்படுகின்றது.

பெண்கள் அமைப்புகளின் கருத்துப்படி பிள்ளை ஒன்றைப் பெற்றெடுப்பது அல்லது கருக்கலைப்புச் செய்வது ஒரு பெண்ணின் உரிமையாகும். அதை அவளே தீர்மானிக்க வேண்டும். ஒரு பெண் தனக்குக் குழந்தை தேவையில்லை எனக் கருதினால் கருக்கலைப்புச் செய்கின்ற உரிமை அவளுடையது. இதுகுறித்து மத அமைப்புக்களும், மற்றைய ஸ்தாபனங்களும் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என பல பெண்கள் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் RU486 எனப்படும் இந்தப் புதிய கருக்கலைப்பு மாத்திரையை தடை செய்யக்கோரி அரசிடம் மனு ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. சொலத்துாண் மாநிலத்தைச் சேர்ந்த JA ZUM LEBEN (வாழ ஆமோதிப்போம்) என்ற அமைப்பினால் இம் மனு முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளது. இதுவரை 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கையொப்பங்கள் திரட்டப்பட்டிருப்பதாகவும் மேற்படி அமைப்பு தெரிவித்துள்ளது.

www.tamilarangam.net



ஜெனீவா பல்கலைக் கழகப் போதனா வைத்தியசாலையில் மூன்று முஸ்லிம் வைத்திய பீட மாணவிகளுக்கு கடமையின்போது 'பர்தா' அணிய நிர்வாகம் தடை விதித்திருக்கிறது. பல்கலைக்கழக வைத்தியசாலையில் தமது வைத்தியப் பயிற்சியை மேற்கொள்ளும் இவர்கள் தமது கலாச்சாரத்தின்படி 'பர்தா' எனப்படும் முக்காட்டை அணியவிரும்பினர். ஆனால் அது சாத்தியமில்லை என சாலைப் பணிப்பாளர் குழு வைத்தியசாலை நிர்வாகமோ தெரிவித்துள்ளது. வைத்திய வினால் மேற்கொள்ளப்பட்ட இந்த முடிவிற்கு நிர்வாகத் தரப்பில் மூன்று காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

## சிதறல்-2

1. வைத்தியசாலையின் ஒழுங்குவிதியானது சகலருக்கும் பொதுவானதாகப் பேணப்பட வேண்டும்.
2. நோயாளர்களின் விருப்பங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
3. வைத்தியசாலையின் சுகாதார முறைப்படி ஊழியர்கள் அதற்கேயுரித்தான சீருடையை அணிய வேண்டும்.

என்ற மூன்று நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே முஸ்லிம் மாணவிகளின் விருப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை நிர்வாகத்தின் இந்த முடிவு குறித்து ஜெனீவாவில் இஸ்லாமிய கலாச்சார நிலையம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. ஏற்கனவே ஆரம்பப் பாடசாலை ஆசிரியை ஒருவருக்கு 'பர்தா' அணிவதற்கு ஜெனீவா நீதிமன்றம் ஒன்று தடையுத்தரவு பிறப்பித்திருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் 1998ம் ஆண்டு 286 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. பெண்கள் மீதான மனித உரிமை மீறல்கள் பாகிஸ்தானில் அதிகரித்துள்ளது என்றும் இதற்கு அங்குள்ள சில இஸ்லாமியச் சட்டங்கள் சாதகமாகப் பயன்படுத்தப்படு கின்றன என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கருத்து வெளி யிட்டுள்ளது. கொல்லப் பட்ட 286 பெண்களும் தமது உறவினர்களால் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன் இவற்றிற்கு குடும்பம் சார்ந்த காரணங்களே குறிப்பிடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிதறல்-3

அதே வேளை புதிய ஆட்சியாளரான முஷாரவ் இடம் பெண்களின் உரிமைகளை மதிக்குமாறும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராகப் போராடுமாறும் அமெரிக்க மனித உரிமை அமைப்பான (Human Rights Watch) மனித உரிமைகள் காப்பகம் மற்றொரு கோரிக்கையை பாகிஸ்தான் அரசிடம் விடுத்துள்ளது.

www.tamilarangam.net

# சிலப்பதிகாரம்

உமா
(ஜேர்மனி)

## விசாரணை 1

ஜேர்மன் நகரமொன்றில்
குற்றவியல் புலனாய்வுத்துறையின்
அலுவலகம்

அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்த நேரத்திற்கு மனோகரன் மூன்றாம் மாடியிலிருந்த ஒரு அறையின் கதவைத் தட்டி உள்ளே வந்தான். சுழல் கதிரையில் அமர்ந்திருந்த அதிகாரி இவனைப் பார்த்து வணக்கம் கூறி விட்டு இவனுக்குரிய ஆசனத்தைக் காட்டினார்.

அருகிலிருந்த ஆசனத்தில் ஏற்கனவே மொழிபெயர்ப்பாளர் அமர்ந்திருந்தார். அவர் இவனைப் பார்த்து தலையாட்டி விட்டு, இவனது அன்றைய விசாரணைப் பற்றிய ஆவணங்களை வாசித்துவிட்டு அதிகாரியிடம் திருப்பிக் கொடுத்தார்.

சரி... நாங்கள் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முதல் உமது விசாவை நான் பார்க்கலாமா?
அவன் தனது யக்கற் பொக்கற்றிலிருந்து விசாவை எடுத்துக் கொடுத்தான்.

இவனது விசாவிலிருந்த விபரங்களையும் மற்றைய ஆவணங்களிலுள்ள விபரங்களையும் அந்த அதிகாரி ஒப்பிட்டுப் பார்த்தார்.
இன்று எதற்காக இந்த விசாரணை என்று உனக்குத் தெரியுமா?
மொழிபெயர்ப்பாளர் தமிழில் மொழிபெயர்த்தார்.
இல்லை... சரியாகத் தெரியாது.

இரு அராபியர்கள் உமது உடமைகளை கொள்ளையிட முயற்சித்து உம்மையும் தாக்கியதாக நீர் முறையீடு செய்திருக்கிறீர். அதுபற்றி விசாரிக்கவே இன்று உம்மை இங்கு அழைத்திருக்கிறோம்.

மனோகரன் தலையை அசைத்தான்.

நீர் அன்று கொடுத்த முறையீட்டில் ஏதாவது மாற்றமுள்ளதா?
இல்லை.

இங்கு உண்மையைத் தான் கூற வேண்டும்.
நான் உண்மையைத்தான் சொல்லுறன்.

அதிகாரி இடையிடையே இவனது கழுத்திலும், கையிலும் மின்னிய தங்கங்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

அன்று என்ன நிகழ்ந்ததென்று சித்தரிக்க முடியுமா?

ஆம். நான் வீதியால் சென்று கொண்டிருந்தபோது இரண்டு பெண்கள் என்னை ஒரு சிறு கபே போன்ற ஒன்றிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றபோது இரண்டு திடகாத்திரமான இளைஞர்கள் அங்கிருந்தார்கள். அவர்கள் எனது கழுத்திலிருந்த சங்கிலியையும் எனது கைச்சங்கிலியையும் கழற்றித் தங்களிடம் தரும்படி கேட்டார்கள். நான் மறுத்தபோது என்னைத் தாக்கினார்கள். நான் ஒருவாறு தப்பித்து வெளியில் ஓடிவந்து பொலிசுக்கு அறிவித்தேன்.

www.tamilarangam.net



அந்த இரு பெண்களையும் உமக்குத் தெரியுமா?
இல்லை. அன்றுதான் முதலில் சந்தித்தேன்.

எங்களுக்குப் பொய் சொல்லவேண்டாம். அந்தப் பெண்களின் வாக்குமூலத்தின்படி அவர்களுக்கு உம்மை நன்கு தெரியும். இரண்டு மாதங்களுக்கு முன் அவர்களை நீர் வீதியில் உள்ள விபச்சார விடுதியொன்றில் சந்திக்கவில்லையா?
இல்லை. எனக்குச் சரியாக ஞாபகமில்லை. சிலவேளைகளில் சந்தித்திருக்கலாம்.

வீதியிலுள்ள விபச்சார விடுதியில் வைத்து அப் பெண்களுடன் நீர் தகராறு செய்தமையினால் அவர்கள் உம்மீது சூடான சூப்பை வீசியிருக்கிறார்கள். இச் சம்பவம் உமக்கு நிச்சயம் நினைவில் இருக்கவேண்டும்.

ஏதாவது வாக்குவாதம் நடந்திருக்கும். நானும் சூடான கோப்பியால் வீசியிருப்பேன். ஆனால் எனக்கு ஒன்றும் நினைவில் இல்லை.

எங்களை மடையர்கள் என்று யோசிக்க வேண்டாம். நீர் பொய் சொல்கிறீர் என்று எனக்குத் தெரியும். அதற்கான தகுந்த சாட்சியங்கள் என்னிடம் இருக்கின்றன. நீர் உண்மையை ஒத்துக்கொள்வது உமக்கு நல்லது.
நான் உண்மையைத் தான் சொல்கிறேன்.

அப்படியானால் உமக்கு அப் பெண்களுடன் பழக்கம் இருந்ததென்பதை ஒத்துக் கொள்ளும்.
இல்லை. நான் அன்றுதான் அவர்களை சந்தித்தேன்.

எப்படிச் சந்தித்தீர்?
நான் கோப்பி குடிப்பதற்கென்று அந்த கபேக்குப் போனேன். அங்கிருந்த நடுத்தர வயது பெண்மணி அங்கு பானங்கள் விற்பதில்லையெனக் கூறினார். நான் அதற்கு இங்கிருக்கும் மற்றவர்கள் அருந்துகிறார்களே, எனக்கும் குடிப்பதற்கு ஏதாவது தரவேண்டுமென்று அவரைக் கேட்டேன். அப்போது ஒரு பெண் வந்து, என்னருகில் வந்தமர்ந்து தனது காலை எனக்கு மேல் போட்டார். எனக்கு இவை பிடிக்காது. காலை எடுக்கும்படி கூறினேன். அப்போதுதான் அந்த இளைஞர்கள் வந்து என்னைத் தாக்கினார்கள்.

என்ர விசரைக் கிளப்ப வேண்டாம். இங்கு பொய் சொல்ல வர வேண்டாம். அதிகாரி மிகவும் சூடாக இருந்தார்.

உமக்கு விபச்சார விடுதிகளுக்குப் போகும் பழக்கமுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன் நீர் அந்த விடுதிக்குப் போய் அங்கிருந்த பெண்ணுடன் தகராறு செய்து, அப் பெண் உம்மீது சூடான சூப்பை வீசியிருக்கிறார். பின்பு நீர் அன்று இந்த விடுதிக்குச் சென்ற போது, அந்தப் பெண் உம்மை அடையாளங் கண்டு உம்மை அங்கிருந்து வெளியேறச் சொல்லியிருக்கிறார். நீர் மறுத்தபோது அவர்களது காவலாளிகளைக் கொண்டு உம்மை வெளியேற்றியிருக்கிறார். இத்தகைய இடங்களில் இப்படியான நிகழ்வுகள் சகஜம்.

நீர் உண்மையை மறைத்து பொய் முறையீடு செய்திருக்கிறீர். இத்தகைய செயல்களுக்கு நீர் தண்டிக்கப்படுவீர் என்பது உமக்குத் தெரியுமா?

இத்துடன் அன்றைய விசாரணை முடிவுற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி 1

டேய் மனோ, எங்கையடா போயிட்டு வாறாய்? உன்னைத்தேடி அந்தாள் வெஸ்டிலிருந்து நாலஞ்சு தரம் போன் பண்ணிட்டார். எங்கையடா போய்த் துலைஞ் சனி. உன்ரை ஆளை நாளைக்கு போலந்தி லிருந்து ஏத்திவிடுறாங்களாம். நாளைக்கு வீட்டை நிற்கட்டாம். அவ வந்திறங்கின உடனே போன் எடுப்பாவாம்.
மனோ வந்ததும் வராததுமாகக் குலம் செய்திகளைச் சுடச்சுட வெளியிட்டான்.

மனோ மௌனமாக... கொண்டுவந்த பொருட்களை மேசையில் வைத்துவிட்டு சோபாவில் சாய்ந்தான்.

என்னடா... நான் நீ சந்தோசப்படுவாயென நினைச்சன். நீ என்னடா என்றால் முகத் தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கி றாய். என்ன ஏதும் பிரச்சினையே?
இல்லை மச்சான்... இன்றைக்கு அந்த வழக்கெல்லோ நடந்தது.

ஆ! அதுவே... நீ வீணாய் அவசரப்பட் டிற்றாய் மச்சான். நீ சும்மா வழக்குப் போடப்போய் எல்லாத்தையும் நாத்திட்டாய்.

இல்லை மச்சான். நான் அவளவையை மாட்டிவிடுவம் என்று பார்த்தன். அவளவை என்னென்றால் எல்லாத்தையும் உளறி என்னை மாட்டிவிட்டிட்டுதுகள்.

சரி சரி... இனி நடந்தது நடந்து போச்சுது. இனி ஏதும் காசு கட்டுறது என்றால் கட்டிப் போட்டு உன்ர பாட்டில இரு. இனி மனிசி யும் வரப்போறா. ஒழுங்காக இரு. அவவிற்கு உதுகள் தெரிஞ்சா, பிறகு நீ குடும்பம் நடத்தின மாதிரித்தான்.

விசரைக் கிளப்பாதை மச்சான். நான் என்ன செய்யிறதென்று தெரியாமல் இருக்கிறன். அவ வரமுதல் அந்தத் தலையிடியை எப்படியும் முடிக்க வேணும்.
மனிசி வந்தாப்பிறகு இதைப் பற்றி அவவிற்கு மூச்சுக் காட்டிப் போடாதே யுங்கோ.

## விசாரணை 2

அந்தச் சிறிய அறைக்குள் காற்று நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் அருகியேயிருந்தன. அதிகாரி களின் முகங்களில் தென்பட்ட கடு கடுப்பு நுழையக்கூடிய கொஞ்சநஞ்ச காற்றையும் விரட்டியடித்தது.

சுமதியை ஒரு அதிகாரி அவ் அறைக் குள் அழைத்து வந்தான். அவள் நடுங்கிக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் சோகம், களைப்பு, பயம், எதிர்பார்ப்பு, ஏக்கம் என எல்லாம் ஒன்று சேர குடிகொண்டிருந்தது. இரவுப் பயணம் அவளை மிகவும் காயப்படுத்தி யிருந்தது. அவளது ஆடைகள் மிகவும் அழுக்குப் படிந்து காணப்பட்டன. அவளது சப்பாத்துக்கள் அவை கடந்து வந்த காடுகள், பற்றைகள், ஆறுகள் என்பவற்றின் அடையாளங்களைத் தாங்கி நின்றன.

அதிகாரி ஆரம்பித்தான்.
முதலில் நாம் உமது பெயர் மற்றும் ஏனைய விபரங்களைப் பற்றி விசாரிப் போம். அதன் பிறகு நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பது உமது சுதந்திரம்.

www.tamilarangam.net



உமக்குத் தாகமாக இருக்கிறதா?
அவள் ஓமெனச் சொல்வதுபோல் மெதுவாக தலையசைத்தாள்.

அவளுக்கு ஒரு கிளாஸ் குழாய்நீர் வழங்கப்பட்டது.

நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தயாராகவுள்ளீரா?
அவள் ஓமெனக் கூறியதைத் தொடர்ந்து விசாரணை ஆரம்பமாகியது.

முதலில் அவளது பெயர், பெற்றோரின் விபரம், இலங்கையில் அவளது வதிவிடம் மற்றும் வேறு விபரங்களும் பதிவுசெய்யப்பட்டன.
நீர் ஜேர்மனிக்குள் நுழைவதற்கு அவசியமான பத்திரங்களின்றி இங்கு வந்து சட்டவிரோதமான முறையில் நிலை கொண்டிருக்கிறீர். ஜேர்மன் அரசின் சட்டத்தின்படி நீர் குற்றம் இழைத்திருக்கிறீர்.

இன்று காலை 3.10 க்கு நீரும் இன்னும் இரண்டு இலங்கையர்களும் டெலிபோன் பூத் அருகில் வைத்து கைதுசெய்யப் பட்டிருக்கிறீர்கள். நீர் அவ்விடத்திற்கு எவ்வாறு வந்தீர்?
நான் 2 மணியளவில் டக்ஸி மூலமாக வந்து சேர்ந்தேன்.

உம்முடன் கைதானவர்களும் நீரும் ஒன்றாக பயணம் செய்தீர்களா?
இல்லை. எனக்கு அவர்களைத் தெரியாது. நான் தனியாகத்தான் வந்தேன். அவர்கள் எப்படி வந்தார்களென எனக்குத் தெரியாது.

அதிகாரிகள் எந்த நாட்டிலிருந்து வந்தீர்? எந்த எயர்போர்ட், சாரதிமாரின் அங்க அடையாளங்கள், கடந்துவந்த நாடுகள், தங்கிய இடங்களென வழமையான கேள்விகளைக் கேட்டனர். அவளும் வழமையாக எல்லோரும் சொல்வதுபோல் தெரியாது, ஞாபகமில்லை என்ற பதில்களையே தந்தாள்.

இவ்வளவு பெருந்தொகையைக் கொடுத்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர், இப்படித் தெரியாது என்றால் நாம் நம்பமாட்டோம். எங்களை என்ன பைத்தியக்காரர்கள் என்று நினைக்கிறீங்களா?
அதிகாரி ஆத்திரத்தில் கத்தினான்.

நான் உண்மையைத்தான் சொல்கிறேன் சுமதி ஆற்றாமையின் வெளிப்பாடாய் கண்ணீர் விட்டாள்.

என்ன சின்னப்பிள்ளைமாதிரி அழுகிறீர். ஒழுங்காகப் பதில் சொல்லும்.
அதிகாரிக்கு உதவி செய்யும் 'நன் நோக்கில்' மொழிபெயர்ப்பாளரும் அவளுடன் எரிந்து விழுந்தான்.

ஏன் ஜேர்மனியைத் தேர்ந்தெடுத்தீர்?
அதிகாரி கெட்டித்தனமான கேள்வியொன்றைக் கேட்டுவிட்ட பிரமையில் இருந்தான்.

எனது நாட்டில் பிரச்சினை. எனது தம்பிமார் இயக்கத்திற்குப் போயிட்டினம். தங்கச்சி குண்டுபட்டு செத்துப் போயிட்டா. என்ர அம்மா, அப்பா எங்கேயென்று தெரியாது. அவள் மேலே கதைக்க முடியாமல் விக்கிவிக்கி அழுதாள்.

இங்கு நீர் என்ன எதிர்பார்க்கிறீர்?
அதிகாரி இன்னொரு கெட்டித்தனமான கேள்வியொன்றை உதிர்த்தான்.
எனக்கு அரசியல் தஞ்சம் வேண்டும்.

www.tamilarangam.net

பிற கேள்விகள் கேட்கப்பட்ட பின்னர் அன்றைய விசாரணை முடிவுற்றது.

அன்றைய விசாரணையைப் பதிவு செய்தவர், விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு கிளாஸ் தண்ணீர் கொடுக்கப்பட்டது என்று தமது மனிதாபிமானத்தைக் காட்டி, பின்னர் இறுதியாக இந் நபர் சொன்னவை நம்பத்தகுந்தவையாக இல்லையென்ற குறிப்புடன் ஆவணப்படுத்தியிருந்தார்.

## காட்சி 2

என்னடா சோர்ந்துபோய் இருக்கிறாய்? போன விசயம் எப்படி? லோயர் என்ன சொல்லுறார்?
குலம் அக்கறையாக விசாரித்தான்.

எல்லாம் நாறும் போல இருக்கு மச்சான். லோயரும் கை விரிக்கிறார். அநியாயமாக காசைக் கட்டிப் போட்டன்.

என்ன சொல்லுறார்?
சரியாக இறுக்கிப் போட்டாங்களாம். எனக்கு எதிராக நிறைய சாட்சிகள் வைச்சிருக்கினமாம். நான் முந்திப் போன இடங்களில இருந்தெல்லாம் சாட்சிகள் எடுத்து வைச்சிருக்கினமாம். நான் அப்படியான இடங்களுக்குப் போற ஆளில்லை என்று இனி புரூவ் பண்ண கஸ்ரமாம்.

உனக்கு எத்தினை தரம் சொல்லியிருக்கிறன். போற இடத்தில அலுவலை முடிச்சிட்டு ஒழுங்காக வீட்டை வாற வழியைப் பார்க்கச் சொல்லி. உனக்கு எங்க போனாலும் சும்மா இருக்க ஏலாது. நாங்களும்தான் போறோம். இப்படி பிரச்சினைகளையா கொண்டுவாறம். நீ அதுகளையும் எங்கடை பெட்டைகள் போல நினைச்சிட்டாய்.

நீ உதவி செய்யிறதை விட்டிட்டு அட்வைஸ் பண்ணிக் கொண்டுபோறாய்.

கோவிக்காதை மச்சான்... நான் என்னத்தையென்டு செய்ய. நான் மறந்திட்டன் பார்த்தியா... உன்ர மனிசி அடிச்சவ. எங்கையோ கெம்னிஸ்டுக்குக் கிட்ட காம்ப்ல விட்டிருக்கிறாங்களாம். ஒரு மாதம் உள்ளுக்க வைச்சிருந்தவங்களாம். இப்ப வெளியில விட்டிருக்கிறாங்களாம்.

இந்த மனிசியும் இந்த நேரமாய்ப் பார்த்து வந்து நிற்குது.

நீ குடுத்து வைச்சனியடா. இப்ப எல்லாரையும் உள்ளுக்க வைச்சிட்டே அனுப்புறாங்கள். இவவை ஏதோ வெளியில விட்டிட்டாங்கள். ஏதோ அந்த பெட்டையின்ர நல்ல காலம்.

ஓ... அவவிற்கு நல்ல காலம். எனக்கெல்லோ கெட்டகாலம் தொடங்கியிருக்குது. இப்ப யாரும் எங்கடையள் என்ர விசயத்தை அவிட்டு விட்டால் நான் நாறினேன். அவவை என்ர அலுவல் முடியமட்டும் காம்பில அல்லது தமயன் வீட்டிலதான் வைச்சிருக்க வேணும்.

நீ கவலைப்படாதையடா. யார் அவவிற்கு சொல்லப் போயினம். இங்க கனபேருக்கு இது தெரியாது. அப்படி தப்பித்தவறி தெரியவந்தால் சமாளியேன். மற்றது உந்த மொஸ்கோ எல்லாம் நின்று வாறவளுக்கு இதெல்லாம் சின்ன விசயம். எல்லாம் பழகியிருக்கும். நீ நடக்கப்போற மற்ற அலுவல்களைக் கவனி.

www.tamilarangam.net



## விசாரணை 3

என்ன பேசாமல் இருக்கிறீர். நான் இவ்வளவு காலமும் உம்மைப் பார்க்க வரவில்லை என்று கோபமே? எனக்கு சில முக்கிய அலுவல்கள் இருந்தது. அதுதான் வர யில்லை. அண்ணன் எல்லா அலுவல் களையும் வடிவாப் பார்த்தவர்தானே. நீர் கொஞ்ச நாளைக்கு இங்கையே இரும். காம்பிற்கு அடிக்கடி போய்வாறனீர்தானே. அங்க தெரிஞ்ச ஆக்கள் இருக்கினம்தானே.

ஓம். அதுகளைப் பற்றி பிரச்சினையில்லை. ரிஜெக்ட் வந்தவுடனே பிடிச்சு அனுப்புறாங் களோ தெரியாது. அனுப்பினால் போக வேண்டியதுதான். எனக்கென்றால் எல்லாமே அலுத்திட்டுது.

ஏன் விரக்தியாகக் கதைக்கிறீர்? எல்லாம் சரிவரும். கவலைப்படாதேயும். இங்க இப்படி த்தான். கொஞ்ச நாளைக்கு கஸ்ரம். பிறகு எல்லாத்துக்கும் பழகிடுவீர்.

நான் வெளிநாட்டிற்கு வெளிக்கிட்டு பட்ட கஸ்ரங்கள் போதும். இனி என்ன நடந்தா லும் பரவாயில்லை.

மனோகரன் உசாரானான். குலம் வேறு அவன் மனக்கண்முன் தோன்றி மறைந்தான்.

கஸ்ரங்கள் என்று என்னத்தைச் சொல்லுறீர். வாற வழியில யாராவது பிரச்சினை கொடுத் தவங்களோ? நான் என்ன கேட்கிறேன் என்று விளங்கியிருக்கும் என்று நினைக்கிறன்.

சுமதி பேசாதிருந்தாள்.

என்ன நான் கேட்கிறன். நீர் பேசாமல் இருந்தால் எப்பிடி?

என்னத்தைக் கதைக்கிறது. உங்கட கேள்வியின்ர அர்த்தம் எனக்கு விளங்கி ட்டுது. நீங்கள் ஆம்பிளைகள். எல்லோ ரும் ஏன் இப்படி யோசிக்கிறீங்கள் என்று எனக்கு விளங்கவில்லை.

அர்த்தம் விளங்கினால் கேட்ட கேள்வி க்குப் பதில் சொல்ல வேண்டியது தான்.

நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக் கில்லை. பொலிஸில மட்டும்தான் விசாரணை என்று பார்த்தால் நீங்களும் விசாரிக்கிறீங்கள். என்னை சந்தித்த முதல் நாளே இப்படி கேட்க வெட்க மில்லையா? நாங்கள் வருகிற வழியில எவ்வளவு கஸ்ரப்பட்டு, உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு வர்றம். அது களைப் பற்றியொன்றும் யோசிக்காமல் நாகூசாமல் விசாரணை செய்ய வந்தி ட்டினம்.

கதையை விட்டிட்டு ஒழுங்காகச் சொல்லும். நான் நேராகவே கேட்கிறன். யாரும் ஏஜென்சிகாரர் உம்மோடு தொடர்பேதும் வைச்சிருந்தவையே? நீர் வெளிக்கிட்டு ஒரு வருசத்திற்குள்ளை வந்து சேர்ந்திட்டீர். எனக்கென்றால் சந்தேகமாகத்தான் இருக்குது.

சுமதி சடக்கென்று எழுந்தாள்.

ச்சீ... சந்தேகம். சந்தேகம். எனக்கு முன்னாலே நிற்காதேயுங்கோ.
சுமதியின் முகம் நன்கு சிவந்திருந்தது. அவளது நெஞ்சடைத்தது. வார்த்தை கள் இடையில் உடைந்து சிதறின.

ஏன் கோபிக்கிறீர்? நாங்கள் ஒன்றாக வாழப்போறனாங்கள். ஆனபடியால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதையும் வெளிப்படையாகக் கதைக்கிறது நல்லது.
மனோகரன் நிலைமையை சீருக்குக் கொண்டுவர முனைந்தான்.

கதைக்கிறதுக்கு எனக்கொன்றும் ஆட்சேப னையில்லை. ஆனால் உங்களோடு கதை க்க நான் தயாராகவில்லை. நீங்கள் கேட்ட மாதிரி நான் உங்களைக் கேட்டால் என்ன செய்வீங்கள்?
இங்கே... என்ர விசரைக் கிளப்பாதேயும். இனி உம்மோடு கதைச்சுப் பிரயோசனம் இல்லை. உம்முடைய அண்ணரட்டைச் சொல்லி டொக்டரிட்டைக் காட்டி வடிவாகச் செக் பண்ணச் சொல்லவேண்டும். அதுக்குப் பிறகு தான் உம்மைக் கூட்டிக்கொண்டு போறதைப் பற்றி யோசிக்க வேணும்.
மனோகரன் போவதற்காக எழுந்தான்.

நான் இப்பவே யோசிச்சிட்டன்.
சுமதி எழுந்து அறைக்குள் சென்றாள்.

## காட்சி 3

ஏனம்மா இவ்வளவு லேட்? இங்க மனோ வந்து காவல் இருக்கிறார். டொச் கிளாஸ் ஆறு மணிக்குத் தானே முடியுறது.
சுமதியின் அண்ணன் சபேசன் அக்கறை யாக விசாரித்தார்.

இல்லை அண்ணா... உங்களுக்குச் சொல்ல மறந்திட்டன். அந்த பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலிருக்கிற வீட்டில பிள்ளை பார்க்க ஆள் தேவையென்று சொன்னதென்று பாமினி அக்கா சொன்னா. அதுதான் ரெண்டு பேரும் அப்பிடியே போயிட்டு வாறம். அடுத்த கிழமையிலிருந்து வரட்டாம்.
சுமதி அண்ணனைப் பார்த்து கூறிவிட்டு சோபாவில் அமர்ந்தாள்.

இப்ப என்னத்திற்கு இங்க வேலை தேடுறீர்? நான் வாற மாதமளவில உம்மை அங்க கூட்டிக்கொண்டு போற துக்கு யோசிச்சிருக்கிறன். டொச் படிச்சு இங்க என்னத்தைச் செய்யப் போறீர். நாங்கள் எல்லோரும் டொச் படிச்சிட்டே இங்க இருக்கிறம்.

சுமதி அவன் சொல்லும் ஒன்றையும் சட்டை செய்வில்லை. ஏதோ யோசித்த வளாக சோபாவிலிருந்த மகசின் ஒன்றை நோட்டமிட்டுக் கொண்டிருந் தாள்.

சுமதி... நான் உம்மோடுதான் கதைக் கிறன். நீர் ஏன் பேசாமல் இருக்கிறீர். டெலிபோன் எடுத்தாலும் உடனே கட் பண்ணிட்டு போறீர். உமக்கு என்ன நடந்தது?

நீங்கள் கதைச்சுக் கொண்டிருங்கோ. நான் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறேன்.
நிலைமையைப் புரிந்துகொண்ட சபேசன் பேச்சை மாற்றும் நோக்கில் எழுந்து சென்றான்.

ஏதோ யோசித்தவளாக சோபாவிலி ருந்து எழுந்த சுமதி,
இங்க பாருங்கோ மனோ...எனக்கு டொச் படிக்கிறது முக்கியம். நான் இப்ப கிடை க்கிற வேலையை செய்திட்டு பிறகு விசா சரி வந்தவுடன, வேற ஏதாவது செய்ய யோசிச்சிருக்கிறன். நான் இந்த சிற்றியில அண்ணாவோடதான் இருக்கப் போறன். இங்கே மாத்திறதுக்காக லோயரிட்ட எல்லாம் கதைச்சாச்சு!
கூறிவிட்டு...
அவ் இடத்தைவிட்டு அகன்றாள் சுமதி! ■

www.tamilarangam.net



அன்புடன் தோழிகளுக்கு!

உங்கள் ஆக்கங்கள் இன்னமும் வந்து சேராத காரணத்தால் ஆறாவது பெண்கள் சந்திப்பு மலர் இதுவரை வெளியிட முடியாமற் போனது பற்றி அறிந்திருப்பீர்கள். அத்துடன் அடுத்த வருடம் பெண்கள் சந்திப்பின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஆறாவது பெண்கள் சந்திப்பு மலரை சிறப்பிதழாக வெளியிடவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே தோழியர்களே உங்கள் ஆக்கங்களை இந்த வருட இறுதிக்குள் அனுப்பி வைக்கும் படி தோழமையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்றி!

பெண்கள் சந்திப்புக் குழு

தொடர்புகளுக்கு
Nirupa Nagalingam
Adalbert Str 6
10999 Berlin
Germany




சக்தி (ஜனவரி-மார்ச) முதல் தடவையாகக் கிடைக்கப்பெற்றேன். சக்தி வடிவில் தங்களது நல்ல சேவைக்கு முதலில் எனது பாராட்டுக்களுடன், மனமார்ந்த வாழ்த்துக்கள். சக்தியில் ஒரேயொரு குறை மட்டும் பெரிதாய்த் தோன்றியது. வாசகர்களின் கருத்துக்கள் படைப்புக்கள் பற்றிய விமர்சனங்கள் நூலில் எங்கேனும் காணவில்லை. சக்தி பற்றிய விமர்சனங்கள் சக்தியை மேலும் மெருகூட்டும் வளர்க்கும். அதனை எப்பவும் கருத்திற் கொள்ளுங்கள்.

நட்புடன்
சந்திரா ரவீந்திரன்
லண்டன்

சக்தி இதழின் அட்டைப்படம் மிகவும் சிந்திப்பதற்குரியது.அதன் உள்ளீடு பிரமாதம். ஏப்-ஜன் 99 இதழில் வெளியாகியுள்ள 'பிரச்சினைகள் பற்றி... திறந்த மனத்துடன் பெண்கள்' கண்ணில் நீர் வருகிறது. பெண்களுக்கான வாழ்வியல் தளம் நசிந்து உள்ளதை எண்ணிப்பார்க்கும் போது நீங்கள் முகப்பில் குறிப்பிட்டுள்ளபடி Arms to Fight; arms to Protect என்பது மிகவும் சரி எனத் தோன்றுகின்றது. சுருக்கமாகச் சொல்வதென்றால் என் பார்வையிலும், நண்பர்கள் வட்டப் பார்வையிலும் சக்தி மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

அரங்க மல்லிகா
இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

✎✎✎

சக்தி ஜனவரி-மார்ச் 99 இதழில் ஆ-ர் குழுவில்... இந்தப் பத்திரிகை வந்துதான் என்னத்தைப் பெண்களிடையே செய்கிறது...
இது சில பெண்களின் கருத்து எனக் கூறப்பட்டிருந்தது. எழுத்துக்கள் மிகவும் வலிமையானவை. ஒரு கூரிய கனமான ஆயுதத்தை விட கூர்மை, வலிமை, கனம் எல்லாமே எழுத்துக்கு உண்டு.

சந்திரவதனா செல்வகுமாரன்
ஜேர்மனி

புலம்பெயர் வாழ்வில் நிறையப் பெண்கள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் வெளியில் வர வழி தெரியாமல் ஆணாதிக்க பூட்ஸ் காலுக்குள் மிதிபட்டு நசுங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் எத்தனையோ பேர் இப்படியான எழுத்துக்களால் துணிவு பெற்று வெளியுலகைப் பார்க்கத் தொடங்கியுள்ளார்கள். ஆனாலும் இன்னும் எத்தனையோ பெண்கள் வெளியுலகத்துக்கு வரவே முடியாமல் குமுறலுடனும், இதுதான் வாழ்க்கை என்ற சலிப்பான எண்ணத்துடனும் வாழ்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் எண்ணிக்கைதான் இங்கு அதிகமாகவுள்ளது. பண்பாடு, கலாச்சாரம் என்ற போர்வைக்குள் அவலமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் எங்கள் பெண்கள் விடுதலை பெற எழுத்தாற்றல் மிக்க பெண்கள் கண்டிப்பாக எழுத வேண்டும்.

எழுதப்படும் இதழ் பெரிதா சிறிதா என்பதல்ல பிரச்சினை. அதில் வரும் விடயங்கள் எந்தளவுக்கு உரியவர்களிடம் செல்கிறது என்பதும் என்ன மாற்றத்தை அங்கு ஏற்படுத்துகிறது என்பதுமே முக்கியம். எழுத்துக்களின் வலிமையில் ஒரு பெண்ணாவது ஆணாதிக்க அடிமை விலங்கை உடைத்தெறியத் துணிவாளேயானால் அதுவே அந்த எழுத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

அடுத்து நெஞ்சை உலுக்கிய கொலைச் செய்தியில் நிதர்சினியின் மரணம் தந்த அதிர்ச்சியில் தமிழராகப் பிறந்தவர்கள் தான் இந்த தகாத வேலையைச் செய்தார்கள் என்றபோது மனசு வெட்கித் தலைகுனிந்தது உண்மை. இதுபற்றி நயாகரன் மிகக் காரசாரமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். ஆனாலும் இவர் சொல்லும் காரணங்களால் மட்டும்தான் இவைகள் நடக்கின்றனவா? சரி அதுதான் காரணம் எனில் அவைகள் எல்லாம் சரி செய்யப்பட்டு ஒரு புதிய சமுதாயம் தோன்றுமா?

எதுவுமே நடப்பதற்கான சாத்தியங்கள் இங்கு இல்லை. இந்த நிலையில் எந்த பலாத்காரத்தையும் எதிர்க்க பெண்களிடம் துணிவும் வலுவும் இருக்கவேண்டும். அதுவும் பெண்ணிடம் இல்லையென்று உணரும் அல்லது தெரியும் பட்சத்தில்தான் ஆண்கள் எதையும் பெண்கள் மேல் திணிக்கவும் பெண்களைப் பலாத்காரப்படுத்தவும் முனைகிறார்கள்; துணிகிறார்கள். பெண்களைப் பொறுத்தவரையில் இதையுணர்ந்து தம் பெண்பிள்ளைகளுக்குத் துணிவூட்டி வளர்த்தால் பெண்களின் எதிர்காலம் இவ்வளவு அவலமானதாகவும் பரிதாபமானதாகவும் இருக்காது.

www.tamilarangam.net



"அந்தப் பச்சைக் காலுறைகள்"
தயாநிதி மிகவும் நல்லதொரு நோர்வேஜியக் கதையினை தமிழில் மொழிபெயர்த்துள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தக் கதையை வாசித்து முடித்தபோது ஒரு மனைவி தன் கணவனை அடித்துக் கொன்றிருக்கிறாள் என்பதில் அணுவளவேனும் மனம் பதைக்கவில்லை. மாறாக அந்த மனைவியின் மேல் அவள் மெல்லிய உணர்வுகள் சிதைக்கப்பட்ட காரணத்தால் பரிதாபமும் கனிவும் தான் ஏற்படுகிறது. வெளியிலே தாம் நல்லவர்கள் போல நடித்துக் கொண்டும் தாம் தமது மனைவியர்க்கு தன்னிச்சையாக சுதந்திரம் கொடுக்கிறோம் என்று காட்டிக் கொண்டும் மனைவியின் மெல்லிய உணர்வுகளை அடித்து நொருக்கும் கணவன்மார் எங்களுக்குள் மட்டும்தான் என்றில்லை. உலகமெல்லாம் பரவியிருக்கிறார்கள். பாவம் மனைவியர்தான். இந்தக் கதையில் வரும் மனைவியைப் போலவே சுற்றியுள்ளவர்களால் 'பொறுமையில்லாதவள், அடங்காப்பிடாரி, நரம்புத்தளர்ச்சிக்காரி' என்று மேலும் கூசாமல் தூற்றப் படுகிறார்கள். இந்தக் கதையை வாசித்தபோது சில மாதங்களுக்கு முன்னால் வேலைநேர இடைவேளையின் போது எனக்கும் எனது ஜேர்மனிய நண்பிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் தான் ஞாபகம் வருகிறது. அதையும் இங்கு தருகிறேன்

நெலி: ஸ்சுவைன் க்கு என்ன தமிழ்?
நான்: தமிழில் நிறைய நல்ல வார்த்தைகள் இருக்க போயும் போயும் இதைக் கேக்கிறாய். ஸ்சுவைன்க்கு பன்றி (அவள் மிகவும் பிரயத்தனப்பட்டு பன்றியை உச்சரித்து பன்டி என்றாள்)
நான்: ஏன் உனக்கு இது?
நெலி: என் கணவனைத் திட்ட
நான்: ஏன்? (அதிர்ச்சியுடன்)
நெலி: அவனை டொச் மொழியில் மட்டும் திட்டினால் போதாது. உனது தமிழில் இன்னும் என்னென்ன மொழியில் எல்லாம் திட்ட முடியுமோ அதிலெல்லாம் திட்டவேண்டும்.
நான்: அவன் உனது கணவனல்லவா?
நெலி: நீதான் அவனை எனது கணவன் என்கிறாய். அவன் என்னை தனது வேலைக்காரியாகவே நினைக்கிறான். அவனுக்கு எட்டு மணித்தியாலங்கள் வேலைசெய்தாலே உடம்பு களைத்துவிடுமாம். மாலை 4.30க்கு வீட்டுக்கு வந்தால் நான் சமைத்து வைத்ததைச் சாப்பிட்டு விட்டு சோபாவுக்குள் சுருண்டு கிடந்து தொலைக்காட்சி பார்ப்பான். வீட்டிலே ஒரு துரும்பு கூட அசைக்க மாட்டான்.
நான் எட்டு மணித்தியாலங்கள் இங்கோ சம்பளத்திற்கு வேலைசெய்து விட்டு 10 மணித்தியாலங்கள் வரை வீட்டில் சம்பளம் இல்லாமல் வேலை செய்கிறேன். 6 மணி நேரத்தை விட குறைந்த நேரம்தான் தூங்குகிறேன். அப்போது கூடத் தூங்கவிடுவானா? அவனுக்கு அதுக்கு மட்டும் உடம்பு இயலும்.

எனது உணர்வுகளை அவன் என்றைக்குமே மதிப்பதில்லை. அவனுக்கு தான் கூட உழைக்கிறேன் என்ற திமிர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலிலிருந்து கழற்றிய உறைகளைக் கூட கட்டிலடியில் சுருட்டியபடி போட்டுவைப்பான். நான்தான் அதை எடுத்துக் கொண்டு போக வேண்டுமாம். இதெல்லாம் அவன் என்னை அவமதிக்க வேண்டும் என்று வேணுமென்று செய்வது போலவே எனக்குத் தோன்றுகிறது.

தனது எட்டு மணித்தியால வேலைக்குமேல் அவன் வேறெதுவும் செய்யமாட்டான். நான் இந்த வேலை வீட்டு வேலை சாமான்கள் வாங்குவது என்று மாய்கிறேன். சாமான் வாங்குவதற்கு காரைக்கூட தரமாட்டான். வேலை முடிந்து தான் களைத்து வரும்போது பஸ்ஸில் வரமுடியாதாம். நான் தோள் மூட்டுக்கள் வலிக்க சாமான்களைத் தூக்கிக் கொண்டு நடக்கிறேன். ஏதாவது நான் வாங்க மறந்தாலும் நாய் போல குரைப்பான்.

பிள்ளைகளின் வேலையாவது செய்கிறானா?
நேற்றுக் கூட நான் வேலையால் போனதும் சோபாவினுள் சுருண்டு கிடந்தவனுக்கு கோப்பி போட்டுக் கொடுத்து இதமாக இரண்டு வார்த்தையும் பேசிவிட்டு என் உடல் அயர்ச்சியையும் பொருட்படுத்தாது அந்த சோம்பேறியினுடையதும் பிள்ளை களினதும் உடுப்புக் குவியலையும் அயன் பண்ணிக் கொண்டிருந்தேன். நீண்ட நேரமாக அயர்ன் பண்ணிக் கொண்டிருந்ததால் எனக்குத் தொண்டை வரண்டு களைப்பாக இருந்தது. இந்த நிலையில் தான் அவன் திடீரென்று நீ எனக்கு கோப்பி தந்து 2 மணிநேரங்களுக்கு மேலாகிவிட்டது. களைத்திருப்பேன் என்று தெரியாதா? கோப்பி போடு என்று கத்தினான்.

நானும் பொறுமையிழந்து, நான் அயர்ன் பண்ணிக் கொண்டிருக்கிறேன்; அதற்குக் கூட உதவி செய்யாது நீ சும்மா குந்திக் கொண்டுதானே இருக்கிறாய்; நீயே தயாரித்துக் குடி என்றேன். என்னமாய் அவனுக்கு கோபம் வந்தது. கோப்பி போட்டுத்தர மறுக்கும் நான் ஒரு மனைவியே இல்லையாம். என்ன மனிசன் இவன். வேலையால் வந்து ஆறாமல் அமராமல் தொடர்ந்து வேலைசெய்கிறேன்; உதவவில்லை உபத்திரவம் தராமல் இருக்கலாமல்லவா? மற்றவர்கள் முன்னிலையில் என்மேல் பாசம் பொங்கி வழிவது போல் பாசாங்கு செய்யும் அவன் என் பிள்ளைகள் கூட வீட்டில் இல்லாதபோது என்னை அடிக்க வந்தபோதுதான் அது நடந்தது. எனக்கு அத்தனை துணிச்சல் எங்கிருந்து வந்தது என்று எனக்கே தெரியாது. நான் எழுந்து நான் இருந்த கதிரையைத் தூக்கி அவனை அடிக்க முற்பட்டேன்.
அதிர்ந்தவன் என்னை அடங்காப்பிடாரி என்றான்.
நான் இவனைப் பன்டி என்று சொல்வது தப்பா நீயே சொல்லு!

நான் மௌனமானேன்
(என்றாவது ஒருநாள் இவள் கூட நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு தன் கணவனை இரும்பால் அடித்து அவன் உயிரை நொருக்கலாம், அல்லது விவாகரத்துக் கோரலாம். அப்போது நாம்கூட வாய் கூசாமல் ஜேர்மன் பெண்கள் இப்படித்தான் கலாச்சாரம், பண்பாடு இவர்களுக்கு முக்கியமில்லை என்போம்.)

www.tamilarangam.net



சக்தி ஏப்ரல்-யூன் , 'புதுஉலகம் எமை நோக்கி' என்பன கிடைக்கப் பெற்றேன். 'புது உலகம் எமை நோக்கி' நல்லதொரு முயற்சி. பெண்களின் கதைகளைத் தேடி ஒன்றாகத் தொகுத்த உங்கள் செயற்பாடும் நோக்கமும் பாராட்டத்தக்கதாகவும் மகிழ்வைத் தருவதாகவும் உள்ளது. உங்களுடன் சேர்ந்து செயற்பட்ட சுவிஸ் றஞ்சிக்கும் இன்னும் எல்லா வகையிலும் உதவிகள் செய்து ஒரு நூல் உருவாக உதவிய அனைத்து அன்பர்களுக்கும் எனது சந்தோசமான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். கதைகளை முழுமையாக வாசித்து விட்டு எனது கருத்துக்களை எழுதுகிறேன்.

சக்தி ஏப்ரல்-யூன் 99 இல் வெளிவந்த Arms to fight Arms to protect என்ற தலைப்பிலான கட்டுரையை தமிழாக்கியது அந்தக் கட்டுரை மனதை வேதனைப்படுத்தும் படியாக இருந்தது. எமது பெண்கள் படும் அவலம் வாசித்து வெகுநேரமாகியும் மனதை நெருடிக் கொண்டே இருக்கிறது. இந்தப் பெண்கள் துணிந்து தம் அவலத்தைச் சொல்லியுள்ளார்கள். இன்னும் சொல்லாமலே தமக்குள் மாய்ந்து போகின்றவர்கள் எத்தனை பேர்! இந்தப் பெண்களின் நிலை மாறவேண்டும். சக்தி அவர்களின் நிலை வெளியில் வர தன் பணியைச் செய்ய முன்வந்தது நல்ல விடயமே. லைலா என்ற ஈரானியத் திரைப்பட விமர்சனம் வாசித்தபின் படத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் மனசை நிறைத்து நிற்கிறது. யமுனா ராஜேந்திரன் அழகாக எழுதியுள்ளார். இடம்பெற்ற கவிதைகள் எல்லாமே நன்றாக இருந்தன. 'நாளையல்ல இப்போதே' இன்னும் வாசிக்கவில்லை. 'விலங்குடைப்போம்' சிறுகதையில் குறிப்பிடத்தக்க எழுத்துப் பிழைகள் உள்ளன.

சக்திக்கு!

சக்தி ஜனவரி-மார்ச் 1999 இதழுக்கு பாரிசில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்ட சிறுமி பற்றிய எனது கட்டுரையில் ஒரு பகுதியை சக்தி ஆசிரியர் குழு உடன்பாடின்மை காரணமாக பிரசுரிக்கவில்லை என்ற குறிப்பு ஒன்றை வெளியிட்டு இருந்தனர். இக் குறிப்பின் மூலம் அப் பகுதியில் உள்ள தவறு என்ன என்பதை அறிய முடியாதுள்ளது.

பி. றயாகரன்
*'சமர்'ஆசிரியர்*

ஆசிரியர் குழுவின் கருத்து முரண்பாடு வெளியிடாமை என்பது அவர்களின் அரசியல் நிலை சார்ந்தது. அதற்கு நான் மதிப்பளிக் கிறேன். ஆனால் என்ன கருத்து முரண்பாடு என்பதை கட்டுரையைப் பிரசுரித்து விட்டு கூறியிருக்கலாம் அல்லது அதை கருத்து முரண்பாடு பகுதியில் கூறியிருக் கலாம். இவ்வாறு மொட்டையாக குறிப்பிடுவது அரசியலற்ற நியாயவாதமாகும். வெளியிடாத பகுதி இக் கொலையைக் கண்டித்து வெளியாகிய ஆணாதிக்கத்தை தக்கவைத்து பாதுகாக்கும் வகையில் வெளியாகிய வரிகள் மீது இருந்தது குறிப்பிடத்தக்கது. பொதுவாகக் கண்டிக்கும் பலர் அதனூடாக ஆணாதிக்கத்தைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாக்க நியாயப்படுத்த எடுத்த முயற்சியை விமர்சித்து இருந்தேன். பெண்ணிலை வாத பத்திரிகை இதில் அக்கறை செலுத்தியிருக்கவேண்டும். என்னுடைய கருத்து அல்லது வேறு தவறுகள் ஏதும் இருப்பின் தாராளமாக என்னை மீள் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதல்லவா நியாயம்.

## பரிசு விமர்சனத்துக்கு மட்டும்தானா அல்லது...

கடந்த ஜீலை மாதம் 10ம் திகதி சுவிஸ் சூரிச் நகரில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பின் ஒரு நிகழ்ச்சியாக *'புலம்பெயர் பெண்களும் தொடர்புச் சாதனங்களும்'* என்ற தலைப்பில் ஜயந்திமாலா குணசீலன் ஒரு கலந்துரையாடலைச் செய்திருந்திருந்தார். இதில் புலம்பெயர் வானொலி களான ஐ.பி.சி (லண்டன்), ரி.ஆர்.ரி (பிரான்ஸ்), ரி.பி.சி. (லண்டன்) அத்துடன் புலம்பெயர் பத்திரிகைகளான ஈழநாடு, ஈழமுரசு ஆகிய தொடர்பு சாதனங் களில் பெண்களின் பாத்திரம்/பங்கு என்ற கலந்துரையாடல் ஒன்று செய்யப்பட்டது.

ஜயந்திமாலா இரண்டு வருடங்களாக தொடர்ச்சியாக ரி.ஆர்.ரியில் ஐரோப்பிய செய்திகளை -இலவசமாக- தொகுத்து வழங்கி வந்தவர். ஆனால் இக் கலந்துரையாடலில் ரி.ஆர்.ரியையும் சேர்த்து விமர்சித்த ஒரே காரணத் திற்காக ஜயந்திமாலா குணசீலன் -அவருக்குத் தெரியாமலேயே- நிகழ்ச்சி வழங்குவதிலிருந்து விலக்கப்பட்டார். அவர் தொலைபேசி மூலம் காரணம் கேட்டபோது 'ஏன் எங்கள் வானொலியை விமர்சித்தீர்கள். அதனால்தான்...' என்று பதில்கிடைத்தது.

மக்களுக்காகவே இயங்குவதாக சொல்லிக்கொள்ளும் தொடர்பு சாதனங்கள் (பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி) போன்றவற்றை விமர்சிக்க அனைவருக்கும் உரிமையுண்டு. அந்த உரிமையை மறுப்பவர்கள் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு எதிரானவர்கள். ரிஆர்ரி நடந்துகொண்ட முறை இச் செயற்பாட்டுக்குள் அடங்கும்.

இன்னுமொரு உறுத்தல் மனதில் எழத்தான் செய்கிறது. இந்த ஜனநாயக மறுப்பு விமர்சனத்துக்கு மட்டும் கிடைத்த பரிசா அல்லது விமர்சனத் தலைப்புக்கும் *(புலம்பெயர் பெண்களும் தொடர்புச் சாதனங்களும்)* சேர்த்துத்தானா என்பது! ஒருவேளை பெண்விடுதலைக்கு எதிராக கவி படிக்கும் பெண்களுடன் தேனொழுக உறவாடும் வானலையில் புக இவர்கள் யாரோ என்றுவிட்டுப் போயிருக்கும் ஆண்நோக்கு!

றஞ்சி (சுவிஸ்)

www.tamilarangam.net



(45ம் பக்கத் தொடர்ச்சி)

உனக்குரிய இடம் சிறைச்சாலை
நீ நடக்க விரும்பினாயென்றால்
கால்களை வெட்டி
உன் கைகளில் எடுத்துக் கொள்
சிரிக்க விரும்பினால்
கிணற்றில் தலைகீழாகத் தொங்கு
நீ சிந்திக்க வேண்டுமென விரும்பினால்
எல்லாக் கதவுகளையும் சாத்திக்கொள்
சாவியை வீசிவிடு
நீ அழவேண்டுமென விரும்பினால்
ஆற்றில் முழ்கிவிடு
வாழவேண்டுமென நீ விரும்பினாயெனில்
உன் கனவுக் குகையின் ஒட்டடையாகிவிடு
எல்லாவற்றையுமே முழுக்க நீ மறக்க
விரும்பினால்
நிறுத்தி மறுபடி சிந்திக்க பழகு
நீ முதலில் கற்றுக்கொண்ட
அரிச்சுவடியிலிருந்து
தொடங்கு இப்போது.

என்று பெண்களை தட்டியெழுப்புகிறார். இவ் ஆணாதிக்க சமூகத்தின் பிடியிலிருந்து விடுபட சிந்திக்கக் கோருகிறார்.

அடுத்து சிவரமணியின் கவிதையிலிருந்து,

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும் போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக் கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்
எனக்கு
பகலாய் உருவமைக்கப்பட்ட அழகிய இரவு
கனவாய் உள்ளது.

www.tamilarangam.net

சூழலின் கைதியாக்கப்பட்டுவிட்ட மனித ஜிவியின்பால் நின்று, அர்த்தமுள்ள ஒரு மனிதப் பிறவியாக வாழும் முயற்சியில் இறங்குகிறார். விரிந்த தளத்தில் சிந்தனை கொள்கிறார்.

இக் கவிதைத் தொகுதியில் பெண்கள் தங்களது கவிதைகளை உணர்வு ரீதியாக படைத்துள்ளார்கள். பல கவிதைகளில் படிமங்கள், அழகான மொழியாளுகை வெளிப்படுகின்றன. நியதியாக்கப்பட்டுவிட்ட பெண்களின் வாழ்க்கையை இந்தக் கவிஞைகளின் கவிதைகள் கேள்விகேட்கின்றன.

தமிழில் பெண்கள் எழுத்தியக்கம் பற்றிப் பலர் அக்கறை கொள்வதில்லை. பெண்களின் அனுபவங்களும் சிந்தனைகளும் அவற்றின் வெளிப்பாடுகளும் கூட குறுக்கப்பட்டு விடுவதால் பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு பல பெண்கள் தயக்கம் காட்டுகிறாகள். அந்த ரீதியில் இப்படியான படைப்புக்களை மொழிபெயர்ப்பதால் பெண்களின் உணர்வுகளில் ஒரு சிறு அதிர்வையாவது ஏற்படுத்த முடியும். அத்தோடு பெண்களின் உலகை அதன் உயிர்ப்பை உணர்ந்து கொள்ளாத வரையில் பெண்நிலையிலான படைப்புகளை புரிந்து கொள்ளவும் முடியாது. இது ஆண்நோக்கில் உருவகிக்கப்பட்டுள்ள பெண்ணின் உலகினின்றும் வேறானது. இந்த வகையில் பெண்களின் ஆக்கங்கள் தனித்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

ஜமுனா ராஜேந்திரன் இவ் 22 ஆசியப் பெண்களின் கவிதைகளை தேடி, தொகுத்து மொழிபெயர்த்துள்ளமை இந்த நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்று; வரவேற்கத்தக்கது.

வெளியீடு

EXIL, 27 Rue Jean moulin, 92400 Courbevoie, France

**எமை எட்டிய எழுத்துலக புதிய வரவுகள்**

**யுத்தத்தைத் தின்போம்.**
பிரதீபா தில்லைநாதன்
திருமாவளவன்
சக்கரவர்த்தி
அருவி வெளியீட்டகம்.
75 Brimley road
Scarborough. oN
M 1M 3H7

**நிஷ்டை**
க.கலாமோகன்
எக்ஸில் வெளியீடு
94 Rue de La Chapelle
75018 Paris

**புதிய சமதர்மம்**
14கியூ வீதி
கொழும்பு 02
தொலைபேசி 430621,
தொலைநகல் 334822

**சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும்**
விடியல் பதிப்பகம்
கோவை 641015, தமிழ்நாடு

**அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்**
ஒரு சோசலிச பெண்ணியலாளரின் கடிதம்
தமிழாக்கம்: எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா
விடியல் பதிப்பகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பதிலற்ற பத்து ஆண்டுகள்

மண்ணை, மனித நேயத்தை நேசித்த, அப்பாவித் தமிழ் மக்களது நிச்சயமற்ற நிலைகுறித்துக் குரல் கொடுத்த ராஜினி திரணகம மறைந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. யாழ் பல்கலைக் கழகத்தில் உடற்கூற்றியல் வரலாற்று விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர் வேலைமுடிந்து தமது வீடு திரும்பும் வழியில் கொலைசெய்யப்பட்டார்.

| ஆண்டுகள் | ராஜினி திரணகம | பதில் |
|---|---|---|
| 10 | -நினைவு அஞ்சலி- | 0 |

கொழும்பு வைத்தியக் கல்லூரியின் மாணவராக இருந்தபோதே மாணவர் இயக்க செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டவர். இலங்கையில் இனமுரண்பாடுகள் கூர்மையடைந்த நிலையில் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக செயற்பட ஆரம்பித்தார். 80களின் ஆரம்பத்தில் மேற்பட்டப் படிப்புக்காக இங்கிலாந்திற்கு வந்த இவர் பட்டப் படிப்பு முடிவடைந்ததும் இலங்கை திரும்பினார். யாழ்ப்பாணத்தில் முதலில் இலங்கை இராணுவத்தினரும் பின்பு இந்திய அமைதிப்படையினரும் நிலைகொண்டிருந்த வேளை அது. ஈழப்போராட்டம் பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களும் நிலவிய வேளையில் அவர் தமிழ் மக்களது நிச்சயமற்ற நிலைமைக்காக குரல் கொடுத்தார்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) எனும் அமைப்பை தனது சக ஆசிரியர்களுடன் சேர்ந்து நிறுவினார். தமது இரு சக ஆசிரியர்களுடன் இணைந்து 'முறிந்த பனைமரம்' என்ற நூலை எழுதினார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களை பல தகவல்களினூடு ஆவணப்படுத்தினார். மனித உரிமை மீறல்கள் இலங்கை இராணுவத்தினரால் மட்டு மின்றி ஈழப்போராட்டத்தில் ஈடுபட்ட தீவிரவாத தமிழ் இயக்கங்களால் மீறப் பட்டமை பற்றியும் அந் நூல் எடுத்துக் கூறியது.



ராஜினி கொல்லப்பட்டு பத்தாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. யாழ் பல்கலைக் கழகத்தில் உடற்கூற்றியல் விரிவுரையாளர் பதவி இன்னமும் நிரப்பப்படாமல் இருக்கின்றது.

அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த இரு புதல்வியரது ஏக்கமும் இழப்பும் கூட நிரப்பப்பட முடியாமலே நெஞ்சில் அறையும் உண்மையாக எம்முன்!

**சயந்தா, நோர்வே**

www.tamilarangam.net

(2ம் பக்கத் தொடர்ச்சி)

'புது உலகம் எமை நோக்கி'பற்றி நாம்

சக்தியின் முதல் வெளியீடான புது உலகம் எமை நோக்கி சிறுகதை தொகுதியில் ஏற்பட்ட தவறுகள் சிலவற்றை நாம் வாசகர்களுக்கும் தெரிவிக்கவேண்டும்.

புலம்பெயர் சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பாக இருந்தபோதிலும் நாம் முன்னுரையில் குறிப்பிட்டது போல பல பெண்களின் சிறுகதைகள் இத் தொகுப்புக்குள் அடங்கவில்லை என்பதையிட்டு வருத்தம் தெரிவித்திருந்தோம். இருந்தபோதிலும் இச் சிறுகதைத் தொகுதியில் நாம் பாரபட்சமாக நடந்து கொண்டதாகவும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். உண்மையிலே தரத்தின் அடிப்படையிப் சிறுகதைகளைத் தெரிவு செய்யவில்லை என்பதுடன், மிகவும் குறுகிய காலத்தில் மிகச் சிலரது உளசுத்தியுடனான உழைப்பின் விளைவாகவே இச் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அத்தோடு எமக்கு எல்லாப் பெண்களினது சிறுகதைகளையும் சேகரிப்பதில் பல இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

எனவே எதிர்காலத்தில் இயன்றவரை இத் தவறுகளை தவிர்த்துக் கொள்ள முயற்சிக்கிறோம். காலவாரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை என்ற விமர்சனமும் உண்டு. நோர்வேயில் நீண்டகாலமாக வெளிவரும் சக்தி தமக்கென ஒரு வாசகர் வட்டத்தையோ அல்லது விமர்சகர் அரங்கையோ நோர்வேயிலும் சரி மற்றைய நாடுகளிலும் சரி உருவாக்கத் தவறியுள்ளது என்ற கருத்தும் எம்மை வந்தடைந்துள்ளது.

இந்திய எழுத்தாளரான லக்சுமி கண்ணன் என்பவர் காவேரி என்ற பெயரில் எழுதிய 'நீ யும் ஒரு சிமோன்தி பூ வா போல' என்ற சிறுகதை நோர்வே (புலம்பெயர் நாடு) என கருதப்பட்டு இச் சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. இதனால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

இன்னமும் மலை ஏறும் முயற்சியில் நாம்.

மீண்டும் இன்னுமொரு வெளியீட்டில் தவறுகள் களைந்து மீண்டும் புதிய வெளியீடு ஒன்றிலும் அடுத்த நூற்றாண்டின் சக்தியிலும் சந்திப்போம்.

ஆ-ர் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

வாசகர்களிடமிருந்து
ஆக்கங்களையும்
விமர்சனங்களையும்
எதிர்பார்ப்புக்கு
உட்படுத்திக்
காத்திருக்கிறது
சக்தி

தொடர்புகட்கு

SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

சந்தா 100 குரோனர்
(தபாற்செலவு உட்பட)
இலங்கை, இந்தியா இலவசம்
POST KONTO - 05330973872

புத்தக வடிவமைப்பு
ரவி(சுவிஸ்)
முன்அட்டை ஓவியம்
*Valda Gillies*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்